விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 19 செவ்வாய்க்கிழமை (05.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 351

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/- மட்டுமே


# உள்ளூராட்சி தேர்தலை விரைவாக நடத்துக

## பப்ரல் அமைப்பால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு தாக்கல்

**(கொழும்பு) காலம் தாழ்த்தி செல்லும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான உத்தரவை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கக்கோரி பப்ரல் அமைப்பினால் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

இந்த மனு உயர் நீதிமன்றால் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நீதியரசர்கள் ஈவா வனசுந்தர, சிசிர டி ஆப்றூ மற்றும் மலல்கொட ஆகிய மூவர் கொண்ட அமர்வு முன்னிலையிலேயே மனு விசாரணைக்கு வந்தது.

தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை அரசு விடுத்துள்ள போதும் அதனை தாமதப்படுத்துவதற்காக பல தரப்பினர் தயாராகி வருகின்றனர். உள்ளூ 23☛



## பணமோசடி தொடர்பில் யாழில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வாடகைக்கு கார்களை வழங்குவதாகக் கூறி பல இலட்சம் ரூபாய பணத்தை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை நேற்று கைது செய்துள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர். 24☛

## சு.க அரசிலிருந்து வெளியேறாது!

### மனோ கணேசன்

(கொழும்பு)

நல்லாட்சியை கவிழ்த்து காட்டாட்சியை மீண்டும் கொண்டு வருவதற்கு சிலர் திட்டமிட்டு செயற்படுவதாக தேசிய கலந்துரை 23☛

## மேல்நீதிமன்ற நீதிபதிகள் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் மேல்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 75 பேரிலிருந்து 110 பேராக அதிகரிக்க நீதித்துறைச் சட்டத்தில் அரசு திருத்தம் செய்துள்ளது.

நீதித்துறைச் சட்டத்தின் 23☛

## யாழில் உள்ள தனியார் நிறுவனத்தில் 37 இலட்சம் ரூபாய் பணம் திருட்டு

### சிசிரிவி கமராவும் திருடர்களால் கொண்டு செல்லப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் பல இலட்சம் ரூபாய் பணம் திருட்டுப்போனதை அடுத்து அந்த நிறுவனத்தில் பணியாற்றிய ஊழியர்கள் அனைவரும் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்ட சம்பவம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் றக்கா வீதியில் அமைந்துள்ள தனியார் 23☛

## திடீர் சுகவீனம் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

பிறந்து பதினொரு நாட்களேயான குழந்தை ஒன்று திடீர் சுகவீனத்தால் நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளது.

புதுக்குடியிருப்பு கைவேலியை சேர்ந்த சிவானந்தன் வவிசன் என்ற குழந்தையே மேற்படி உயிரிழந்துள்ளது .

குழந்தையில் பல்முரசு 23☛

## மீசாலையில் வாள்வெட்டு இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மீசாலை பகுதியில் இனந்தெரியாத கும்பல் ஒன்று இளைஞர் ஒருவர் மீது வாள்களால சரமாரியாக வெட்டி விட்டுத் தப்பித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று 23☛

## பெப்.17 ஆம் திகதியோ அதற்கு முன்னரோ தேர்தல் நடைபெறும்

### தேர்தல் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய அறிவிப்பு 3-ம் பக்.

## கொக்குவில் எரிபொருள் நிலையத்தின் சேவை வழமைக்கு திரும்பியது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் உள்ள எரிபொருள் நிலையத்தில் டீசலில் மழை நீர் கலந்த விவகாரம் சீர் செய்யப்பட்டு குறித்த எரிபொருள் நிலையத்தின் சேவை வழமைக்குத் திரும்பியுள்ளது.

எரிபொருள் தாங்கி அமைக்கப்பட்ட இடத்தில் ஏற்பட்ட சிறு தவறே மழைநீர் கலக்கக் காரண 23☛

## தகுதியுள்ள உதவி ஆசிரியர்கள் சேவைக்கு உள்வாங்கப்படுவர்

### கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம்

(கொழும்பு)

தகுதியுள்ள அனைத்து உதவி ஆசிரியர்களும் இலங்கை ஆசிரியர் சேவையின் 03-1 தரத்திற்கு உள்வாங்கப்படுவார்கள் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் நேற்று திங்கட்கிழமை கலந்து 23☛



## பிரபாகரனிடம் மண்டியிடாத நான் நல்லாட்சி அரசிடம் மண்டியிடேன்

### மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

இலங்கையின் சமகால அரசாங்கத்திடம் மண்டியிடப் போவதில்லை என மகிந்த ராஜ 23☛

## கரையோரப் பிரதேசங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கும்

### கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மறுஅறிவித்தல் வரை எவரும் கடலுக்குச் செல்லவேண்டாமென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக இன்று 5-ஆம் திகதி தொடக்கம் மறுஅறிவித்தல் வரை மீனவர்கள் எவரும் கடலுக்குச் செல்ல வேண்டாமென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, வங்காள விரிகுடா மற்றும் நாட்டை அண்டியுள்ள கடல பகுதிகளில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் இன்று தொடக்கம் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படும்.

பொத்துவிலிலிருந்து 24☛

## உள்ளூராட்சி எல்லை நிர்ணய வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக

### அடிப்படை உரிமை மனு தாக்கல்

(கொழும்பு)

உள்ளூராட்சி எல்லை நிர்ணய வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக அம்பகமுவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் விதானக மகே ஹெலப்ரிய நந்தராஜா அடிப்படை உரிமை மனு ஒன்றினைத் தாக்கல் செய்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவித்தல் அம்பகமுவ பிரதேச சபையினை பகுதிகளாக பிரிப்பதாகவும் அதன் காரணமாக தனது மற்றும் பிரதேச மக்களினது அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் குறித்த மனுவில் குறிப்பிட்டுள்ளார். 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஓட்டோ சாரதிகள் மீது யாழ்.பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாண நகரில் பதிவு செய்யப்படா மல் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டி களால் அதிக கட்டணம் அறவிடப்படுவது டன், கலாசார சீரழிவுகளும் இடம்பெறுகின் றன என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய த்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பதிவு செய்து யாழ்ப்பாண நகரில் சேவை யில் ஈடுபடும் முச்சக்கர வண்டிச் சாரதிகளே நேற்று இந்த முறைப்பாட்டை வழங்கினர்.

யாழ்ப்பாண மாநகர சபையில் பதிவு செய்த சுமார் 900 முச்சக்கர வண்டிகள் யாழ்ப்பாண நகரின் மத்தியிலுள்ள தரிப்பிடங்களிலிருந்து சேவையில் ஈடுபடுகின்றன.

எனினும் யாழ்ப்பாண மாநகர சபை யிலோ அல்லது முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கத்திலோ பதிவு செய்யாமல் 20 பேர் வரையில் யாழ்ப்பாண நகரிலுள்ள தரிப்பிட ங்களிலிருந்து சேவையில் ஈடுபடுகின்றனர். அவர்கள் அதிகரித்த கட்டணத்தை வாடகை க்கு அமர்த்தியோரிடம் அறவிடுகின்றனர்.

அத்துடன், பேருந்துகளில் வரும் பெண் களை ஏற்றி ஆட்கள் நடமாட்டமற்ற பகுதிகளு க்கு அழைத்துச் செல்கின்றனர். அவர்களால் பாதிக்கப்பட்ட சிலர் முச்சக்கர வண்டிகள் சாரதிகள் சங்கத்தின் மீது பழிபோடுகின்ற னர்.

இவ்வாறு அடாத்தாக சேவையில் ஈடு படும் முச்சக்கர வண்டிச் சாரதிகளிடம் தவறு களை நாம் தட்டிக்கேட்டால் அவர்கள் மிரட்டு கிறார்கள்.

அவர்களின் அடாத்துக்கள் தொடர்பில் பல முறை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் வழங்கியும் பொலிஸார் நட வடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்தார்.(ம)

## யாழ்ப்பாணம் மாநகர சபை

**சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள், மலசல கூட பராமரிப்பு என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான**

### மீள் கேள்வி அறிவித்தல்-2018

யாழ். மாநகரசபையினால், 03.11.2017 திகதிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கும் கீழ் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கும் அமை வாகவும், இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2018ஆம் திகதி முதல் 30.06.2018ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப்படிவக்கட்டணம் -ரூபா 500.00 (VAT, NBT நீங்கலாக)
கேள்விப்படிவம் விநியோகித்தல் -05.12.2017 - 14.12.2017

கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் -15.12.2017 மு.ப 9.30 மணி வரை
கேள்விதிறத்தல் -15.12.2017 மு.ப. 10.00 மணிக்கு

**நிபந்தனைகள் :**

01.2018ஆம் ஆண்டுக்கான கேள்வியில் சித்தி பெற்று 2/3 பணம் செலுத்தாத கேள்விதாரர்கள் மீள்கேள்வியில் சித்தி பெறின் பரிசீலிக்கப்படமாட்டார்கள்.

**மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ. இல | விபரம் | கடை இல | மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக்க கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 96,075.00 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 104,139.00 |
| 3 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 466,378.50 |
| 4 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 75,600.00 |
| 5 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 421,470.00 |
| 6 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 256,095.00 |
| 7 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 46,099.46 |
| 8 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 165,375.00 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 416,351.25 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 160,177.50 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 132,221.25 |
| 12 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 189,000.00 |
| 13 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 118,177.50 |
| 14 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 118,125.00 |
| 15 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 99,824.81 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 110,872.13 |
| 17 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 182,175.00 |
| 18 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 29,805.30 |
| 19 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 5,756.82 |
| 20 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 297,407.25 |
| 21 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 280,486.50 |
| 22 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 279,903.49 |
| 23 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 213,018.75 |
| 24 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 249,637.50 |
| 25 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 278,570.25 |
| 26 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 203,789.25 |
| 27 | முஸ்லீம் கல்லூரி வீதி ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 132,448.05 |
| 28 | பெரியகடை மரக்கறிச் சந்தை | | 10,000.00 | 630,135.00 |
| 29 | குருநகர் மீன் சந்தை | | 10,000.00 | 1,161,588.75 |
| 30 | செங்குந்தா சந்தை (01.01.2018 -31.03.2018) | | 10,000.00 | 375,000.00 |
| 31 | பாசையூர் மீன் சந்தை | | 2,000.00 | 169,575.00 |
| 32 | சுப்பிரமணியம் பூங்கா வளாக த்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 32,767.88 |
| 33 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 76,383.27 |
| 34 | புங்கன் குளம் உள்ளூர் உணவு உற்பத்திகளின் அறிமுகச் சந்தை | | 2,000.00 | 4,051.09 |
| 35 | இந்து விடுதிக்கு தெற்குப் பக்கமாக உள்ள வாகனதரிப்பிட பாதுகாப்பு நிலையம் | | 1,000.00 | 29,925.00 |
| 36 | பொது மலசல கூடங்களை சுத்தம் செய்து பராமரிக்கும் சேவை | | 2,000.00 | 74,812.50 |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
05.12.2017.

**இ.த.ஜெயசீலன்,**
ஆணையாளர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை.

(சி-590)





உங்கள் அன்புச் செல்வங்களின் மெதுமையான சருமத்திற்கேற்ப அதி உயர் உறிஞ்சும் திறனுடன்

1's -26.00 விலையில் 4's, 10's, 20's, 30's,40' & 60's - Small, Medium, Large & Extra Large

விநியோகஸ்தர் :
வனிக்கா சேஜிக்கல்ஸ்
203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Mob : 077 442 2367 Tel : 021 222 0077
CDDA Approved, ISO 9001

(சி-579)


## மரண அறிவித்தல்கள்

### பூபாலசிங்கம் செல்வராசா



யாழ்.கச்சாய் அல்லாரையினை பிறப்பிடமாகவும் செம்பியன்பற்றை வசிப்பிடமாகவும் துன்னாலை கிழக்கு தாமரை குளத்தடியை தற்காலிக வதி விடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் செல்வராசா 02.12.2017 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூபாலசிங் கம்-விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மகனும், மல்லிகாதேவியின் அன்புக் கண வரும், சந்திராவின் அன்புச் சகோதரனும், காண்டீபன் (லண்டன்), தர்சா (கனடா), நிஷாந்தன் (மு/அம்பலபெருமாள்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), நிறோ (லண்டன்) ஆகியோரின் அன்பு தந்தையும், சௌமியா, சசிகுமார், கோகுலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்விகா, அனன்யா, ஆருஷ் ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.12.2017) செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துன்னாலை கியான்காடு இந்து மயானத் திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு:-
தர்சா (மகள்-கனடா) 0016478734395
நிஷாந்தன் (மகன்-இலங்கை)-0094776818947
நிறோ (மகள்-லண்டன்)-00447450835516

துன்னாலை
கிழக்கு,
கரவெட்டி.

(சி-593)

### திருமதி பரராசசிங்கம் சாரதாதேவி

ஏழாலை வடக்கு ஊரங்குணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரராசசிங்கம் சாரதா தேவி நேற்று 04.12.2017 திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னை நாள் கிராமசேவை உத்தியோகத்தர் பரராச சிங்கத்தின் பாசமிகு அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் நாளை 06.12.2017 புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அளவெட்டி யில் உள்ள அவரது மகனது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக ஏழாலை உசத்தியோடை இந்து மயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



தகவல்:-
குடும்பத்தினர்

ஏழாலை வடக்கு,
ஊரங்குணை

(சி-595)

## தமிழ்க் கூட்டமைப்புடன் இரகசிய ஒப்பந்தம்

# ஜனாதிபதியும் பிரதமரும் நீதிமன்றில் ஆஜராகவில்லை

# அவுஸ்திரேலியா செல்ல திஸ்ஸவுக்கு நேற்று அனுமதி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை மூன்றாவது முறையாகவும் ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

வழக்கின் சாட்சியாளர்களான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நேற்றும் நீதிமன்றத்திற்கு வராமையே இதற்குக் காரணம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பொது வேட்பாளராக களமிறங்கிய மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடையில் இரகசிய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளதாக, போலி ஆவணங்களை வெளியிட்டமையால், இனங்களுக்கு இடையிலான நல்லுறவை பாதிக்கும் வகையில் செயற்பட்டதாக, திஸ்ஸ அத்த நாயக்கவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



இதில், மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் சாட்சியாளர்களாக பெயரிடப்பட்டுள்ளனர்.

முன்னதாக இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாமையால், குறித்த வழக்கு இரு முறை ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, மைத்திரி மற்றும் ரணில் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதம் இடம்பெறுவதால் தனது கட்சிக்காரர்களால் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்க முடியவில்லை எனக் கூறியுள்ளார்.

எனவே, இதன்பொருட்டு பிறிதொரு தினத்தை வழங்குமாறும் அவர் கோரியுள்ளார்.

விடயங்களை ஆராய்ந்த நீதிமன்றம் வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

அத்துடன், அன்றைய தினம் மைத்திரி மற்றும் ரணிலை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இம் மாதம் 10ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை அவுஸ்திரேலியா செல்ல திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு அனுமதி யளித்தும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (இ-7)

## மங்களவின் பட்ஜெட்டிற்கு ஜனாதிபதி பாராட்டு

(கொழும்பு)

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பித்துள்ள வரவு- செலவுத் திட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெறும் வரவு-செலவுத் திட்டத்தின் மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று கலந்து கொண்டு ஜனாதிபதி கருத்துத் தெரிவித்தார்.

இம்முறை வரவு-செலவுத் திட்டம் நிலைபேறான அபிவிருத்தியின் இலக்கை அடைவதற்கு உந்துசக்தியாக அமையும் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் பதவியேற்ற மூன்று ஆண்டுகளில் இலவச சுகாதார சேவையையும், இலவச கல்வியையும் உறுதிப்படுத்த சிறப்பான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

இந்த நாட்டின் இலவச சுதந்திர சேவையையும், இலவச கல்வியையும் உறுதிப்படுத்த முடிந்துள்ளதுடன் வீடுகளை பெற்றுக் கொடுப்பதற்கும் கடந்த 3 ஆண்டுகளில் தற்போதைய அரசாங்கம் விசேட நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஆயிரத்து 200 கோடி ரூபாய் செலவில் பொலநறுவையில் நிர்மாணிக்கப் பட்டுள்ள சிறுநீரக நோயாளர்களுக்கான வைத்தியசாலை நாளை மறுதினம் வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் சுகாதார சேவையை சர்வதேசம் பாராட்டியிருப்பதாகவும் ஜனாதிபதி இதன் போது சுட்டிக்காட்டினார். (இ-7)

# பெப். 17ம் திகதியோ அதற்கு முன்னரோ தேர்தல் நடைபெறும்

## மகிந்த தேசப்பிரிய அறிவிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ நடத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் நடைபெறும் தினம் ஞாயிறு அல்லது அரச விடுமுறையாக அல்லாத ஒரு தினத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

97 சபைகளில் இருந்த அச்சு பிழைகள் காரணமாக மீண்டும் குறித்த சபைகளை வர்த்தமானியில் உள்ளிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

அவை கடந்த 2 ஆம் திகதி ஜனாதிபதியின் கையொப்பத்துடன் மீண்டும் வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டன.

அதன்படி இன்றைய தினம் வரை 248 உள்ளூராட்சி சபைகளில் வேட்பு மனுக்களை வெளியிடுவதற்கு எந்தவித பாதிப்பும் இல்லை என அவர் தெரிவித்தார்.

வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தேர்தலுக்கு 75 நாட்கள் உள்ள நிலையில் அந்த காலப்பகுதியில் பரீட்சைகளில் தோற்றுபவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் செயற்படுமாறும், வாகன பேரணி மற்றும் மக்கள் பேரணிகளை நடத்த அனுமதியில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## மகிந்தவை சிலர் பிழையாக வழிநடத்துகின்றனர்-ஜோன்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சிலர் பிழையாக வழிநடத்துகின்றார்கள் என தொழில் உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

மகிந்தவுடன் இருக்கும் ஒரு சில நபர்களே அவர் பிழையாக கருத்து வெளியிடக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சி மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் மகிந்தவிற்கு தெளிவான சிந்தனை உண்டு என அவர் தெரிவித்தார்.



கட்சியை பாதுகாப்பதற்கு அனைவரும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## பியர் விலைக்குறைப்பை வரவேற்கின்றேன்

# தெற்காசியாவின் சுற்றுலா மத்திய நிலையமாக இலங்கை

## துறைசார் அமைச்சர் அமரதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

தெற்காசியாவின் பிரபலமான சுற்றுலா மத்திய நிலையமாக இலங்கையை ஏற்படுத்துவதே எமது எதிர்பார்ப்பு. அதற்கான அடிப்படை தேவைகள் தற்போது பூரணப்படுத்தப் பட்டு வருகின்றன.

அத்துடன் பியருக்கான வரி குறைப்பு சுற்றுலா பயணிகளுக்கு பாரிய இலாபமாகும். யார் என்ன சொன்னாலும் பியருக்கான வரி குறைப்பை வரவேற்கின்றேன் என சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

சுற்றுலா அபிவிருத்தி அமைச்சின் அடுத்தவருட வேலைத்திட்டம் தொடர்பாக ஊடகங்களை தெளிவுபடுத்தும் செய்தியாளர் சந்திப்பு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## வாக்காளர்களே பொறுப்பு

(கொழும்பு)

ஊழல்வாதிகளை அரசியலில் தேர்வு செய்யும் பொறுப்பை வாக்காளர்களே ஏற்க வேண்டும் என, மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கத் தலைவர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

தெஹியத்தகண்டி பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு காலநிலையால் எவ்வித தடையுமில்லை

(கொழும்பு)

க.பொ.த. சாதாரண தர பரீட்சையை நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டி.சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலையால் எதுவித தடைகளும் ஏற்படவில்லை என்றும் பரீட்சார்த்திகள் அனைவருக்கும் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் சேதமடைந்திருந்தால் புதிய அனுமதி அட்டைகள் வழங்கப்படும். இன்று நள்ளிரவு முதல் மீட்டல் வகுப்புக்கள் அனைத்தும் தடை செய்யப்படும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

## இலங்கையில் ஏற்படவிருந்த அழிவுகளை குறைத்துக்கொள்ள முடிந்தது-அரசாங்கம்

(கொழும்பு)

சீரற்ற காலநிலை தொடர்பில் மக்கள் காலநிலை அவதான நிலையத்தால் எச்சரிக்கப்பட்டு வந்ததால் இலங்கையில் ஏற்படவிருந்த அழிவுகளை குறைத்துக்கொள்ள முடிந்ததாக அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை ஏற்பட்டிருந்த சீரற்ற காலநிலை தொடர்பில் காலநிலை அவதான நிலையம் முன்னரே பொதுமக்களை அறிவுறுத்தி வந்தது. அத்துடன், கடற்றொழிலாளர்களையும், கடற்படையினரையும் அவதானமாக செயற்படுமாறு எச்சரித்திருந்தது. இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக நாட்டில் ஏற்படவிருந்த அழிவுகளைக் குறைத்துக் கொள்ள முடிந்தது.

அத்துடன், தற்போது வானிலை அவதான நிலையத்திற்கு தேவையான நவீன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மத்யூஸ், சண்டிமலின் வியக்கத்தக்க இணைப்பாட்டத்தின் பின்னர் அஸ்வினின் எழுச்சியால் டில்லி டெஸ்டில் இந்தியா முன்னிலை

அணித் தலைவர் சண்டிமல், மத்யூஸின் வியக் கத்தக்க இணைப்பாட்டத் தினை கண்ணுற்று கதி கலங்கிய இந்திய அணிக்கு, 'விடி வெள்ளியாக' வந்தார் அஷ் வின். இவர் முன்னணி விக்கெட்டுக்களை வீழ்த்தி கைகொடுக்க, இந்திய அணி யின் ஆதிக்கம் தொடர்கிறது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளின் முடிவில் இந்தியா 1-0 என முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இரு அணி களுக்கும் இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட், டில்லியில் உள்ள பெரோ ஷா கோட்லா மைதா னத்தில் நடக்கிறது. முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 7 விக்கெட்டுக்கு 536 ஓட்டங்கள் எடுத்து 'டிக்ளேர்' செய்தது. இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில், முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட் டங்கள் எடுத்திருந்தது. மத்யூஸ் (57), அணித் தலைவர் சண்டிமல் (25) ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

### மத்யூஸ் நம்பிக்கை

நேற்று, மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. முதல் இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கையின் மத்யூஸ், சண்டிமல் ஜோடி, இந்திய பந்து வீச்சை எளிதாக சமாளித்து, ஓட்டங் கள் சேர்த்தது. ரோகித் சர்மா பிடி வாய்ப்பை நழுவவிட்டதால், 98 ஓட் டங்களில் கண்டம் தப்பிய மத்யூஸ், இஷாந்த் பந்தை பவுண்டரிக்கு விரட்டி, தனது 8ஆவது டெஸ்ட் சத த்தை பதிவு செய்தார்.

இவருக்கு ஒத்துழைப்பு தந்த சண்டிமல், ஷமி வீசிய 83ஆவது ஓவரில் 2 பவுண்டரி விளாசினார். இவர்களை பிரிக்க இந்திய பந்துவீச் சாளர்கள் எடுத்த முயற்சிக்கு எவ்வித பலனும் கிடைக்கவில்லை. நேற்று மட் டும் இவர்கள் இருவரும் இணைந்து 53 ஓவர்கள் துடுப்பாட்டம் செய்தனர்.

இந்நிலையில், இந்திய அணி க்கு விடிவெள்ளியாக வந்தார் அஷ் வின். இவரது 'சுழலில்' மத்யூஸ் (111) சிக்க, இந்திய அணி யினருக்கு நிம்மதி பிறந்தது.


### சண்டிமல் சதம்

அடுத்து வந்த சமரவிக்ரம, ஜடேஜா வீசிய 103ஆவது ஓவ ரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி அடித் தார். அணித் தலை வர் சண்டிமல், டெஸ்ட் அரங்கில் 10வது சதமடித்தார். தொடர் ந்து அசத்திய சண்டி மல், ஜடேஜா பந்தை பவு ண்டரிக்கு விர ட்ட, இலங்கை அணி 300 ஓட்டங்களை எட்டியது. இஷாந்த் பந்தில், விக்கெட் காப்பாளர் விரிதி மன் சகாவின் துடிப்பான பிடியெடுப்பின் மூலம் சமர விக்ரம (33) ஆட்டமிழந்தார்.

### அஷ்வின் அபாரம்

அடுத்து வந்த ரோஷன் சில்வா (0), டிக்வெல (0) இருவரும் அஷ்வினிடம் சரணடைந்தனர். ஷமி 'வேகத்தில்' லக்மல் (5) வெளி யேறினார். பின், ஜடேஜா 'சுழலில்' கமகே (1) சிக்கி னார். மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், முதல் இன் னிங்ஸில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 356 ஓட்டங்கள் எடுத் திருந்தது. சண்டிமல் (147), சண்டகன் (0) ஆட்டமிழக் காமல் இருந்தனர். இந்தியா சார்பில் அஷ்வின் 3, ஷமி, இஷாந்த், ஜடேஜா தலா 2 விக்கெட் கைப்பற்றினர்.

தற்போது 180 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ள இந் திய அணி, இலங்கை அணியின் ஒரு விக் கெட்டை விரைவாக வீழ்த்தி, இரண் டாவது இன்னிங்சில் வேக மாக ஓட்டங்கள் சேர்க் கும் பட்சத்தில் வெற்றிக்கு முயற் சிக்கலாம்.



## உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் - 2018

### அஞ்சல் மூலம் வாக்களிக்க எதிர்பார்க்கின்ற அரசாங்க அலுவலர்கள், பாதுகாப்பு அலுவலர்களுக்கான அறிவித்தல்

01. 2017 திசெம்பர் மாதம் 04ஆந் தேதி வேட்புமனுக் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட்ட 248 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு தகைமை பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கையேற்கும் கால எல்லை 2017 திசெம்பர் 22ஆந் தேதி நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடையவுள்ளது. அத் திகதி எவ்விதத்திலும் மீண்டும் நீடிக்கப்படமாட்டாது.

02. இத்தேர்தலின்போது குறித்த உள்ளூராட் சி சபை அதிகார எல்லைக்குள் தேருநர்களாகப் பதவி செய்யப்பட் டுள்ளவர்களும், தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களுமான அனைத்து அரச அலுவலர்கள்/ ஊழியர்கள், அதிபர்கள்/ஆசிரியர்கள், அப்பிரதேசங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் அலுவலர்கள்/ ஊழியர்கள், தபால் திணைக்களத்தின் அலுவலர்கள்/ ஊழியர்கள், புகையிரத சேவையை நடாத்திச் செல்வதற்குத் தேவையான இன்றியமையாத புகையிரத திணைக்கள அலுவலர்கள்/ ஊழியர்கள் மற்றும் நாடெங்கிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முப்படைகளினதும் பொலிஸ் திணைக்களத்தினதும் நேரடி பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள சிவில் பாதுகாப்பு படையணியினதும் அங்கத்தினர்கள் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் தகைமைகளைப் பெறுவதோடு, அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற காலக்கெடு முடிவடையும் வரை காத்திராமல் உடனடியாக தமது விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்குமாறு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு தகைமையுள்ள அனைவரிடமும் தயவன்புடன் கோரப்படுகின்றது. மேலும் இத் தேர்தலின்போது அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கையில் அதற்கான தகவல்கள் 2017ஆம் ஆண்டின் உள்ளூர் அதிகார சபை தேருநர் இடாப்பிலிருந்து சரியாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்பது வலியுறுத்தப்படுகின்றது.

03. அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் அஞ்சல் வாக்கு விண்ணப்பப் படிவங்களை தனிப்பட்ட முறையில் பரிசீலித் துப் பார்த்து விண்ணப்பதாரரின் ஆளடையாளம் தொடர்பாக உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் அத் தாட்சிப்படுத்த வேண்டுமெனவும். அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் முடிந்தளவு விரைவில் குறித்த விண்ணப்பதாரி வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டுள்ள மாவட்டத்தின் தெரிவத்தாட் சி அலுவலருக்கு 2017 திசெம்பர் 22ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய தேர்தல் அலுவலகத்திற்கு கிடைக்கத் தக்கவாறு அனுப்பப்பட வேண்டுமெனவும், அத் திகதி மீண்டும் நீடிக்கப்படமாட்டாதெனவும் உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்களும் முறையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படுமெனவும், அனைத்து அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் தயவன்புடன் அறிவிக்கப் படுகின்றது. உரிய காலப்பகுதியின் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முந்திய தினத்தன்று விண்ணப் பப்படிவங்களை அஞ்சலில் சேர்ப்பதற்குப் பதிலாக தேர்தல் அலுவலகத்திற்கு நேரடியாக கொண்டுவந்து கையளித்தல் மிகப் பொருத்தமாக இருக்குமென்பதை தயவு செய்து கருத்தில் கொள்ளவும்.

04. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான உரிமையுள்ள அனைத்து அஞ்சல் வாக்காளர்களினதும் வசதி கருதி உள்ளூர் அதிகார சபைகளின் தேருநர் இடாப்புக்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

    1. மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள் (அனைத்து உள்ளூராட்சி சபைகளினதும் இடாப்புக்கள்.)
    2. பிரதேச செயலகங்கள் (அந்தந்த பிரதேச செயலக அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் இடாப்புக்கள்.)
    3. உள்ளூர் அதிகார சபை அலுவலகங்கள் (அந்தந்த உள்ளூர் அதிகார சபைகளின் இடாப்புக்கள்.)
    4. அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்கள் (அந்தந்த பிரிவுக்குரிய இடாப்புக்களின் பகுதிகள்.)
    5. பொது நிருவாக அமைச்சு, பொலிஸ் தலைமையகம், தொழிற் செயலகம், அஞ்சல் தலைமையகம், புகையிரத தலைமையகம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு, கல்வி அமைச்சு (இசுருபாய),
       பதிவாளர் நாயகத் திணைக்களம் (பத்தரமுல்லை), நகர அபிவிருத்தி அதிகார சபை (செத்சிறிபாய), ஆட்பதிவு திணைக்களம் (சுஹுருபாய) இவ்விடங்களின் அனைத்து உள்ளூராட்சி சபைகளினதும். இடாப்புக்கள் காட்சிப்படுத்தப்படும்.

05. மேலும் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளதில் (www.election.gov.lk) என்ற இணையத்தளத் திற்கு பிரவேசித்து தேருநர் இடாப்பு 2017" என்ற தலைப்புக்குள் பிரவேசித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தத்தம் தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் துணையோடு அஞ்சல் வாக்கு விண்ணப்பப்படிவங்களை நிரப்புவதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

06. பாதுகாப்பு படை முகாம்களில் பணியாற்றுகின்ற அப்படைகளுக்கான அங்கத்தினர்களின் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை நிரப்புவதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான விசேட நடை முறையொன்று அப்படைகளின் தளபதிகளோடு கலந்துரையாடி ஒழுங்கு செய்யப்படும்.

07. இதற்கு மேலதிகமாக தேருநர்கள் கூட்டமொன்றின் தகவல்கள் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களில் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் காட்டப்பட்டுள்ள அஞ்சல் வாக்குகளுக்கான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான படிவத்தை நிரப்பி தேர்தல் ஆணைக்குழுவின் 011-2868426 என்ற தொலைநகலுக்கோ (it@elections.gov.lk) என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைப்பதனூடாக அஞ்சல் வாக்காளர் களுக்கு உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய.
2017.12.05

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

(C-155)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அளப்பரிய கல்விப் பணியாற்றி இன்றைய தினம் ஓய்வுபெறும்

திருமதி
**இராஜினிதேவி சிவலிங்கம்**

(பிரதி அதிபர்- யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

அவர்களை வாழ்த்தி வணங்குகின்றோம்

பருத்தித்துறை வீதி,
நாவற்காடு,
அச்சுவேலி.

நா.மகேந்திரராசா
(அதிபர், யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) குடும்பத்தினர்

(1571)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**வணிகமாணி பட்டப்படிப்பு - 2014 (வெளிவாரி)**
**முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2017**

மேற்படி பரீட்சையானது 2017ம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் தங்களது பரீட்சை தொடர்பான நட வடிக்கைகளை முன்னெடுக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

| திகதி | விபரம் |
|---|---|
| 09.12.2017- 10.12.2017 | பரீட்சை விண்ணப்பப்படிவ விநியோகம் |
| 15.12.2017 | பரீட்சை விண்ணப்பப்படிவம் கையளிப்பதற்கான இறுதித் திகதி |

பதிவாளர்
04.12.2017

(C-590)



புத்தபெருமானின் சிறப்பினையும் பௌத்த மத மரபினையும் எடுத்துக்கூறும் ஸ்ரீ நாகவிகாரை மார்கழி மாத பெரஹரா நேற்று முன்தினம் யாழ்.நகரில் இடம்பெற்றது. இந்த மகா ஊர்வல உற்சவமானது நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அனைத்து மத கலாசாரங்களுடனும், யானையின் அலங்காரத்துடனும் இடம்பெற்றது. (படங்கள்:-பொ.சோபிகா)

# பரீட்சை அனுமதிப்பத்திரம் இதுவரை கிடைக்காத மாணவர்கள் அறிவியுங்கள்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் இதுவரை கிடைக்காத மாணவர்கள் மற்றும் அனுமதிப் பத்திரத்தில் ஏதாவது பிரச்சினைகள் இருப்பவர்கள் தாமதமின்றி அறிவிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. அவ்வாறு பிரச்சினைகள் இருப்பவர்கள் அது தொடர்பில் 1911 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளது.

அத்துடன் பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் பாடசாலை அதிபர்களுக்கும், தனியார் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் பரீட்சார்த்திகளின் தனிப்பட்ட முகவரிக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி.சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

இம்முறை கல்விப் பொதுத்தரா தர சாதாரண தரப்பரீட்சையில் 4 இலட்சத்து 29 ஆயிரத்து 493 பாடசாலை பரீட்சார்த்திகளும், 2 இலட்சத்து 59 ஆயிரத்து 80 தனியார் பரீட்சார்த்திகளுமாக மொத்தம் 6 இலட்சத்து 88 ஆயிரத்து 573 பேர் தோற்றவுள்ளனர். கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சைவநெறித் தேர்வு விடைத்தாள் மதிப்பீடு

சைவபரிபாலன சபையால் நடத்தப்பட்ட தரம் 2 முதல் 11 வரையான சைவ நெறி, தரம் 2 முதல் தரம் 8 வரையான தமிழ் மொழி பரீட்சை விடைத் தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் சைவபரிபாலன சபை மண்ட பத்தில் குழு முறையில் நடை பெறவுள்ளன. இப்பணிக்கு சைவநெறி, தமிழ்மொழி கற்பிக்கும் தகைமை பெற்றுள்ள ஆசிரி யர்களை உதவும்படி பரீட்சைச் செயலாளர் கேட்டுக் கொண் டுள்ளார். இப்பணி யில் ஈடுபட விரும்பும் ஆசிரியர்கள் தங் கள் பெயர், விபரங்களை பரீட் சைச் செயலாளர், சைவ பரிபாலனசபை, 66, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கடிதமூலம் அல் லது 021 222 7678 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத் தரலாம் என அறிவி க்கப்பட்டுள்ளது. (இ)


## வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை
## Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251



## தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கோர் முக்கிய தகவல்

வெளியாகியுள்ளது!

புகழ் வெளியீட்டு ஆசிரியர் L.விஜேந்திரனின்

* கணிதம் - தரம் 5 விலை : 500/=
* சுற்றாடல் - தரம் 5 விலை : 420/=

- அலகு ரீதியான தேர்ச்சி மைய விளக்கம்.
- தேர்ச்சிகளுக்கான பயிற்சிகள், அலகு முடிவில் அலகுப் பயிற்சி
- தெளிவான விடைகள்

**விசேட அம்சம்**

ஒவ்வொரு அலகு முடிவிலும் அவ்வலகு சார்பாக இறுதிப் பரீட்சை வினாத்தாள்களில் (Past Papers) வெளிவந்த வினாக்கள் தொகுப்பாக இணைக்கப்பட்டுள்ளன. இது தேவையான விடயங்களைத் தன்னம்பிக்கையுடன் கற்க உதவுவதுடன் தேவையற்ற விடயங் களைக் கற்பதையும் கற்பிப்பதையும் தவிர்க்க உதவும்.

தொடர்புகளுக்கு :-
Lanka Book Depot, Colombo.
T.P : 0773911998, 0112341942

புகழ் பப்ளிகேசன்,
யாழ்ப்பாணம்.
T.P: 0774118950

அனைத்து பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.


# இராசி பலன்

05.12.2017
கார்த்திகை 19, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
துதியை மாலை 5.56 மணிவரை
மிருகசீரிடம் காலை 6.57 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 5.18 மணிவரை
சுபநேரம் 10.46-12.16 மணிவரை
இராகுகாலம் 3.16-4.46 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் கேட்டை | | ராகு |
| கேது | | | |
| | சனி, சுக், சூரி, புத | குரு, செவ் | |

**மீனம்**
அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மேடம்**
உறவினர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சமாளிக்கும் நாள், போசன நன்மையுண்டு.

**இடபம்**
பொதுவாழ்வில் புகழ்கூடும், வியாபார விருத்தியுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**மிதுனம்**
ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், தேகநலனில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.

**கும்பம்**
பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**கடகம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றமுண்டு, சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், ஆரோக்கியம் சீராகும், சேமிப்பை அதிகாரிக்க முற்படுவீர்கள்.

**சிம்மம்**
இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையுண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**தனுசு**
நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்**
வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் வரலாம், திருடர் பயமுண்டு.

**துலாம்**
பயணங்களால் பலனுண்டு, தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**கன்னி**
புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான தகவல் வந்து சேரும், போசன சுகமுண்டு.

# ரூ.242 மில்லியன் செலவில் புதிய நீதிமன்ற கட்டடத்தொகுதி





(படங்கள் : உ.சாளின்)

(யாழ்ப்பபாணம்)

242 மில்லியன் ரூபாய் செலவில் யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் அமைக்கப்படவுள்ள திறந்த நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதிக்கான அடிக்கலை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் நேற்றுக் காலை நாட்டி வைத்தார்.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி ஜே.கஜநிதிபாலன், யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் சி.சதீஸ்தரன், யாழ்ப்பாணம் தொழில் நியாய சபையின் தலைவர் திருமதி தாரணி கணேசானந்தன், யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத் தலைவி, ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளர் திருமதி மீரா வடிவேற்கரசன், சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம் மற்றும் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் ஆகியவற்றின் திறந்த நீதிமன்றங்களுக்காகவே இந்தக் கட்டடத் தொகுதி அமைக்கப்படுகிறது.


தற்போதைய நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் திறந்த நீதிமன்றங்களுக்கு போதிய இடவசதி இல்லாமை குறித்து சுட்டிக்காட்டப்பட்டதனையடுத்து 2017ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் 242 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதில் மூன்று மாடிக் கட்டடத் தொகுதி நிலக்கீழ் அடித்தளத்துடன் அமைக்கப்படுகிறது.

அதில் இந்த ஆண்டு 100 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டது.

கட்டடத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மத்திய பொறியியல் (CECB) துணை நிறுவனத்தால் இந்தக் கட்டடத் தொகுதி அமைக்கப்படுகிறது. (இ-4)

# டெங்கு ஒழிப்பு தீவிரம்




(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் வரிசையில் இந்த ஆண்டும் நேற்று முன்தினம் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முழுக்கிராமத்தவர்களுக்கும் தங்கள் வீடுகளில் இருக்கும் டெங்கு நுளம்பு பெருக ஏதுவான பொருட்களைச் சேகரித்து பொதி செய்யுமாறு ஒலி பெருக்கி வாயிலாக அறிவித்தல் விடுத்து பின்னர் நேற்று முன்தினம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வலி.வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான வாகனத்தின் மூலம் சங்க உறுப்பினர்கள் வீடுகள் தோறும் சென்று அப்பொதிகளைச் சேகரித்து உரிய வகையில் அப்புறப்படுத்தினர்.

இதன்போது கிராம மக்கள் சங்க உறுப்பினர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியதோடு சிற்றுண்டி, குளிர் பானங்கள் வழங்கி ஆதரித்தனர். (இ-104)

# பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் த.செல்வகுமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-64)





# நமசிவாய வித்தியாலயத்தின் முப்பெரும் விழா நாளை

(யாழ்ப்பாணம்)

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் முப்பெரும் விழா நாளை புதன்கிழமை அதிபர் வி.சிவனேசன் தலைமையில் இடம்பெறும். இதில் காலை 8 மணியளவில் இடம்பெறும் கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் கலந்து கொள்வார். (இ-10)

# சனசமூக நிலையத்துக்கு பிளாஸ்ரிக் கதிரைகள்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு நவசக்தி சனசமூக நிலையத்துக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

சி.அகீபன் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 04 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு மேற்படி பிளாஸ்ரிக் கதிரைகளை சனசமூக நிலைய நிர்வாகத்தினரிடம் கையளித்தார்.


இந் நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினருடன், சனசமூக நிலைய நிர்வாகிகளான மதுசன், வசீகரன் மற்றும் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# 'சங்குகள் முழங்கின' விரிவுரை நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா வால் வாரந்தோறும் புதன் கிழமைகளில் ஸ்ரீமத் பகவத்கீதை விளக்கவுரை மாலை 5 மணி முதல் 6 மணி வரை, யாழ்.சின்மயா மிஷன், இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் என்னும் முகவரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் நாளை புதன்கிழமை (06/12/2017) ஸ்ரீமத் பகவத்கீதையின் முதலாம் அத்தியாயமாகிய "அர்ஜுன விஷாத யோகம்" பகுதியில் "சங்குகள் முழங்கின" என்ற தலைப்பில், விரிவுரை இடம்பெறவுள்ளது. ஆர்வலர்கள் அனைவரும் கலந்து பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். அனுமதி இலவசம். தொடர்புகளுக்கு- 021 222 3447 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)



திருக்கார்த்திகை திருநாளான நேற்று முன்தினம் யாழ்.கல்வியங்காடு சந்தியில் அமைந்துள்ள தமிழக முன்னாள் முதல்வரும் பிரபல நடிகருமான எம்.ஜி.இராமசந்திரனின் சிலைக்கு எம்.ஜி.ஆரின் நண்பரும் தீவிர இரசிகனுமான யாழ் .எம்.ஜி.ஆர். என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கம் மாலை அணிவித்து தீபம் ஏற்றி வழிபட்டார். (படம்:-உ.சாளின்)

# வடமாகாணக் கல்வியில் வீழ்ச்சிப் போக்கு உள்ளதா?

02



திருமதி
சசிகலா சிவநாதன்
(B.A Hons, Dip in Edu, M.Edu)
(S.L.T.S - I ,ஓய்வு நிலை உப அதிபர். யாழ். இந்து மகளிர் கல்லூரி)

**சேர்.பொன். இராமநாதன் நினைவுப் பேருரை- 2017 யா/ இராமநாதன் கல்லூரியில் 11.11.2017 அன்று இடம் பெற்றது. இதில் திருமதி. சசிகலா சிவநாதன் அவர்களால் வழங்கப்பட்ட நினைவுப் பேருரை இங்கு பிரசுரமாகின்றது.**

(நேற்றைய தொடர்ச்சி...)

ஒரு பிரதேசத்தின் கல்வி நிலையை மதிப்பிடும்போது அப்பிரதேசத்தின் கல்வி சார்ந்த கீழ்கட்டமைப்புக்களையும் கல்வி நிர்வாக நடவடிக்கைகளையும் அவற்றின் வினைத்திறனான செயற்பாட்டையும் கவனத்தில் கொள்வது ஏற்புடையது. அத்துடன் பாடசாலைக்கு சென்ற காலம் முதல் ஆரம்பக் கல்விக் காலம், இடைநிலைக் கல்விக் காலம், உயர்தர பாடசாலைக் கல்விக்காலம் வரையிலான சமூக அரசியற் சூழல் அதன் மத்தியில் மாணவர்களின் குடும்பச்சூழல் என்பனவும் கவனத்திற் கொள்ளப்படவேண்டியதொன்று. இலங்கையின் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரும் அதனால் ஏற்பட்ட சமூக மாற்றங்களும் இப்பகுதி மக்களின் வாழ்வாதார மாற்றங்களும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் இக்காலங்களில் நிகழாததொன்றாகும். வடக்கு, கிழக்கின் சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகள் 30 வருடங்களுக்கு மேல் வேறுபட்டதொன்றாக இருந்த சூழலில் வளர்ந்து வந்த மாணவர்களின் உளப்பாங்கும் கல்வி கற்பதற்கான வாய்புக்களும் ஒரே சீரானதாக இருப்பதற்கான வாய்ப்புகள் மிக மிக அரிது. பல பிள்ளைகள் கல்வி கற்பதற்கான வாய்ப்பையே இழந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் ஏனைய மாகாணங்களுடன் வடமாகாண மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை ஒப்பிட்டுத் தர வரிசைப்படுத்துவது பொருத்தமானதும் வினைத்திறன் ஆனதுமான மதிப்பீடாக இருக்கமாட்டாது. இருந்த போதும் அவ்வாறான மதிப்பீட்டை மேற்கொள்வோர் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிட்டு வடக்கு மாகாணம் மிகத் தாழந்து கடைசி நிலைக்கு தள்ளப்பட்டும் உள்ளது என்ற கருத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

## வடமாகாணமும் ஏனைய மாகாணங்களும்

க.பொ.த. சாதாரண பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் உயர்தர வகுப்பில் கல்விகற்கும் தகுதியுடைய பாடசாலை மாணவர்களை மட்டும் எடுத்துக்கொண்டு வட மாகாணத்தின் கல்விநிலையை ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிட்டு ஆராய்வது அவசியம் என்று மதிப்பீட்டாளர்கள் முன் வைக்கும் வாதத்தின் அடிப்படையில் பாடசாலை மாணவர்களில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்து க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்விகற்க தகுதியுடையோர் எத்தனை மாணவர்கள் என்பதை சதவீதமாக காட்டும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

இலங்கையின் 9 மாகாணங்களில் முதற்தடவையாக க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் உயர்தர வகுப்பில் கல்விகற்க தகுதியுடையோர் சதவீதங்களை ஒப்பிட்டு நோக்குகையில் வடமாகாணம் 2005 இல் 4ஆம் இடமும் 2006இல் 4ஆம் இடமும் 2007இல் 3ஆம் இடமும் 2008இல் 5ஆம் இடமும் 2009இல் 2ஆம் இடமும் 2010இல் 5ஆம் இடமும் 2011இல் 9ஆம் இடமும் 2012இல் 8ஆம் இடமும் 2013இல் 6ஆம் இடமும் 2014இல் 9ஆம் இடமும் 2015இல் 9ஆம் இடமும் 2016இல் 9ஆம் இடமும் பெற்றுள்ளது. கடைசி நான்கு வருடங்களையும் 2011ஆம் ஆண்டுத் தரவையும் அடிப்படையாகக் கொண்டும் வடமாகாணத்தின் கல்வி நிலை மிகத்தாழ்ந்த மட்டத்திற்கு சென்று விட்டது என்று கல்விச் சமூகம் கருத்துரைத்துள்ளது.

## பின்னடைவிற்கான காரணங்கள்

ஒரு பிரதேசத்தின் கல்விநிலை கீழ் மட்டத்திற்கு தள்ளப்படுவதற்கு காரணிகளாய் அமைந்த அக்கால சமூக அரசியல் பொருளாதார சூழ்நிலைகளை கருத்தில் எடுக்க வேண்டும். 2006 தொடக்கம் 2009 காலப் பகுதியில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னாரின் ஒருபகுதி, வவுனியாவின் ஒரு பகுதி, யாழ்ப்பாணத்தின் பளைப்பகுதி, என்பன முழுமையாக மூடப்பட்ட நிலையிலிருந்தன. இப் பகுதிகளில் உள்நாட்டுப்போர் அடிக்கடி நடந்ததால் மக்களும், மாணவர்களும், உள்ளூர் இடப்பெயர்வுக்கு உட்பட்டவர்களாகவும் கல்விச்சேவையை தொடர்ச்சியாக பெறமுடியாதவர்களாகவும் இருந்தனர். இப்பிரதேசத்து மாணவர்கள் 7ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்புவரை அமைதியற்ற சூழ்நிலையில் வாழ்ந்ததால் ஒழுங்காகக் கற்க முடியவில்லை. ஆசிரியர்களும் ஒழுங்காகக் கற்பிக்க முடியவில்லை. கல்வியின் தொடர் செயற்பாட்டிற்கு அடிக்கடி இடையூறு ஏற்பட்டதால் தேசிய மட்டப் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற முடியவில்லை. இதனால் வடமாகாணப் பெறுபேறு ஏனைய மாகாண மாணவர்களின் பெறுபேறுகளுடன் ஒப்பிடும்போது மிகத்தாழ்வாகவே இருந்தது. இதன் காரணமாக 2011இல் 9ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டது. தொடர்ந்தும் 2012இல் 8ஆம் இடமும் 2013இல் 6ஆம் இடமும் 2014இல் 9ஆம் இடமும் 2015இல் 9ஆம் இடமும் 2016இல் 9ஆம் இடமுமாக இருந்தது.

அட்டவணை 1 - க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் உயர்தர வகுப்பில் கல்விகற்க தகுதியுடையோர் சதவீதத்தில் (மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்கள புள்ளிவிபர அறிக்கை)

| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Western | 57.94 | 59.8 | 59.48 | 65.77 | 60.93 | 67.3 | 66.56 | 69.03 | 69.40 | 71.96 | 72.67 | 72.92 |
| Central | 46.77 | 46.76 | 46.57 | 53.39 | 48.46 | 56.51 | 57.59 | 61.49 | 63.50 | 65.96 | 66.98 | 68.85 |
| Southern | 49.85 | 52.34 | 52.09 | 57.4 | 53.08 | 60.33 | 62.86 | 66.30 | 67.05 | 73.08 | 75.21 | 76.66 |
| Northern | 48.29 | 51.84 | 52.82 | 53.51 | 55.71 | 56.93 | 54.26 | 55.99 | 65.33 | 64.19 | 60.38 | 60.66 |
| Eastern | 46.26 | 48.35 | 46.79 | 48.81 | 47.46 | 59.41 | 56.38 | 62.20 | 65.43 | 66.71 | 63.54 | 61.56 |
| North Western | 49.97 | 52.57 | 54.07 | 59.64 | 53.51 | 62.72 | 62.68 | 66.81 | 68.92 | 70.42 | 69.66 | 70.63 |
| North Central | 42.37 | 41.22 | 42.38 | 48.84 | 42.54 | 54.8 | 56.09 | 60.40 | 63.06 | 65.25 | 66.61 | 66.34 |
| Uva | 41.09 | 41.27 | 41.94 | 47.58 | 43.8 | 52.57 | 54.45 | 59.63 | 63.43 | 64.82 | 65.85 | 68.06 |
| Sabaragamuwa | 46.93 | 48.41 | 49.16 | 54.84 | 50.33 | 59.4 | 60.44 | 64.30 | 66.60 | 68.26 | 69.97 | 70.80 |

சமவசதிகளைப் பெறமுடியாதிருந்த வடமாகாண மாணவர்களின் பெறுபேறுகளை எல்லா வாய்ப்பு வசதிகளையும் பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளுடன் ஒப்பிடுவது சரியானதா? என்ற கேள்வி எழுகின்றது அவ் ஒப்பீட்டில் கிடைத்த முடிவுகளின் அடிப்படையில் வடமாகாணம் கல்வி நிலையில் இறுதி நிலைக்கு சென்றுவிட்டது என்ற முடிவுக்கு வருவது எந்தளவுக்கு சரியானது? கல்வித்துறையினரே இதைப் பரப்புரை செய்வது எந்தளவு நியாயமானது? இவ்வாறான பரப்புரை இனிவரும் மாணவர்களிற்கும் மற்றும் கல்விச்சமூகத்திற்கும் சோர்வையும் மனஉளைச்சலையும் ஏற்படுத்தும். இது புள்ளி விபரங்களை காலச் சூழலுடன் நுணுகி ஆராயாதவர்களின் கருத்தாகும்.

**வடமாகாணக் கல்வியில் குறிப்பாக இடை நிலைக்கல்வி பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் வீழ்ச்சிப் போக்கு காணப்படுகிறதா? வீழ்ச்சிப்போக்கு காணப்படுகின்றது எனக்கருத்துரைப்பது சரியானதா? என்பது பற்றிய ஆய்வு.**

அட்டவணை 2 - க.பொ.த. சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் (சதவீதம்) மாவட்ட அடிப்படையில் (மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்கள புள்ளிவிபர அறிக்கை)

| Subject | Year | Colombo | Gampaha | Kalutara | Kandy | Matale | Nuwara eliya | Galle | Matara | Hambantota | Jaffna | Kilinochchi | Mannar | Vavuniya | Mullaitivu | Batticaloa | Ampara | Trincomalee | Kurunegala | Puttalam | Anuradha-pura | Polonnaruwa | Badulla | Monaragala | Ratnapura | Kegalle |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| MATH | 2010 | 72 | 64 | 65 | 59 | 52 | 49 | 63 | 62 | 59 | 61 | 40 | 54 | 61 | 42 | 59 | 65 | 56 | 64 | 58 | 54 | 51 | 56 | 45 | 55 | 60 |
| MATH | 2011 | 68 | 59 | 59 | 55 | 48 | 45 | 58 | 58 | 53 | 55 | 29 | 58 | 52 | 36 | 53 | 58 | 45 | 59 | 52 | 47 | 44 | 51 | 42 | 52 | 56 |
| MATH | 2012 | 67 | 57 | 55 | 53 | 49 | 46 | 58 | 56 | 53 | 60 | 42 | 59 | 56 | 42 | 59 | 58 | 49 | 59 | 53 | 48 | 48 | 51 | 43 | 51 | 56 |
| MATH | 2014 | 67 | 58 | 55 | 55 | 51 | 47 | 61 | 59 | 57 | 57 | 43 | 64 | 57 | 46 | 56 | 60 | 52 | 59 | 53 | 52 | 52 | 53 | 48 | 54 | 56 |
| MATH | 2015 | 66 | 58 | 56 | 55 | 47 | 46 | 59 | 58 | 57 | 56 | 41 | 52 | 52 | 45 | 52 | 55 | 45 | 58 | 49 | 50 | 47 | 51 | 45 | 52 | 56 |
| SCIENCE | 2010 | 73 | 66 | 68 | 62 | 55 | 48 | 66 | 66 | 64 | 53 | 32 | 50 | 52 | 33 | 57 | 66 | 58 | 65 | 57 | 59 | 56 | 37 | 50 | 59 | 64 |
| SCIENCE | 2011 | 74 | 67 | 67 | 64 | 58 | 51 | 67 | 68 | 65 | 53 | 36 | 57 | 53 | 37 | 53 | 66 | 54 | 65 | 56 | 57 | 56 | 57 | 51 | 59 | 65 |
| SCIENCE | 2012 | 77 | 70 | 71 | 68 | 65 | 57 | 72 | 73 | 73 | 61 | 42 | 60 | 60 | 41 | 65 | 72 | 65 | 70 | 63 | 64 | 63 | 65 | 61 | 67 | 70 |
| SCIENCE | 2014 | 70 | 61 | 61 | 61 | 55 | 50 | 65 | 66 | 66 | 52 | 37 | 57 | 49 | 41 | 61 | 66 | 60 | 62 | 54 | 54 | 57 | 57 | 55 | 59 | 63 |
| SCIENCE | 2015 | 75 | 69 | 68 | 69 | 64 | 59 | 73 | 74 | 76 | 60 | 47 | 62 | 58 | 51 | 63 | 72 | 64 | 69 | 61 | 67 | 63 | 65 | 64 | 67 | 70 |
| HISTORYS | 2010 | 83 | 77 | 80 | 73 | 70 | 67 | 75 | 77 | 74 | 66 | 47 | 67 | 74 | 46 | 70 | 78 | 71 | 77 | 72 | 69 | 68 | 71 | 61 | 70 | 76 |
| HISTORYS | 2011 | 76 | 69 | 71 | 65 | 62 | 60 | 68 | 71 | 66 | 62 | 42 | 70 | 66 | 50 | 64 | 67 | 60 | 68 | 63 | 63 | 57 | 64 | 53 | 64 | 69 |
| HISTORYS | 2012 | 77 | 69 | 70 | 66 | 63 | 58 | 71 | 70 | 68 | 61 | 45 | 68 | 68 | 44 | 66 | 64 | 63 | 68 | 63 | 66 | 59 | 63 | 57 | 65 | 71 |
| HISTORYS | 2014 | 83 | 78 | 81 | 79 | 75 | 75 | 82 | 82 | 81 | 74 | 65 | 87 | 82 | 61 | 79 | 81 | 76 | 82 | 77 | 77 | 77 | 77 | 71 | 76 | 82 |
| HISTORYS | 2015 | 80 | 74 | 76 | 76 | 70 | 71 | 76 | 78 | 78 | 68 | 55 | 70 | 69 | 57 | 68 | 73 | 65 | 77 | 70 | 74 | 72 | 70 | 67 | 72 | 77 |
| ENGLISH | 2010 | 70 | 54 | 50 | 49 | 35 | 28 | 43 | 42 | 34 | 34 | 8 | 21 | 28 | 9 | 30 | 35 | 30 | 45 | 38 | 33 | 30 | 35 | 21 | 31 | 41 |
| ENGLISH | 2011 | 72 | 55 | 52 | 50 | 38 | 31 | 48 | 45 | 40 | 32 | 8 | 24 | 31 | 10 | 33 | 40 | 30 | 46 | 41 | 35 | 29 | 37 | 23 | 33 | 42 |
| ENGLISH | 2012 | 71 | 57 | 53 | 53 | 43 | 36 | 50 | 48 | 43 | 38 | 14 | 35 | 32 | 11 | 38 | 41 | 37 | 51 | 46 | 37 | 32 | 38 | 28 | 38 | 47 |
| ENGLISH | 2014 | 70 | 52 | 50 | 50 | 39 | 33 | 47 | 46 | 43 | 33 | 15 | 25 | 32 | 15 | 35 | 39 | 35 | 45 | 41 | 35 | 33 | 37 | 29 | 38 | 43 |
| ENGLISH | 2015 | 68 | 52 | 50 | 54 | 41 | 35 | 49 | 46 | 41 | 35 | 16 | 28 | 33 | 17 | 36 | 40 | 32 | 45 | 39 | 37 | 33 | 37 | 31 | 37 | 46 |
| TAMIL | 2010 | 86 | 79 | 71 | 71 | 73 | 80 | 75 | 73 | 85 | 82 | 73 | 90 | 84 | 74 | 81 | 58 | 78 | 77 | 84 | 72 | 85 | 73 | 64 | 77 | 79 |
| TAMIL | 2011 | 83 | 80 | 70 | 76 | 82 | 81 | 59 | 73 | 63 | 79 | 65 | [illegible] | 84 | 68 | 76 | 84 | 77 | 75 | 79 | 72 | 90 | 79 | 68 | 65 | 76 |
| TAMIL | 2012 | 81 | 75 | 67 | 75 | 74 | 78 | 61 | 62 | 55 | 80 | 71 | 84 | 86 | 72 | 82 | 80 | 77 | 69 | 77 | 75 | 86 | 71 | 51 | 65 | 78 |
| TAMIL | 2014 | 79 | 77 | 68 | 73 | 73 | 81 | 73 | 74 | 64 | 82 | 74 | 90 | 85 | 78 | 79 | 83 | 77 | 76 | 72 | 66 | 79 | 79 | 68 | 73 | 74 |
| TAMIL | 2015 | 83 | 81 | 77 | 77 | 75 | 87 | 72 | 73 | 70 | 83 | 71 | 90 | 85 | 81 | 82 | 86 | 75 | 79 | 79 | 76 | 83 | 79 | 61 | 81 | 81 |

| Percentage | 100 | 50 | 0 |
|---|---|---|---|

சாதாரணதரப் பரீட்சையில் முக்கிய பாடங்களில் கிடைத்த பேறுபேறுகளை மாவட்ட அடிப்படையில் வரிசைப்படுத்தி நோக்கும்போது உண்மைநிலை வெளிப்படும். இலங்கை தேசிய பரீட்சைத் திணைக்கள புள்ளிவிபரங்களை அடிப்படையாகக்கொண்டு அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ளது. அட்டவணை 2இல் இருந்து கணிப்பிட்டு. இலங்கையின் 25 மாவட்டங் களை ஒப்பிட்டு வரிசைப்படுத்தப்பட்ட (Ranked) தரவு அட்டவணை 3 இல் தரப்பட்டுள்ளது.

## ஆங்கிலப் பாடப் பெறுபேறு

இலங்கையின் தேசிய பரீட்சைத் திணைக்களத்தின் அறிக்கையில் தரப்படட 25 மாவட்டங்களின் மாவட்ட ரீதியான தரவரிசைப் படியான தரவுகளின் படி வட மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் யாழ்ப்பாணம், வவுனியா தவிர்ந்த ஏனைய கிராமப்புற பின்தங்கிய மாவட்டங்களான கிளிநொச்சி 25 ஆவது இடத்திற்கும் மன்னார் 23வது இடத்திற்கும் முல்லைத்தீவு 24வது இடத்திற்கும் தள்ளப்பட்டதால் வடமாகாணம் இறுதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

கிராமப்புறமாக இருப்பதால் ஆங்கிலத்தை கற்பிப்பதற்கான ஆசியர் பற்றாக்குறை இப்பாடத்தை கற்பதற்கான வாய்ப்பைக் கொடுக்கவில்லை. அத்தோடு பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் வரமுடியாதபோது பதில் கடமை புரியக்கூடிய ஆங்கிலம் கற்பிக்கத் தெரிந்த ஆசிரியர்களும் இல்லாதிருந்திருக்கலாம்.

## கணிதபாடப் பெறுபேற்றின் வீழ்ச்சி

க.பொ.த. சாதாரணதரத்தில் மாணவர்கள் கற்கவேண்டிய கட்டாய பாடங்களில் ஒன்றான கணிதபாடத்தில் சித்தியெய்தவில்லை யெனில் அம்மாணவன் க.பொ.த. உயர்தரவகுப்பு கல்விவாய்ப்பை இழந்துவிடுகிறான். சித்தியடைந்தவர்களின் சதவீதத்தை அட்டவணை 2, 3 காட்டுகிறது.

(தொடரும்)

# உடையார்கட்டு குளத்தில் கிரவல் அகழ்வு; குளம் உடைப்பெடுக்கும் அபாயநிலையில்

## குழு அமைத்து ஆராய்வு





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் உடை யார்கட்டு குளத்தின் கீழ் பகுதியில் குளக்க ட்டிலிருந்து சுமார் 150 மீற்றர் பகுதிக்குள் கிரவல் அகழ்வுக்கான அனுமதி வழங்க ப்பட்டுள்ளதாகவும் இதனால் பல்வேறு பாதிப்புக்கு மக்கள் முகம்கொடுக்க நேரிட்டுள்ளதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் கருத்து தெரிவிக்கையில், உடையார்கட்டு குளத்தை நம்பியே சுமார் 2ஆயிரத்து 500 ஏக்கர் வயல் நிலங்களை மேற்கொள்கின்றோம். மீன்பிடி தொழிலை மேற்கொள்ளும் குடும்பங்கள் கால்நடை வளர்ப்போர் என சுமார் 3 ஆயிரம் குடும்பங்கள் இக்குளத்தில் பயன் பெறுகின் றனர்

குறிப்பாக இந்த கிரவல் அகழ்வு நடவடிக்கை காரணமாக குளம் உடைப்பெடுக்க வாய்ப்புள்ளது. குளம் உடைப்பெடுத்தால் பல்வேறு குடும்பங்கள் வாழ்வாதார ரீதியாக பாதிப்பதை விட குளம் உடைப்பெடுக்குமானால் சில கிராமங்களே இல்லாது போக வாய்ப்புள்ளது. அதனைவிட இந்த கிரவல் அகழ்ந்து கனரக வாகனங்களில் கொண்டு செல்வதால் வீதி சேதமடைகிறது.

பல ஆண்டுகாலம் திருத்தப்படாமல் இருக்கும் இந்த வீதியை இன்னும் பாழடைய செய்துவிட்டு நாம் என்ன செய்வது என்று தெரியாதுள்ளது. இவ்வாறு பல்வேறு ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ளோம். எனவே இவ்வளவு பிரச்சினைகள் இருக்கும் போது அதிகாரிகளின் கூட்டு முயற்சியில் இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது இந்த பகுதிக்கு நேரடியாக வருகைதந்து இவற்றை ஆராய்ந்து இந்த அனுமதியை இரத்து செய்யுமாறு கோருகின்றோம்.

அத்தோடு கிரவல் அகழ்வு அனுமதியில் கிரவல் அகழப்படும் இடம் மீண்டும் மண் நிரவப்பட்டு மரநடுகை செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டாலும் இந்த பகுதியில் தொடர்ச்சியாக கிரவல் அகழப்பட்ட கிடங்குகள் அவ்வாறே காணப்படுவதாகவும் இவற்றையும் உரிய தரப்புக்களை கொண்டு மூடவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்

இந்தவிடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட வடமாகாண சபை உறுப்பினர் ஆ. புவனேஸ்வரன்,

கடந்த 29 ஆம் திகதி புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் பொதுமக்களால் கிரவல் அள்ளுவது தொடர்பில் எனக்கு முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் என்னால் இந்த விடயம் தொடர்பில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டு மணிநேரத்திற்கு மேல் விவாதம் நடைபெற்றது.

அதில் இந்த கிரவல் அகழ்விற்கு எல்லா அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்த கிரவல் அகழ்விற்கான அனுமதியை வழங்கவேண்டும் என அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆர்.டி.ஏ. ஒப்பந்தத்தில் இந்த வீதியினை புனரமைப்பதாக தெரிவித்துள்ளார்கள். ஆனால் இந்த வீதி முழுமையாக செப்பனிடப்படவில்லை. அந்த வீதியால் கனரக வாகனங்கள் செல்லமுடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விடயத்தினை அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவரும் ஏற்றுக்கொண்டிருந்தார்.

இணைத்தலைவர்களில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஒருகுழுவினை அமைக்க வேண்டும். அந்தக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப கிரவல் அள்ளுவதா? இல்லையா என தீர்மானிக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி பிரதேச செயலாளர், பிரதேச சபை செயலாளர், நீர்ப்பாசனப் பொறியிலாளர், கிரவல் அனுமதி பெற்றவர் உள்ளிட்ட ஒரு குழுவை தெரிவு செய்துள்ளார்கள்.


இந்த குழு கடந்த நாட்களில் இடத்தினை சென்று பார்வையிட்டுள்ளார்கள் என குழுவில் உள்ள நீர்ப்பாசன பொறியியலாளர் குறிப்பிட்டிருந்தார். நீர்ப்பாசன வாய்க்காலுக்கு மேலாக பாதைசெல்வதால் அதற்கான பாலத்தினை கட்டவேண்டும். குளத்திற்கு 150 மீற்றர் அண்மிய பகுதியில் மண் அகழப்படுவதால் எதிர்காலத்தில் குளம் உடைப்பெடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் கிரவல் அகழ்வதற்காக தனியார் வந்து கிரவல் அகழ்வினை மேற்கொள்ள முற்பட்ட வேளை பொதுமக்கள் எதிர்த்துள்ளார்கள். இந்தவிடயம் தொடர்பில் பொலிஸாருக்கு தொலைபேசியில் உரையாடியபோது பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டுள்ளார். இந்த கிரவல் அகழ்விற்கு எல்லாவித அனுமதிகளும் இருக்கின்றபோது அதனை நிறுத்த முடியாது. ஆனால் பொதுமக்கள் அதனை எதிர்க்கின்றார்கள் என்று நான் கூறினேன்.

கிரவல் அகழ்வினால் குளம் உடைப்பெடுக்குமாக இருந்தால் இந்தப்பகுதியில் வசிக்கின்ற பெருந்தொகையான மக்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள். இந்தவிடயம் மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்.

எனவே இந்த கிரவல் அகழ்கின்ற விடயம் மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏனைய பல இடங்களில் கிரவல் அகழ்விற்காக இருக்கின்றன இந்தகுழு என்ன முடிவினை கொடுக்கின்றதோ அந்த முடிவினை ஒப்பந்தகாரர் பின்பற்றவேண்டும். இந்த அனுமதி பிழையாக வழங்கப்பட்டிருந்தால் அது நிச்சயமாக மீளப்பெறப்படவேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)





முறிகண்டி தென்னிந்திய திருச்சபை பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. திருச்சபை மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வு வண பிதா ஆ.அசோகன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் சிறார்களிற்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. குறித்த ஒளிவிழா நிகழ்வில் தென்னிந்திய திருச்சபை குருமார், வானவில் நிறுவனத்தின் உதவி முகாமையாளர் நிறைவாழ்வு மைய இணைப்பாளர், பணியாளர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்:- கண்டாவளை செய்தியாளர்)

## தேசிய இளைஞர் விருது



(பனிக்கன் குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடம் தோறும் நடத்துகின்ற தேசிய இளைஞர் விருது போட்டிகள்இம்முறை 39ஆவதுதடவையாக நடைபெற்றது.

இந்தப் போட்டிகளில்சிறுகதை போட்டியில் முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பில் உள்ள மல்லிகை இளைஞர் கழக இளைஞன் ஜெ.ஜெகன் என்பவர் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றிருந்தார். அண்மையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் இடம்பெற்ற 39 ஆவது தேசிய இளைஞர் விருது வழங்கல் நிகழ்வில் இவருக்கான விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (2-281)

## சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் நேற்று கிளிநொச்சியில் முன்னெடுப்பு

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் கிளிநொச்சியில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

காலை 9.30 மணிக்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலிருந்து மாற்றுத் திறனாளிகளது ஒரு அணியும், கரடிப்போக்கு சந்தியிலிருந்து மாற்றுத் திறனாளிகளது ஒரு அணியும், கனகபுரம் கோப் சிற்றிக்கு முன்பாக இருந்து மாற்றுத் திறனாளிகளது ஒரு அணியும் கிளிநொச்சி சந்தையை நோக்கி விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

வீதியின் இரு புறமும் உள்ள அரச, தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு மாற்றுத் திறனாளிகளது உரிமைகள் தேவைகள் தொடர்பான விழிப்புணர்வு கோரிக்கை மனு விநியோகித்துச் சென்றனர்.

பிற்பகல் 12.30 மணியளவில் இந்த விழிப்புணர்வுப் பேரணி கிளிநொச்சி டிப்போ





சந்தியில் விழிப்புணர்வு கூட்டத்துடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் பல இந்த நிகழ்வில் பங்கெடுத்திருந்தனர். (2)

# வவுனியா மாவட்ட கலாசார நிகழ்வில் பங்கேற்றவர்கள் மிகக் குறைவு



(குருமன்காடு)

வவுனியா மாவட்ட கலாசார நிகழ்வு நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. எனினும் நிகழ்வில் பலரும் கலந்து கொள்ளவில்லை என தெரிவிக்கப் படுகிறது.


குறித்த நிகழ்வில் பலரும் கலந்து கொள் ளாமையால் அதிகளவிலான கதிரைகள் வெறுமையாகவே காணப்பட்டன. வட மாகாண பண்பாட்டு அலுவல்கள் விளை யாட்டுத்துறை அமைச்சின் கீழ் வவுனியா மாவட்ட செயலகமும், பிரதேச செயலகமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந் தன.


இருப்பினும் முறையான ஒழுங்குபடுத்தல் மற்றும் சரியான முறையில் அழைப் புக்கள் வழங்கப்படாமை கார ணமாக மாவட்டத்தின் பல கலைஞர்களும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை.

இதனால் பாடசாலை மாணவர்களுடனும், விருந் தினர்களுடனுமே நிகழ்வு நடந்தேறியது.

மாவட்ட அரசாங்க அதிபர் சோமரட்ண விதான பத்திரண தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், இ.இந்திரராசா, ம.ஜெயதிலக, வர்த்தக கைத் தொழில் அமைச்சரின் இணைப்பாளர் முத்து முகமது உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டி ருந்தனர். (2-250)

# பளை பிரதேச வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பில் ஆராய்வு





(பளை)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியக் கலாநிதி ஜீ. குணசீலன் கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை பளை பிரதேச வைத்தியசாலைக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அங்கு சென்ற சுகாதார அமைச்சரை பளை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி சின்னையா சிவரூபன் மற்றும் வைத்தியசாலையின் பணி யாளர்கள் சந்தித்து குறை பாடுகள் தொடர்பில் எடுத்துக் கூறினர்.

வைத்தியசாலையை பார்வையிட்ட அமைச்சர் தொடர்ந்தும் வைத்திய சாலையின் பொறுப்பு வைத் திய அதிகாரி மற்றும் பணி யாளர்களுடன் விசேட கல ந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டிருந்தார்.

குறித்த கலந்துரையாடலின் போது பளை பிரதேச வைத்தியசாலையின் சேவைப் பரப்பு, அதன் பௌதீக முக்கியத்துவம் என்பன தொடர்பில் விளக்கமளித்த பொறுப்பு வைத்திய அதிகாரி, வைத்தியசாலையின் ஆளணி மற்றும் பௌதீக வளங்கள் குறைபாடுகள் தொடர்பாகவும் முறையிட்டி ருந்தார்.

வைத்தியசாலையின் பராமரிப்பு மற்றும் சுத்தம் தொடர்பில் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி மற்றும் பணி யாளர்களுடன் கலந்துரையாடிய அமைச்சர் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளில் உடனடிச் சாத்தியமானவற்றை தீர்த்து வைப்பதாக உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (2-4)

# கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட விருதுகளில் பெயர்மாறிப் பொறிப்பு

## சான்றிதழ்களில் எழுத்துப்பிழை


வவுனியா மாவட்ட கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்தும்

பண்பாட்டுப் பெருவிழா – 2017

திரு. சுப்பிரமணியம் தங்கவேல்

"வவுனியம்"

(குருமன்காடு)

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத் தால் வழங்கப்பட்ட சான்றிதழில் தமிழ் எழுத்துப் பிழைகள் காணப்படுவதாக பலரும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மாகாண கல்வி அமைச் சிற்குட்பட்ட குறித்த திணைக்களத்தின் அனு சரணையுடன் வவுனியா மாவட்ட செயலக மும், பிரதேச செயலகமும் மற்றும் மாவட்ட கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு விழா வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது விருது வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழில் தமிழ் எழுத்துப் பிழை காணப்பட்டமை குறித்து கலைஞர்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர். அத் துடன் விருதுகளைப் பெற்ற கலைஞர்க ளுக்கும் விருதுகளில் பெயர் மாறிப் பொறிக் கப்பட்டிருந்ததாகவும் அதனால் பலரும் மீண்டும் விருதுகளை கலாசார உத்தி யோகத்தரிடம் ஒப்படைத்து விட்டு ஏமாற்றத் துடன் வீடு திரும்பினர்.

இது குறித்து பாதிக்கப்பட்ட கலைஞர் ஒருவர் தெரிவிக்கையில், நான் நீண்ட காலமாக கலைஞராக இருக்கின்றேன். என்னை மாவட்ட செயலகத்தால் கௌர வித்து விருது வழங்கப் போவதாக அறிவித் தனர். ஆவலுடனும், எதிர்பார்ப்புடனும் வந்தேன். ஆனால் எனக்கு வழங்கப்பட்ட விருதில் எனது பெயர் இல்லை. மாறி பெண் ஒருவரின் பெயருடன் தந்தார்கள். இப்படி பலருக்கும் பெயர் மாறி விருது வழங்கப்பட்டு ள்ளது. எனது விருதை மாவட்ட கலாசார உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து விட்டு ஏமாற்றத்துடன் வீடு செல்கின்றேன். பின்னர் வீட்டுக்கு விருதை கொடுத்து அனுப்புவதாக சென்னார்கள். வீட்டில் எதிர்பார்ப்புடன் இருப்பார்கள். என்ன சொல்ல என்று தனது ஆதங்கத்தை தெரிவித்தார்.

இவ்வாறான விடயங்கள் குறித்து வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் என வும் அவர்கள் கேட்டுக் கொண் டனர். (2-250)




# தகவல் அறியும் உரிமைச் சட்டம்; தெளிவூட்டும் விசேட கலந்துரையாடல்

(மன்னார்)




தகவல் அறியும் உரி மைச்சட்டம் தொடர்பில் தெளி வூட்டும் விசேட கலந்துரை யாடல் நேற்று திங்கட் கிழமை காலை மன்னார் பிரஜைகள் குழுவில் நடை பெற்றது.

சமாதானத்திற்கான புதிய உதையம் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலை யம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த குறித்த கலந் துரையாடலில் சமூக மட்டத் தலைவர்கள் மற்றும் பிரதேச ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தகவல் அறியும் உரி மைச்சட்டம் தொடர்பில் விரிவாக கலந்துரை யாடப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் சிரேஷ்ட ஆய்வாளர் லயனல் குருகே, மாற்றுக் கொள்கை நிலையத்தின் வடக்கு,கிழக்கு மாகாண இணைப்பாளர் சுரேஸ்குமார், சமாதானத்திற்கான புதிய உதையம் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் எமில் றொமில்டன் உட்பட பிராந்திய ஊடகவிய லாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-4)

# முல்லைத்தீவு நகரச் சுற்றுவட்டத்தில் கட்டாக்காலி கால்நடைகளால் தொல்லை



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நகரப்பகுதி யில் உள்ள சுற்றுவட்டத்தில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள் ளது. இதனால் விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும் அதிகா ரிகள் இதனைக் கண்டுகொள்ளவில்லை என சாரதிகள், பொதுமக்கள் விசனம் தெரி விக்கின்றனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் மேய்ச்சல் தரவை இன்றி பல வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வரு கின்றனர். இருப்பினும் இரவு நேரங்களில் கால்நடை களை அடைக்க வேண்டியது அவர் களின் பாரிய பொறுப்பாகும்.

இருப்பினும் சில பொறு ப்பற்ற கால்நடை வளர்ப்போரால் வீதியில் செல்கின்ற மக்கள், சாரதிகள் விபத்துக்களையும் இடையூறுகளையும் எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக இரவு வேளைகளில் முல்லைத்தீவு நகரச் சுற்று வட்டம் மற்றும் நகரப்பகுதிகளை கட்டாக்காலி மாடுகள் ஆட்சிபுரிவதை அவதா னிக்க முடிவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் இந்த இடத்திலிருந்து 50 மீற்றருக்குள் கரைதுறைப்பற்று பிரதேச சபை காணப்படுகிறது. இவ்வாறு இப்பகுதிகளை இரவு வேளையில் நாளாந்தம் கால்நடைகள் நிரப்புகின்றன. ஆனாலும் அதிகாரிகளும் இதனைக் கண்டுகொள்ளவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (2-281)

# கிச்சிராபுரத்தில் வீட்டுத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டல்

(பனிக்கன்குளம்)




முள்ளிவளை கிச்சிரா புரத்தில் ஐக்கிய அரபு இராச் சியத்தின் தனவந்தர் ஒருவரின் நிதியுதவியில் வீட்டுத்திட்டம் அமைத்துக்கொடுக்கப்படுவதற் கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றுள்ளது.

வடக்கில் உள்நாட்டு போர் காரணமாக இடம்பெயர்ந்து 2009 ஆம் ஆண்டிற்கு பின் னர் மீள்குடியேற்றப்பட்டு இதுவரை அரசாங்கத்தால் வீடுகள் கொடுக்கப்படாத 120 தமிழ், முஸ்லிம் மக்களுக்கு வீடுகளை பெற்றுக்கொடுக்க வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.ஜெனோபர் அமைச்சர் றிசாத் பதியுதீனின் கவனத்திற்குக் கொண்டு சென்றதை அடுத்து ஐக்கிய அரசு இராச்சியத் தின் தனவந்தர் ஒருவரின் நிதி உதவியில் 600 சதுர அடிகளைக் கொண்ட வீடுகள் அமைத்துக் கொடுக்க இணங்கப்பட்டுள்ளது. இந்த வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று கிச்சிராபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அமைச்சர் றிசாத் பதியுதீனின் பிரத்தியேக செயலாளர் றிப்கான்பதியுதீன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.ஜெனோபர், இந்த வீட்டுத்திட்டத்தை பெற் றுக்கொடுக்கும் இணைப்பாளர் முகமட்றவ், அமைச்சரின் இணைப்புச் செயலாளர் எம்.எச்.முஜாகீர், அமைச்சர் றிசாத் பதியு தீனின் தந்தை பதியுதீன் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான வீட்டுத்திட் டத்திற்கு அடிக்கல்லை நாட்டி வைத் துள்ளார்கள். (2-281)

# வானில் தோன்றிய சுப்பர் மூன்

## இணையத்தளத்தில் பரவும் அழகிய புகைப்படங்கள்



நிலவு பூமிக்கு அருகில் தென்படும் நிகழ்வை சுப்பர் மூன், முழு நிலவு மற்றும் புதுநிலவு என்று அழைப்பார்கள்.

இந்த சுப்பர் மூன், பௌர்ணமி தின வெளிச்சத்தை விட 30 சதவீதம் பிரகாசமாகவும், 14 சதவீதம் பெரியதாகவும் தெரியும்.

அந்த வகையில் உலகெங்கும் உள்ள விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் நேற்று முன்தினமிரவு அந்த சுப்பர் மூன் நிலவை கண்டுள்ளனர்.

இதேவேளை 2018ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதியும், 31ஆம் திகதியும் நிலவு பூமிக்கு மிக அருகில் மீண்டும் தோன்றும் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

மேலும், நேற்று முன்தினம் அமெரிக்காவில் வோஷிங்டன் பகுதி யில் ஒரு விமானம் செல்லும் போது எடுக்கப்பட்ட புகைப்படத்தை டுவிட்டரில் பதிவேற்றிய நாசா "இன்று சுப்பர் மூன்" என்றும் பதிவிட்டுள்ளது.

மேலும் இந்த சுப்பர் மூனை பார்த்த பலர் அழகிய புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியுள்ளனர்.

இதேவேளை இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில் சுமார் 70 ஆண்டுகளுக்கு பிறகு கடந்த வருடம் நவம்பர் மாதம் 14ஆம் திகதி சுப்பர்மூன் தோன்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஊடகவியலாளர்களுக்கு ஏற்படும் வன்முறைக்கு எதிரான மாநாடு

(கொழும்பு) - ஊடகவியலாளர்களுக்கு ஏற்படும் வன்முறைக்கு எதிரான சர்வதேச தினத்தை அனுஷ்டிக்கும் வகையிலான சர்வதேச மாநாடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பமானது.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமாகிய இந்த மாநாட்டினை ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பு ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர, யுனெஸ்கோ அமைப்பின் ஊடகத்துறையின் மேம்பாட்டு அலுவல்கள் தொடர்பான பணிப்பாளர் ஹைபேகர் ஆகியோர் இந்த மாநாட்டில் உரையாற்றவுள்ளனர்.

சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட பிராந்திய தரப்புக்கள் உள்நாட்டு - வெளிநாட்டு ஊடகவியலாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் என சுமார் 200 பேர் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

யுனெஸ்கோ அமைப்பு நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு, அரசாங்கத் தகவல் திணைக்களம் ஆகியன இணைந்து இம்மாநாட்டை ஒழுங்கு செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)




# முதலமைச்சர் விக்னேஸ்வரன் நீதியான, நேர்மையான மனிதர்

## அமைச்சர் அனந்தி சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

எங்களுக்கு கிடைத்திருக்கின்ற முதலமைச்சர் விக்னேஸ்வரன் நீதியான, நேர்மையான மனிதர் என்றும்கொள்கை அடிப்படையில் பெண்கள் அரசியலுக்கு வருவதன் மூலமே பெண் சமூகத்தின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த முடியும்என்றும் யாழ்.மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்ற பெற்றோர் தின விழாவில்பிரதம விருந்தினராக பங்கேற்று உரையாற்றிய வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உறுதுணையாகச் செயற்பட்டுவரும் பெற்றோர்களுக்கு நினைவுப் பரிசில்களை வழங்கி கௌரவித்ததைத் தொடர்ந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அரசியல் சார்பற்று நடுநிலையான சமூகக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கு பாடுபட வேண்டும். அரசியல் வாதியாக இருக்கும் நான் இன்று இந்தப் பதவியில் இருக்கலாம்.

நாளை இன்னொரு கொள்கையை பின்பற்றும் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கலாம். ஆனால் ஆசிரியர்களோ? மாணவர்களோ? பிழையாக வழி நடத்தப்படக் கூடாது.

ஏனெனில் அவர்கள் தமது சமூகம் சார்ந்த கட்டமைப்பினை ஒழுக்கமான நல்லதொரு சமூகத்தை தோற்றுவிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

வடமாகாணத்திற்குட்பட்ட ஐந்து மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் தொடர்பான விடயங்களை ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகள் எனது பார்வைக்கு கொண்டு வரப்படும் போது அது குறித்து முதல மைச்சர் மற்றும் கல்வி அமைச்சருக்கு தெரியப்படுத்தி உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு கோரிக்கை வைக்கின்றேன்.

இந்தநாட்டில் நூற்றிற்கு 52 வீதமான பெண்கள் இருக்கின்ற போதிலும் பெண்களின் அரசியல் பற்கேற்பென்பது சொற்பமாகவே இருக்கின்றது.

உள்ளூராட்சி தேர்தல் களத்தை பார்த்தோமானால் வெறும்1.8சதவிகிதமே பெண்கள் இருக்கிறார்கள். பாராளுமன்றத்தில் 2.8 சதவிகிதமான பெண்களே இருக்கின்றார்கள்.

வடக்கு மாகா ணத்தை பொறுத்த வரை யில் 38 உறுப்பினர்களில் ஒரே ஒரு பெண் பிரதிநிதியாக நான் மட்டுமே இருக்கிறேன். இதனால் ஆணாதிக்க சிந்தனை கொண்ட இந்த சமூகத்தில் அரசியலிலும் சரி நிர்வாகத்திலும் சரி பெண்கள் தமது கொள்கைகளையும் செயற்பாடுகளையும் மிகவும் போராட்டத்திற்கு மத்தியிலேயே முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

எங்களுக்கு கிடைத்திருக்கின்ற முதலமைச்சர் விக்னேஸ்வரன் நீதியான, நேர்மையான மனிதர் என்பதுடன் எதற்கும் விலை போய்விடாதவராகவும் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றார். பெண்களுக்கான முக்கியத்துவத்தினை வழங்குவதிலும் முழு ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றார்.

ஆண்களுக்கு நிகரான திறமைகளுடனும் மேம்பட்ட திறமைகளுடனும் பல பெண்கள் இருக்கின்றார்கள். சிலருக்கு அவர்களது திறமைகளை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன.

பலருக்கு அவ்வாறான சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை. எல்லாவற்றிற்கும் ஆண்களை சார்ந்து இருந்து வருவதே இதற்கு காரணமாகும்.


கொள்கை அடிப்படையில் பெண்கள் அரசியலுக்கு வருவதன் மூலமே இந்த நிலையை மாற்ற முடியும். நல்ல கல்வியறிவு உள்ள பெண்களும் சமுதாய சிந்தனையுடைய பெண்களும் அரசியலுக்கு வருவதன் மூலமே பெண் சமூகத்தின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த முடியுமென்றும் அவர் தெரிவித்தார். (இ-4)

# அசாதாரண நிகழ்வு குறித்து ஆய்வு நடத்தப்பட வேண்டும்


கடந்த 2 தினங்களாக மட்டக்களப்பு மீனவர்களினால் அவதானிக்கப்படும் கரைவலையில் பெருமளவு கடல் பாம்புகள் / விலாங்கு மீன்கள் அகப்படும் அசாதாரண நிகழ்வானது மேலதிக கவனத்துக்கும் ஆய்வுக்கும் உட்படுத்தப்படவேண்டும். கடல் வளத்துறை அதிகாரிகளின் கருத்துப்போல் இந்த அசாதாரண நிகழ்வு கடலின் உப்புச் செறிவில் ஏற்படும் மாற்றம் மற்றும் நீரோட்டத் திசை மாற்றம் காரணமாக ஏற்படுமாயின் ஒவ்வொரு வருடமும் இந்த நிகழ்வு ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனால் உள்ளூர் மீனவர்களின் கருத்துப்படி 2004 சுனாமி ஆழிப்பேரலை தாக்குதலுக்கு சில தினங்களுக்கு முன்பாகவே இத்தகைய மாற்றத்தை முதல் தடவையாக அவதானித்திருப்பதாகவும் இப்போது இரண்டாவது தடவையாக அவதானிப்பதாக தெரிவித்திருப்பதை முக்கியமான அபாய அறிகுறியாக கருத வேண்டியுள்ளது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே வரலாற்றியலாளர்கள் பூமி அதிர்ச்சி மற்றும் சுனாமி தாக்கம் ஏற்படுவதற்கு முன்னராக பாம்புகளும் ஏனைய விலங்குகளும் அசாதாரண நடத்தையைக் காட்டு வதையும் அனர்த்தம் ஏற்ப டும் பகுதியில் இருந்து தப்பிச் செல்வதையும் பதிவு செய்திருக்கிறார்கள். குறிப்பாகபாம்பு களுக்கு அதிர்வுகளை உணரும் நுண்ணாற்றல் மிகவும் விருத்தி அடைந்து இருப்பது விஞ்ஞானிகளினால் அவதானிக்கப்பட்டு இருக்கிறது. பாரிய பூமி அதிர்ச்சி அல்லது சுனாமி ஏற்படுவதற்கு பல தினங்களுக்கு முன்னரேயே பல சிறிய அதிர்வுகள் பூமித் தட்டில் ஏற்படுகின்றன. மேலும் 2014 இல் புவியியலாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இலங்கை மற்றும் சூழ்ந்திருக்கும் இந்து சமுத்திர பகுதியும் கடந்த காலத்தை போலல்லாது அதிகரித்த பூமி அதிர்ச்சி மற்றும் சுனாமி தாக்கத்துக்கு உட்படக்கூடிய அபாயத்தில் இருப்பதைக் காட்டுகின்றன. இதை விட இந்திய வானிலை அறிக்கையின்படி அந்தமான் தீவுகளை அண்டிய பகுதியில் தாழமுக்கம் ஏற்பட்டு வருவதாகவும் அடுத்த சில தினங்களில்இலங்கையின்வடக்கு-கிழக்கு பகுதிகளை அண்டிய பிரதேசங்களில் கடும் மழை பொழியும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. எனவே அடுத்த சில தினங்களுக்கு வடக்கு- கிழக்கில் மீனவர்கள் மற்றும் சுனாமியினால் தாக்கப்படக் கூடிய கடற்கரையை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டும். அடுத்த சில தினங்களுக்கு மீன்பிடிக்க செல்வதை தவிர்ப்பது பாதுகாப்பானது என்று கருத வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. 2016ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வறுமைக்கான புள்ளி விபரங்களின் படி மட்டக்களப்பில் தமிழர்கள் ஏழ்மையில் உழல்வதாக காட்டும் நிலையில் வாழ்வாதாரம் இன்றி பாதிக்கப்பட்டுள்ள இந்த மீனவர்களுக்கு உதவுமாறு தமிழர் பிரநிதிகளை கேட்டுக் கொள்ளும் அதேவேளையில்அனைத்து துறைசார் நிபுணர்களையும் கிழக்கில் அனர்த்தம் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய வேண்டும்



**Dr. முரளிவல்லிபுரநாதன்**
சமுதாய மருத்துவ நிபுணர்



கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தினரால் கடந்த முதலாம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட சிரமதானப் பணியில் நெல்லியடி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களும் கிராம மக்களும் இணைந்து கலட்டி வீதியை துப்புரவு செய்ததை படங்களில் காணலாம். (படங்கள்:- மகாலிங்கம்)



மத்தொனி கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் 2017 ஆம் ஆண்டு கல்வியில் சிறப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் கலாமணி பட்டம் பெற்றவர்கள், பாடசாலை அதிபர்கள், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்,கௌரவ விருந்தினர்கள், மத்தொனி கிராமத்தின் சிறந்த தலைவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் கடந்த 2ஆம் திகதி கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேச செயலர் க.சிறிமோகன், மத்தொனி கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் அழகர்சாமி சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)

# நாவலர் வாரத்தினை முன்னிட்டு மாநாடு, குருபூசை நிகழ்வுகள்




இந்து விவகார அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் ஒருவார காலத்தை நாவலர் வாரமாக அனுஷ்டிக்க பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது குருபூசை தினத்தினை முன்னிட்டு நாட்டின் சகல பாகங்களிலும் நாவலர் பெருமானின் பணிகள் மற்றும் அவரது கருத்துக்களை சிந்திக்கும் வண்ணம் நாவலர் வாரமாக அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யுமாறு இந்து மத அலுவல்கள் அமைச்சரிற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையினர்கோரிக்கையை முன்வைத்திருந்தனர். இதற்கு அமைவாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இக்காலப்பகுதியில் இலங்கையில் சைவ சமயத்திற்கும் தமிழுக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆற்றிய அரும்பணியை போற்றி நாவலரின் கருத்துக்களை சிந்திக்கும் வண்ணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாநாடு மற்றும் குருபூசை நிகழ்வுகளை சமய நிறுவனங்களுடன் இணைந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பாடு செய்துள்ளது.

**நாடு முழுவதிலும்**

நாவலர் வாரத்தினையொட்டி இலங்கையின் சகல பாகங்களிலும் உள்ள அறநெறிப் பாடசாலைகளிலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாவலர் பெருமானின் பணிகள் மற்றும் அவரது கருத்துக்களை மாணவர்கள் அறியும் பொருட்டு பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**யாழ்ப்பாணத்தில்**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை மற்றும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு மற்றும் குருபூசை நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர் 8, 9 மற்றும் 15 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் மிக விமரிசையாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாவலர் பெருமானின் பணிகள் மற்றும் அவரது கருத்துக்களை சிந்திக்கும் வண்ணம் அருளாளர்கள், அறிஞர்களின் அருள் ஆசியுரைகள், சிறப்புரைகள், கருத்தரங்கம், சிறப்புப் பட்டிமன்றம், இசை நிகழ்வுகள், மாணவர்களது கலை நிகழ்வுகள், நூல்கள் வெளியீடு, விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வுகள் மற்றும் மாநாட்டை முன்னிட்டு இடம்பெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வரலாற்று அறிவுப்போட்டியில் திறமையை வெளிக்காட்டிய மாணவர்களை பாராட்டும் நிகழ்வும் இடம்பெறும்.

விழாவின் முதல் நாளான டிசெம்பர் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள தொடக்க நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும் மாநாட்டின் இறுதி நாளான 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள நிறைவு வைபவத்திற்கு இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனும் பிரதம விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

**மன்னாரில்**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,மன்னார் மாவட்ட அறநெறி பாடசாலைகளின் இணையம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழா மற்றும் குருபூசை நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் நகர சபை மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்துமத அலுவல்கள் அமைச்சு செயலாளர் பொ.சுரேஷ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நாவலர் பெருமானின் பணிகள் மற்றும் அவரது கருத்துக்களை சிந்திக்கும் வண்ணம் அருளாளர்கள், அறிஞர்களின் அருள் ஆசியுரைகள், சிறப்புரைகள், இசை நிகழ்வுகள், மாணவர்களது கலை நிகழ்வுகள், கௌரவிக்கும் நிகழ்வுகள் மற்றும் மாணவர்களை பாராட்டும் நிகழ்வு என்பன இடம்பெறும்.

**கொழும்பில்**

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை மற்றும் ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம் என்பன இணைந்து இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து மாமன்றம் மற்றும் இந்து வித்தியா விருத்திச் சங்கம் என்பவற்றின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழா மற்றும் குருபூசை நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர்16 ஆம்திகதி சனிக்கிழமை காலை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில், நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மேல் மாகாண ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நாவலர் பெருமானின் பணிகள் மற்றும் அவரது கருத்துக்களை சிந்திக்கும் வண்ணம் அருளாளர்கள், அறிஞர்களின் அருள் ஆசியுரைகள், சிறப்புரைகள், இசை நிகழ்வுகள், மாணவர்களது கலை நிகழ்வுகள், கௌரவிக்கும் நிகழ்வுகள் மற்றும் மாணவர்களை பாராட்டும் நிகழ்வு என்பன இடம்பெறும்.

நாவலர் வாரத்தினை பயனுள்ளதாக அனுஷ்டிப்பதற்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வேண்டுகின்றது.

**அ.உமாமகேஸ்வரன்** பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள், திணைக்களம்.

# கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவின் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில்கோட்டையிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திராஜா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், சிறப்பு விருந்தினராக விசன் அறக்கட்டளை நிலைய நிறுவுநர் கணேஸ்வரன் வேலாயுதம் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். இந்நிகழ்வில் கணனி தையல் மனைமுகாமைத்துவம் பயிற்சி பெறும் மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதோடு அவர்களுக்கான பாடநெறி நிறைவுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (இ-7)

# வீதிகள் புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்கரை வீதி மற்றும் கூட்டுறவாளர் கல்லூரி வீதிகள் என்பன மாநகர சபையினரால் புனரமைக்கப்பட்டு வருகின்றன. குறித்த வீதிகளைப் புனரமைக்க நடவடிக்கையெடுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (இ-10-106)

# கருவாடுகளை உலரவிடுவதால் போக்குவரத்திற்கு பாரிய இடையூறு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் சத்திரச்சந்தியை சூழவுள்ள வீதிகளில் அமைந்துள்ள சில வியாபார நிலையங்களின் முன்றலில் கருவாடுகளை உலர விடுவதால் அப்பகுதி வழியாக போக்குவரத்து செய்வதில் பாரிய இடையூறு எற்பட்டுள்ளதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்.நகரில் போக்குவரத்து அதிகமாக இடம்பெறும் சந்திகளில் சத்திரச்சந்தியும் ஒன்றாகும். இந்த சந்தியினூடாக அதிகளவு வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றமை வழமையாகவுள்ளது. இந்த சந்தியில் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள காரணத்தால் போக்குவரத்து ஓரளவு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் குறித்த சந்தியிலுள்ள அதிகளவான வியாபார நிலையங்களில் கருவாட்டு விற்பனை நடைபெறுகிறது. இவர்கள் கருவாடுகளை கடைகளுக்கு முன்னால் வைத்து உலரவிடுகின்றனர்.சிலர் விற்பனையிலும் ஈடுபடுகின்றனர். வீதியிலும் இந்த நடவடிக்கை இடம்பெறுகிறது.

இந்நிலையில் சனக்கூட்டம் அதிகமாக காணப்படும் போது போக்குவரத்துக்கு அதிகளவு இடையூறு ஏற்படுகிறது என பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இவ் விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)

# பாரதம்

# பக்தாதி பலியாகவில்லை



## ஈராக் இராணுவம் தகவல்

(பக்தாத்)

அமெரிக்கா 2011ஆம் ஆண்டு சர்வதேச பயங்கரவாதி என அல்-பக்தாதியை அறிவித்து. இவரது தலைக்கு 25 மில்லியன் டொலர் (சுமார் ரூ.162 கோடி) விலை வைத்தது. ஆனால் அவர் அமெரிக்காவின் பிடியில் சிக்கவில்லை.

இந்த நிலையில் சிரியாவின் ரக்கா நகர் அருகே சுகோய் ரக போர் விமானங்கள், கடந்த மே மாதம் 28ஆம் திகதி இரவு நடத்திய குண்டுவீச்சில் அல்- பக்தாதி கொல்லப்பட்டு விட்டார் என ரஷ்ய இராணுவம் அறிவித்தது.

ஆனால் அவர் கொல்லப்படவில்லை. அவர் ஈராக்குக்கும் சிரியாவுக்கும் இடையே பாலைவன எல்லைப் பகுதியில் பதுங்கி இருக்கிறார் என ஈராக் இராணுவ கூட்டு நடவடிக்கைகள் கட்டளை பிரிவின் செய்தித்தொடர்பாளர் யாஹ்யா ரசூல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

"எங்களுக்கு கிடைத்துள்ள மிக துல்லியமான உளவுத் தகவல்களின் படி அல்- பக்தாதி, ஈராக்கின் எல்லைப்புற நகரமான அல்காயிம், சிரியாவின் அபுகமால் நகரங்களுக்கு இடையேதான் பதுங்கியுள்ளார்" என்று குறிப்பிட்டார்.

மேலும், "எல்லையோரப் பகுதிகளில் பாதாள பதுங்கு மிடங்களில்தான் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் தளபதிகள் பதுங்கியுள்ளனர்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# ஆர்.கே.நகர் மட்டுமல்ல ஆயிரம் தேர்தல் வந்தாலும் அ.தி.மு.க. வெற்றி பெறும்

## முதல்வர் பழனிச்சாமி நம்பிக்கை



(கோவை)

ஆர்.கே. நகர் இடைத் தேர்தல் மட்டுமல்ல, ஆயிரம் தேர்தல் வந்தாலும் அ.தி.மு.க. வெற்றி பெறும் எனவும் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நம்பிக்கை வெளியிட்டார்.

கோவை வ.உ.சி. மைதானத்தில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தான் அரசியலில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாவதற்கு முன்பே, மக்களிடமிருந்து எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் ஏழைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் ஓடி ஓடி உதவி செய்தவர் நமது பொன்மனச் செம்மல்.

எம்.ஜி.ஆரை வஞ்சித்தவர்களை மக்கள் ஏற்றுக் கொண்டார்களா? எப்போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அரசியலுக்கு அப்பா வரலாம், மகன் வரலாம், பேரன் வரலாம், கொள்ளுப் பேரன் கூட வரலாம். ஆனால் ஆட்சிக்கு வர முடியுமா? என்றால் ஒரு காலமும் முடியாது.

தேர்தல் ஆணையத்தின் நடுநிலைமையான தீர்ப்பால் உண்மையான அ.இ.அ.தி.மு.க விசுவாசிகளுக்கு இரட்டை இலை சின்னம் கிடைத்திருக்கிறது.

அம்மாவின் ஆன்மா நம் பக்கம் இருப்பது மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. கழக கண் மணிகள் அனைவரும் ஓரணியில் நின்று எதிர்கொ ண்டால் ஆர்.கே. நகர் இடைத் தேர்தல் என்ன? இன்னும் ஆயிரம் தேர்தல்களில் நாம் வெற்றியடைய முடியும்.

வரலாற்று சிறப்புமிக்க இந்தத் தீர்ப்புக்கு நாம் நன்றி செலுத்தும் வகையில் ஆர்.கே.நகர் தொகுதியின் வெற்றியை ஜெயலலிதாவின் பொற்பாதங்களில் சமர்ப்பிப்போம். அ.இ.அ.தி.மு.க. தொண்டர்களாலும், தீர்ப்பாலும் நிராகரிக்கப்பட்டவர்கள், தங்கள் இயலாமையால்எதைஎதையோ பேசி சமாளிப்பார்கள். அவர்களுடைய வாய்ஜாலம் இனிப் பலிக்காது எனவும் தெரிவித்தார். (இ-7)

# 3 ஊழல் வழக்குகளை ஒன்றாக இணைக்கும் நவாஸின் கோரிக்கை மனு நேற்று தள்ளுபடி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்புக்கு எதிரான மூன்று ஊழல் வழக்குகளை ஒன்றாக இணைத்து விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கை மனுவை இஸ்லாமாபாத் உயர் நீதிமன்று தள்ளுபடி செய்தது.

பாகிஸ்தானில் பிரதமர் நவாஸ் ஷெரிப் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது எழுந்துள்ள 'பனாமா கேட்' ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து சிறப்பு கூட்டு புலனாய்வுக்குழு அமைத்து விசாரணை நடத்த கடந்த மே மாதம் பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

கூட்டு புலனாய்வுக் குழுவின் விசாரணை அறிக்கையை ஆய்வு செய்த உச்ச நீதிமன்றம், நவாஸ் மீதான குற்றச்சாட்டுக்கு முகாந்திரம் இருப்பதாக கூறி, அவரை தகுதி நீக்கம் செய்து உத்தரவிட்டது. இதையடுத்து, கடந்த ஜுலை மாதம் 28 ஆம் திகதி அவர் பதவியை விட்டு விலகினார். அவர்மீது விரிவான விசாரணை நடத்துமாறும், ஆறு மாதங்களுக்குள் விசாரணையை முடிக்க வேண்டும் என்றும் பாகிஸ்தான் தேசிய பொறுப்புடைமை நீதிமன்றத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. தனக்கு எதிராகவும் தன்னுடைய குடும்பத்தாருக்கு எதிராகவும் தொடரப்பட்டுள்ள மூன்று ஊழல் வழக்குகளை ஒரே வழக்காக இணைத்து விசாரிக்க வேண்டும் என தேசிய பொறுப்புடைமை நீதிமன்றத்தில் நவாஸ் ஷெரிப் முறையீடு செய்திருந்தார். கடந்த நவம்பர் மாதம் 8 ஆம் திகதி அவரது கோரிக்கை நிராகரிக் கப்பட்ட நிலையில், இதே கோரிக்கையுடன் இஸ்லாமாபாத் உயர்நீதி மன்றத்தை அவர் நாடினார்.

இந்த மனு மீதான விசாரணை முடிந்து முடிவு தெரியும்வரை தேசிய பொறுப்புடைமை நீதிமன்றத்தில் நடைபெறும் விசாரணையை ஒத்திவைக்க வேண்டும் என நவாஸ் ஷெரிபின் சட்டத்தரணி கோரியிருந்தார்.


இதற்கிடையில், இஸ்லாமாபாத் உயர்நீதி மன்றத்தில் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவில் இருதரப்பு வாதங்களையும் கவனித்த இரு நீதிபதிகளை கொண்ட அமர்வு, 23-11-2017 அன்று தீர்ப்பை ஒத்திவைத்தது. நேற்றுக் காலை இவ் வழக்கில் தீர்ப்பு வெளியாகும் என பின்னர் அறிவிக்கப்பட்டது. தீர்ப்பை கேட்பதற்காக நவாஸ் ஷெரிப் நேற்று இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்துக்கு வந்திருந்தார். இந்நிலையில் நவாஸ் ஷெரிப்பின் கோரிக்கையை நிராகரிப்பதாக நீதிபதிகள் அறிவித்தனர்.(இ-7)

# வடகொரியா...

# ஆநய...

# தீர்...

## அமெரிக்க தேசிய பா...




(வோஷிங்டன்)

வடகொரியாவுடன் ஏற்பட்டுள்ள முரண் பாட்டுக்கு ஆயுதப் போராட்டம் மட்டுமே தீர்வைத் தராது எனச் சுட்டிக்காட்டியுள்ள அமெரிக்க வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஹிச் ஆர் மெக்மாஸ்டர் எிபொருள் இல்லாமல் ஏவுகணையை ஏவ முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளின் கண்டத்திற்கு ...

# எரிமலை வெ...

# சுற்றுலாத்து...




(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின், அகுன்ங் மலை... பகுதியில் ஏற்பட்ட எரிமலை வெடிப்புக் காரண... மாக சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்துள்ள... சுற் றுலாத்துறையினர் அதிக மாகக் கூடும் ப... தீவு வெறி ச்சோடி காணப்படுகின்றது.

இந்தோனேசியாவில் அண் மையில் ஏற்ப... எரிமலை வெடிப்புக் காரணமாக இம் மா... சுற்றுலாத்துறை பாதிப்படைந்துள்ளதாக சுற்று... துறை தொழிலாளர்கள் தெரி வித்தன... குறிப்பாக டிசெம்பர் மாத காலப்பகுதி... கிறிஸ்மஸ் மற்றும் வருடப் பிறப்பினை...

# இஸ்ரேல் நாட்டின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரிக்க முடிவா? அமெரிக்காவுக்கு வலுக்கும் எதிர்ப்பு



(அம்மான்)

இஸ்ரேல் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரிக்க அமெரிக்கா எடுத்துள்ள முடிவுக்கு பல அரபு நாடுகள் அதிருப்தி மற்றும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் தற்போது உள்ள ஜெருசலேம் நகரமானது யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்களின் புனிதத் தலமாகவுள்ளது. 'ஆறு நாள் போர்' என்று வரலாற்றில் குறிப்பிடும் 1967 மத்திய கிழக்கு போரின் போது ஜெருசலேம் நகரை இஸ்ரேல் கைப்பற்றியது.

இதனையடுத்து, 1980 ஆம் ஆண்டில் அந்நகரை தன்னுடன் இணைத்து இஸ்ரேல் நிர்வகித்து வருகிறது. சர்வதேச சட்ட திட்டங்களின் படி இது ஆக்கிரமிப்பு நகராகவே கருதப்பட்டு வருகிறது. கடந்தாண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது, ஜெருசலேமில் அமெரிக்கத் தூதரகம் அமைக்கப்படும் என ட்ரம்ப் தெரிவித் தார்.

இந்நிலையில், இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேம் அறிவிக்கப் பட்டால் அதை அங்கீகரிக்கத் தயாராக இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த முடிவுக்கு மத்திய கிழக்கு நாடுகள் க... எதிர்ப்பை பதிவு செய்துள்ளன. இது தொடர்... அமெரி க்க வெளியுறவு அமைச்சர் ரெக்... டில்லர்சனிடம் தொட ர்பு கொண்டு பேசியு... ஜோர்தான் வெளியுறவு அமை ச்சர் அய்மான் ... பாதி, இது ஆபத்தான விளைவுகளை ஏற்ப... தும் என தெரிவித்து ள்ளார்.

மேலும், இத்தகைய முடிவு அரபு இஸ்லாமியர்... இடையே கோபத்தை ஏற்படுத்துவத்து வதோ... இதுவரை முன்னெ டுக்கப்பட்டுள்ள சமாதா... முயற்சியை பாதிக்கும் என்று அய்மான் கூறி... ளார். அமெரிக்காவின் இந்த முடிவுக்கு எதி... சர்வதேச ஆதரவை ஒன்று திரட்டும் நடவ... கையில் பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூ... அப்பாஸ் ஈடுபட்டுள்ளார். பிரான்ஸ், துரு... ஆகிய நாடுகளின் தலைவர்களிடம் அப்பா... தொடர்பு கொண்டு பேசியுள்ளதாக அங்கிரு... வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ...




# வெளிநாடு

## ...பாவுடன் நிலவும் முரண்பாட்டுக்கு

# ...யுதப் போர் ...வாகாது!

### ...பாதுகாப்பு ஆலோசகர் சுட்டிக்காட்டு



மத்தியிலும், வட கொரியா தொடர்ந்து தனது ஏவுகணை மற்றும் அணு ஆயுத திட்டத்தை அபிவிருத்தி செய்து வருவதால் பதற்றங்கள் அதிகரித்துள்ளன. தன்து ஹவாசாங்-15 என்ற சமீபத்திய ஏவுகணை 4,475 கிலோ மீற்றர் உயரத்தில், 960 கிலோ மீற்றருக்கு 53 நிமிடங்கள் பறந்ததாகவும், முழு அமெரிக்கா கண்டத்தையும் தாக்கும் வல்லமை இதற்கு இருப்பதாவும் வட கொரியா தெரிவித்திருந்தது. இதனால், அமெரிக்காவின் மேற்கு கடற்கரையில் கூடுதல் பாதுகாப்பை நிலைநிறுத்தப் பாதுகாப்புத்துறைக்கு அறிவுத்தப்பட்டது. வட கொரியா முன்பு சோதித்த ஏவுகணைகளை விட சமீபத்திய ஏவுகணை அதிக உயரம் பறந்தது.

இந்நிலையில், கலிபோர்னியாவில் நேற்று நடந்த ஒரு கூட்டத்தில் ஹிச்ஆர் மெக்மாஸ்டர் தெரிவிக்கையில்,

வடகொரியா நம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறது. போருக்கான சாத்தியங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் ஆயுதப்போரை தவிர்த்து இப்பிரச்சினையைத் தீர்க்க பல வழிகள் உள்ளன. சீனாவின் நலனைக் கருத்தில் கொண்டு இப்பிரச்சினையைத் தீர்க்க சீனாவிடம் கேட்டுள்ளோம். எரிபொருள் இல்லாமல் ஏவுகணை ஏவ முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## ...வெடித்ததால் ...துறை வீழ்ச்சி



கொண்டாடும் வகையில் அதிகளவான சுற்றுலாத்துறையினர் பாலித்தீவில் கூடுவதுண்டு. ஆனால் இம்முறை அது பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஹோட்டல்கள், விடுதிகள், உணவகங்கள், கடற்கரைப் பகுதி என்பன வெறிச்சோடிப் போயுள்ளன. மேலும் வியாபார ஸ்தாபனங்களில் வெறுமையாக காட்சியளிக்கின்றன. வழமையாக சூரிய ஒளிக்குளியல் மற்றும் கடல் உணவுகளை விரும்பி சுற்றுலாத்துறையினர் பாலி தீவிற்கு வருவர். ஆனால் தற்போது எரிமலை வெடிப்பின் தாக்கம் சுற்றுலாத்துறையை பாதித்து மக்களின் வருமானத்தையும் பாதித்துள்ளது. இதேவேளை டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் சுமார் 1.2 மில்லியன் சுற்றுலாத்துறையினர் பாலிக்கு வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# லொறி கவிழ்ந்த விபத்தில் சிம்பாவேயில் 21 பேர் பலி!

(ஹராரே)

சிம்பாவே நாட்டில் லொறி கவிழ்ந்த விபத்தில் சிக்கி 21 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிம்பாவே நாட்டின் மேற்குப் பகுதியிலுள்ள ஷோலுட்ஷோ மாவட்டத்தில் லொறி ஒன்றில் 70 இற்கு மேற்பட்ட பயணிகள் நேற்று முன்தினம் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

சிறிது தூரம் சென்றதும் லொறி தனது கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் லொறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் லொறியில் பயணம் செய்த 21 பேர் உயிரிழந்தனர்.


தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். அங்கு படுகாயமடைந்த 21 பேரை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சையளித்து வருகின்றனர்.

இதுகுறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணையில், சம்பவ இடத்தில் 15 பேரும், வைத்தியசாலையில் 6 பேரும் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# மியன்மார் நாட்டில் ரோஹிஞ்யா என்ற வார்த்தையைப் பயன்படுத்தாதது ஏன்?

## போப் ஆண்டவர் பிரான்சிஸ் விளக்கம்





(வாடிகன்)

மியான்மார்நாட்டில்ரோஹிஞ்யா என்ற வார்த்தையைப் பயன்படுத்தாதது ஏன் என்பது குறித்து போப் ஆண்டவர் பிரான்சிஸ் தனது விளக்கத்தை தெரிவித்துள்ளார்.

போப் ஆண்டவர் பிரான்சிஸ், சமீபத்தில் ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். ரோஹிஞ்யா முஸ்லிம் மக்கள் வன்முறைக்கு ஆளான மியன்மாருக்கும் அவர் சென்றிருந்தார். ஆனால் அந்தப் பயணத்தின் போது அவர் ரோஹிஞ்யா என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. இது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இது குறித்து போப் ஆண்டவர் பிரான்சிஸ், தனது ஆசிய நாடுகள் பயணத்தை முடித்துக்கொண்டு, நேற்று முன்தினம் நாடு திரும்பும் போது விமானத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது.

நான் அந்த வார்த்தையை பயன்படுத்தி இருந்தால், அது பேச்சு வார்த்தைக்கான கதவை மூடுவது போல அமைந்து விடும் நான் நினைத்தது. அந்த வார்த்தை ஏற்கனவே நன்கு அறிமுகமானது தானே என்பது தான். இரு நாட்டுத் தலைவர்களும் (மியன்மார்-வங்காள தேசம்) பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அது ஆபத்தை ஏற்படுத்தும் என்பதால் அதை நான் தவிர்த்தேன்.

தவிரவும், நான் வாடிகனில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்த மக்களின் துயரத்தை பற்றி சொல்லி இருக்கிறேன்.

என் தனிப்பட்ட சந்திப்புக்களில், பகிரங்கமாக பேசுவதைத் தாண்டி நான் பேசி இருக்கிறேன். பகிரங்கமாக பேச்சுவார்த்தைக்கான கதவை நான் மூட விரும்பவில்லை. பேச்சுவார்த்தை எனக்கு திருப்தியைத் தருகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தென்கொரியாவில் மீன்பிடி படகு கடலில் கவிழ்ந்து 13 பேர் மரணம்



(சியோல்)

தென்கொரியாவில் மீன்பிடி படகு கடலில் கவிழ்ந்த விபத்தில் படகில் சென்ற 13 பேர் பலியாகியுள்ளனர்.

தென் கொரியாவில் மேற்கு கடலோர பகுதியில் உள்ள இன்சியான் என்ற இடத்தில், மீனவர்கள் சிலர் ஒரு படகில் சென்று மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். இந்த படகில் 2 மாலுமிகள் உட்பட 22 பேர் இருந்தனர்.


அப்போது அவ்வழியாக வந்த எரிபொருள் நிரப்பும் கப்பல் மீது மீன்பிடி படகு எதிர்பாராதவிதமாக மோதியது. இதில் அந்த படகு நீரில் கவிழ்ந்து மூழ்கியது.

இது குறித்து உடனடியாக கடலோர காவல்படைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில், அவர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீவிர மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இருப்பினும் 13 பேரை பிணமாகத்தான் மீட்க முடிந்தது. நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த 7 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் 2 பேர் மாயமாகி உள்ளனர். அவர்களை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. கடற்படைக்கு சொந்தமான 5 ஹெலிகொப்டர்கள் மற்றும் 19 கப்பல்கள் மீட்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன. (இ-7)

# ஆப்கானில் தற்கொலைப்படைத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட ஆறு பேர் பலி



(காபூல்)

ஆப்கானிஸ்தானின் ஜலலாபாத் நகரில் மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைப்படைத் தீவிரவாதி நடத்திய தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 6 பேர் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானின் நாங்கார்ஹர் மாகாண தலைநகரான ஜலலாபாத்திலுள்ள கால்பந்து மைதானத்திற்கு வெளியே நேற்று முன்தினம் மாலை மோட்டார் சைக்கிளில் வந்த தீவிரவாதி, கூட்டமான மக்கள் பகுதி அருகே வந்து, தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்க வைத்தான்.

இந்தக் கோரத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 6 பேர் பலியாகியுள்ளதாக அம்மாகாண செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார். மேலும், 13 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த தாக்குதல் நடைபெறுவதற்கு சில மணி நேரத்திற்கு முன்னர், மைதானத்திலுள்ளே அரசு ஆதரவு கூட்டம் ஒன்று நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அடுத்த ஜனாதிபதி கோத்தபாய கருத்துக் கணிப்பு முழுப்பொய்

## கொழும்பு பல்கலைக்கழகம் நிராகரிப்பு



(கொழும்பு)

2020 ஆம் ஆண்டில் இலங்கையின் ஜனாதிபதி யார் என்பது குறித்த கருத்துக் கணிப்பு முழுப் பொய் என கொழும்பு பல்கலைக் கழகம் அறிவித்துள்ளதாக கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் இலங்கையின் ஜனாதிபதி யார் என்பது தொடர்பில் நேற்று முன்தினம் சிங்கள பத்திரிகையொன்றில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், இந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பொய்யானவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டில் யார் ஜனாதிபதியாக தெரிவாக வேண்டும், தலைவர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்து கொழும்பு பல்கலைக்கழக தொடர்பாடல் பீடம் எவ்வித கருத்துக் கணிப்புக்களையும் மேற்கொள்ளவில்லை என தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வமாக இவ்வாறான எந்தவொரு கருத்துக் கணிப்பும் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை என தொடர்பாடல் பீடம் தெரிவித்துள்ளது.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் கருத்துக் கணிப்பு என்ற அடிப்படையில் செய்தி வெளியிடுவதன் மூலம் வாசகர்கள் பிழையாக வழி நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

எந்தவொரு தனிப்பட்ட நபரும் கருத்துக் கணிப்புக் களை நடத்தி அதனை பிரசுரிக்க அனுமதியுண்டு என்ற போதிலும் அதற்காக பல்கலைக்கழகத்தின் பெயரைப் பயன்படுத்த அனுமதிக்க முடியாது எனவும் தொடர்பாடல் பீடம் தெரிவித்துள்ளது. (இ-7)

# கொழும்பு துறைமுகத்தில் பிரெஞ்சுப் போர்க்கப்பல்





(கொழும்பு)

பிரெஞ்சுக் கடற்படையில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட போர்க் கப்பலான FS Auvergne நான்கு நாட்கள் நல்லெண்ணப் பயணமாக நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ளது.

புதிதாக கட்டப்பட்ட பல நோக்குப் போர்க்கப்பலான FS Auvergne இந்தியப் பெருங்கடலில் முதலாவது நடவடிக்கைப் பயணத்தை மேற்கொண்டுள்ளது.

ஓகஸ்ட் 18ஆம் திகதி ரோலோன் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட இந்தப் போர்க்கப்பல் இந்தியாவின் கர்வார் கடற்படைத் தளத்துக்கு ஒக்டோபர் மாதம் சென்றிருந்தது. அங்கிருந்து நேற்று முன்தினம் கொழும்புக்கு வந்துள்ளது.

இந்தக் கப்பலை இலங்கை கடற்படையினரும், பிரெஞ்சுத் தூதரக அதிகாரிகளும் கொழும்பு துறைமுகத்தில் வரவேற்றனர்.

142 மீற்றர் நீளமான இந்தப் போர்க்கப்பலில், Aster மற்றும் Exocet MM ரகத்தைச் சேர்ந்த 40 ஏவுகணைகள், MU 90 ரோபிடோக்கள், உள்ளன.

27 கடல் மைல் வேகத்தில் பயணிக்கக் கூடிய இந்தப் போர்க்கப்பல் தொடர்ந்து 6000 மைல்களுக்குப் பயணம் செய்யக் கூடியது.

உலங்குவானூர்தி அணியொன்றையும் உள்ளடக்கிய இந்தப் போர்க்கப்பலில், 142 பிரெஞ்சு மாலுமிகள் பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 5 ஆண்டுகளுக்குப் பின் தமிழ் குடும்பத்தை இலங்கைக்கு நாடு கடத்தியது கனடா

(கொழும்பு)

ஐந்து ஆண்டுகளாக கனடாவில் வசித்து வந்த தமிழ் குடும்பம் ஒன்று, புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை மொன்றியால் விமான நிலையத்தில் இருந்து விமானம் ஒன்றில் ஏற்றி அனுப்பப்பட்டுள்ளனர்.

லோரன்ஸ் என்பவரை தலைவராகக் கொண்ட இந்தக் குடும்பத்தினர், மனிதாபிமான அடிப்படையில் கனடாவில் நிரந்தரக் குடியுரிமைக்கு விண்ணப்பித்திருந்தனர்.

எனினும் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அடுத்தே, இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

போரின் போது கிழக்கு மாகாணத்தில் ஐ.நா. அமைப்புக்காக பணியாற்றிய லோரன்ஸ், 2012 ஆம் ஆண்டு தனது குடும்பத்தினருடன் கனடாவில் தஞ்சமடைந்திருந்தார்.

எனினும் கனடாவில் நிரந்தர வதிவிட உரிமை மறுக்கப்பட்டதை அடுத்தே,



இவரது குடும்பத்தினர் நேற்று முன்தினம் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

நாடு கடத்தும் முடிவை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்று கனேடிய அரசாங்கத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### ஒருவருடனேயே பேசிக்கொண்டிருப்பதா?

சிலர், திருமணங்களுக்கோ கூட்டங்களுக்கோ, வேறு சில நிகழ்ச்சிகளுக்கோ சென்றால் சப்பக் என்று ஒருவருடனேயே ஒட்டிக் கொண்டு விடுவார்கள்.

அவர் பக்கத்திலேயே அமர்ந்து ஊர்க் கதை, உலகக் கதை, சொந்தக் கதை, சோகக் கதையெல்லாம் பேசுவார்கள். திருமணத்தில் அல்லது அந்த நிகழ்ச்சியில் உள்ள குறைபாடுகளை மிகைப்படுத்தி வம்பளப்பார்கள்.

சுற்றியிருக்கும் எவரையும் பற்றியும் கவலைப்பட மாட்டார்கள். யார்வந்தார்கள், யார் போனார்கள், என்ன நடந்தது என்று எதுவுமே இவர்களுக்குத் தெரியாது. நீங்க அந்தப் புதுமனைப்புகுவிழாவுக்கு வந்திருந்தீர்களா? நான்கூட வந்திருந்தேனே! உங்களைப் பார்க்கவே இல்லையே என்பார் இவர். அவரோ நீங்கதான் அந்த வழுக்கைத் தலை ஆசாமியை விட்டு நகரவே இல்லையே! அட்டையாட்டம் ஒட்டிக்கிட்டு இருந்தீங்களே! என்பார் ஏக்கத்தோடு.

பலரும் ஒன்று கூடும் வாய்ப்புக்கள் உருவாகும் போது அதை நழுவவிடக் கூடாது. இன்றைக்கு இருக்கும் இந்த வேகமான உலகில் நாமெல்லாம் ஆற அமரப் பேசிக் கொண்டிருக்கவா முடிகிறது?

விசேடங்களில் சந்திப்பது என்றால் நிலைமையே வேறு, பிடிக்கிறதோ இல்லையோ பல மணி நேரங்களைத் திண்ணையிலோ ஜமக்காளத்திலோ நாற்காலியிலோ அமர்ந்து தேய்த்தே ஆக வேண்டும். இப்படிக் கட்டாயமாகக் காலத்தை ஓட்ட வேண்டிய சந்தர்ப்பத்தை மிக இனியதாக ஆக்கிக் கொள்ள முடியும்.

மெல்லப் பார்வையை சுழற்ற வேண்டும். கொஞ்சம் தெரிந்த முகமென்றாலும் அருகே போய் அமர்ந்து பேச வேண்டும். உள்ளங்களையும் உணர்வுகளையும் இனிமையாகப் பரிமாறிக் கொள்ள வேண்டும். அங்கிருந்து பார்வையை மறுபடி சுழற்றல் அட! நம்ம பிரண்ட் ராமு, அட நம்ம சித்தப்பா மகன்! என்று நகர்ந்தபடி இருக்க வேண்டும்.

பலர் எண்ணுவது போல போய்ப் பேசுவது கௌரவக் குறைச்சல் அல்ல. மாறாக நம் மதிப்பை அது மிகவும் உயர்த்தும்.

ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன்.

அவர் வந்து என்னிடம் பேசட்டுமே! என்னைப் பார்த்தும் கூடச் சும்மாவே அமர்ந்திருக்கிறார் பார். திமிரு அதிகம் அந்தாளுக்கு! என்று ஒருவரைப் பற்றி நீங்கள் முடிவுக்கு வந்துவிட்டதாக வைத்துக் கொள்வோம். இப்போது லேனா சொன்னதற்காக ஒரு முயற்சி என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டு நீங்கள் எழுந்து போய் அவரிடம் பேசிப் பாருங்கள்.

அட என்னமாய்ப் பழகுகிறார்! நாம் இவரைப் போய் எவ்வளவு தவறாக எண்ணிவிட்டோம்! என்று நிச்சயம் பின்னால் வருந்துவார்கள். 100க்கு 99 பேர் இந்த விடயத்தில் நல்லவர்களே! வயது, தகுதி, நெருக்கம், உரிமை இருந்தால் அவர்களை நம் இருக்கைக்கே வரவழைத்துப் பேசலாம்.

நமக்கு எல்லோரும் வேண்டும். ஒருவரை மட்டுமே ஒட்டிக்கொண்டு இருக்கக் கூடாது! நம் நேரம் பலருக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதைவிடுத்து ஒருவருடனேயே அந்த நிகழ்ச்சி முழுக்க இருந்து அவருடனேயே சாப்பிட்டு, அவருடனேயே கைகழுவி, அவருடனேயே தாம்பூலம் வாங்கிக் கொண்டு புறப்பட்டால் நம்மைப் பற்றிய நல்லெண்ணம் மற்றவர்களுக்கு உருவாகாமலேயே போய்விடும்! அதுமட்டுமல்ல! இந்த உலகத்தில் எத்தனையோ விடயங்கள் தெரியாமலேயே இருந்துவிடும்.

லேனா தமிழ்வாணன்

# மாற்றுத்திறனுடைய பிள்ளைகள் கல்வி கற்க வடமராட்சியில் தனிப்பிரிவு உருவாக வேண்டும்

## மாகாணசபை உறுப்பினர் அகிலதாஸ் விருப்பம்





(கரணவாய்)

மாற்றுத்திறனுடைய பிள்ளைகள் கல்வி கற்பதற்காக தனியான பிரிவு ஒன்றினை வடமராட்சி கல்வி வலயத்தினுள் உருவாக்க வேண்டும் என்பது தனது நோக்கமாக இருக்கின்றது என வட மாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸ் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வதேச மாற்றுத்திறனுடையோர் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி மண்ணில் நான்கு பாடசாலைகளில் இந்த விசேட தேவையுடை பிள்ளைகள் ஆங்காங்கே பகுதி பகுதியாக கல்வி பயின்று வருகின்றார்கள். ஆயினும் இவர்கள் அனைவரையும் ஒன்றாக்கி ஒரு விசேட பிரிவினை உருவாக்கி கல்வி புகட்ட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. இதன் மூலம் இந்த மாணவர்களின் அறிவுத்தன்மையை அதிகரிக்க முடியும் என்பதுடன் அவர்களை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் இலகுவாக இருக்கும் என நான் நினைக்கின்றேன். இன்று இந்த நிகழ்வுகளை இந்த மாற்றுத்திறனுடைய மாணவர்கள் செய்தமையை நான் கண்டு வியந்துவிட்டேன். அவர்களை இந்நிகழ்விற்கு பயிற்றுவித்த ஆசிரியருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த மாணவர்களுக்காக வடமராட்சி மண்ணில் தனியான ஒரு பிரிவு பாடசாலையில் உருவாக்கப்பட வேண்டும் அதற்காக நான் எதிர்காலத்தில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தே தீருவேன் என்பதை கூறிக்கொள்கின்றேன். நான் மாகாணசபை உறுப்பினராக இருந்துவரும் கடந்த 2 வருடங்களில் பல்வேறுபட்ட மக்களுக்கு உதவி புரிந்துள்ளேன். ஆனால் இவ்வாறு வடமராட்சியில் இத்தனை விசேட தேவையுடைய மாணவர்கள் இருக்கின்றார்கள் என்பதை இன்றுதான் தெரிந்து கொண்டேன். அவர்களுக்கு கடந்த வருடங்களில் என்னால் உதவி செய்ய முடியாது போனமைக்கு மனம் வருந்துகின்றேன். அடுத்த ஆண்டில் எமது மாகாண சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் அவர்களின் தேவைக்காகவும் எனது நிதியினை பங்கீடு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன் என்பதையும் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# தலதா மாளிகைக்கு சொந்தமான காணியில் புதையல் அகழ்வு

(கொழும்பு)

தலதா மாளிகைக்கு சொந்தமான காணி ஒன்றில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட மூவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலதாமாளிகைக்கு சொந்தமானகலேவெல வஹ கோட்டே பகுதியிலுள்ள காணியொன்றிலேயே பல மாதங்களாக இவ்வாறு புதையல் தோண்டும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளது.

தம்புள்ளை பொலிஸ்விசேட அதிரடிப்படை குழுவொன்றினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து பெக்கோ இயந்திரம், மோட்டார் சைக்கிள், கல்லை துளையிடும் கருவி மற்றும் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
"மதசார்பற்றது "ரகசியமானது " இல்வச சேவை
021 222 8117, 077 900 8776
வவனியாவில்: (024) 324 4444
(சனி), ஞாயிறு காலை 9.00 - 1.00)



## புனித அந்தோனியாருக்கு நன்றி!

நொவீனா கோரிக்கை நிறைவேற்றப்பட்டது புனிதரே!
எனது கோரிக்கையை நிறைவேற்றியதற்கு எனது நன்றிகள்!

தொடர்ந்து ஒன்பது செவ்வாய்க்கிழமைகள் உங்களை வந்து பிரார்த்தித்ததால் எனது கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

புனிதரான உங்களுடன் இறைவன் சேர்ந்திருந்து எம்மை காத்தருள்வாராக! (1562)

திருமதி. சா.கீதா


# வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் இடர் அனர்த்த நிலை ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு தயார்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இடர் அனர்த்த நிலை ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு தயாராக இருப்பதாக தேசிய அனர்த்த சேவை மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வெள்ளம் மற்றும் காற்றினால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு விரைவாக நிவாரணங்களை வழங்குவதற்காக 17 கோடியே 70 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தேசிய இடர்முகாமைத்துவ பணிப்பாளர் சமிந்த பத்திராஜா தெரிவித்துள்ளார்.

முழுமையாகப் பாதிப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர், இழப்பீடுகளை வழங்க அரசாங்கம் தயாராகியுள்ளது. அனர்த்தங்கள் காரணமாக 762 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. ஓரளவுக்கு பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 29 ஆயிரத்து 246 ஆகும். இருப்பிடங்களை இழந்த குடும்பங்களின் எண்ணிக்கை 1,424 ஆகும். இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரத்து 56 பேர் பாதுகாப்பான 65 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 35 ஆயிரத்து 226 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 986 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

16 மாவட்டங்களில் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டது. இந்த மக்களுக்கு நிவாரணத்தை வழங்குவதற்காக நேற்று முன்தினம் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் அரச வங்கிகள் திறந்திருந்தன. இந்த மக்களுக்கு துரிதமாக நிவாரணத்தை வழங்குவதற்காக மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு தலா 10 இலட்சம் ரூபா வீதம் நிதி வழங்கப்பட்டுள்ளது. 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்காக காப்புறுதி பொறுப்பு நிதியத்தில் இருந்து நிதி வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அனைத்து அதிகாரிகளுக்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (இ-7)

# எதிர்காலத்தில் போராட்டங்களைத் தடுக்க மோப்ப நாய்களை பயன்படுத்தத் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை தடுத்து நிறுத்த பொலிஸ் மோப்ப நாய்களைப் பயன்படுத்த பொலிஸ் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் நடத்தப்படும் போராட்டங்களை தடுக்கவும் இவ்வாறு பொலிஸ் மோப்ப நாய்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை கலைப்பதற்கு கலகத் தடுப்புப் பொலிஸ் பிரிவினருடன் இணைந்து செயற்படுவது குறித்து பொலிஸ் மோப்ப நாய்களுக்கு பயிற்சியளிக்கப்படுகின்றது. இதற்கென ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸின் இரண்டு அதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களின் போது பொலிஸார் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதனை தடுக்கவும், நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் பொலிஸ் மோப்ப நாய்களுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

பொலிஸ் மோப்ப நாய்களுக்கு சிறந்த முறையில் இலங்கை அதிகாரிகள் பயிற்சி வழங்கியுள்ளதாக ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸ் அதிகாரிகள் பாராட்டியுள்ளனர். (இ-7)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா:70 சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/8001

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 9
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:சட்டத்தரணி
தொ.இ: B/8002

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி.பா: சூரி செவ் 2 இல்
தகைமை/தொழில்:ஆசிரியர்
தொ.இ: B/8003

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி
சூரிசெவ் 4 இல்
தகைமை/தொழில்:A/L/கட்டார்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/8004

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்: 5'
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/8027

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 19சூரி செவ் 6 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/8032

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 18
உயரம்: 165cm
தகைமை/தொழில்:BSc/ பொறியியலாளர்
தொ.இ: G/8034

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/8036

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# வடக்கிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியில் கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் பங்கு

"கூட்டுறவே நாட்டுயர்வு"என்ற முதுமொழிப் பயன்பாடு கூட்டுறவுச் சங்கங்களின் வினைத்திறனான செயற்பாட்டிற்கு செயல் வடிவம் கொடுக்கிறது. கூட்டுறவு என்ற சொற்பயன்பாட்டிற்கு பல்வேறு அறிஞர்கள் பலவித விளக்கங்களைக் காண விளைந்தனர். அத்தகைய அறிஞர்களது கருத்து நிலைகளை ஒருங்கே நோக்குகின்ற போது கூட்டுறவு என்பது மக்கள் நலன்சார்ந்த. மக்கள் தங்கள் பொருளாதார நலன்களை பெருக்கிக் கொள்ளும் நோக்குடன் தன்னிச்சையாகச் சேரும் அமைப்பு கூட்டுறவு என்ற வரைவிலக்கணத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றமையை அறிந்து கொள்ளலாம். இது முதலாளித்துவத்திற்கும் பொதுவுடைமைக்கும் இடைப்பட்டதாக விளங்குகிறது. அதாவது எல்லோரும் ஒருவருக்கென்பது முதலாளித்துவம். ஒவ்வொருவரும் எல்லோருக்கும் என்பது பொதுவுடைமை. ஆனால் கூட்டுறவு என்பது ஒவ்வொருவரும் எல்லோருக்கும், எல்லோரும் ஒவ்வொருவருக்கும் என்ற நிலையில் இருக்கிறது. எல்லோரும் ஒருவருக்கொருவர் உதவி செய்து தமது வாழ்வை மாத்திரமன்றி பிறரது வாழ்வையும் வளப்படுத்த வேண்டும் எனக் கூட்டுறவு போதிக்கிறது. மேலும் கூட்டுறவின் உயர்ந்த கோட்பாடுகள் ஏனைய நிறுவனங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. முதலாளித்துவ அமைப்பில் காணப்படும் ஜனநாயக அம்சங்களை பொதுவுடைமை நிராகரிக்கிறது. தனிமனித கருத்துச் சுதந்திரத்தையும் தொழிற் சுதந்திரத்தையும் பொதுவுடைமை நிராகரிக்கிறது. ஆனால் முதலாளித்துவம் ஏற்றுக் கொள்கின்ற ஜனநாயக முறைகளை கூட்டுறவு ஏற்றுக் கொள்கிறது. எனவேதான் இவ்வமைப்பை முதலாளித்துவத்திற்கும் பொதுவுடைமைக்கும் இடைப்பட்டதாக விளங்குகின்றது எனக் கூறப்படுகிறது.

கூட்டுறவுசங்கம் எங்கே? எப்போது? தோன்றியது என்பதற்குப் பல்வேறு அறிஞர்களிடமிருந்து பலவித வாதப் பிரதிவாதங்கள் காணப்பட்டாலும் பொதுவாக 1761 இல் ஸ்கொட்லந்தில் சில நெசவாளர்கள் ஒன்றிணைந்து ஒரு அமைப்பை ஸ்தாபித்தனர். இதுதான் உலகிலே முதல் கூட்டுறவுச் சங்கம் என்று கருதப்படுகிறது. அதன் செயற்பாடுகள் பற்றிய மேலதிக தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. இக் கூட்டுறவு அமைப்பின் ஸ்தாபகத்துடன் மேலும் பல கூட்டுறவு அமைப்புக்கள் பல நாடுகளிலும் முளைவிடத் தொடங்கின. இவ் அமைப்புக்கள் மூலம் மக்கள் பலவித பொருளாதார நன்மைகளை உச்ச அளவில் அடைந்தமையால் உலகிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைத்து ஒரு பொதுவான அமைப்பொன்றை ஸ்தாபிக்க வேண்டிய தேவை எழுந்தது. இதன் காரணமாக அகில உலக கூட்டுறவு



அமைப்பு 1895ம் ஆண்டு சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரை தலைமையகமாகக் கொண்டு உதயமானது. இவ் அமைப்பில் 248 நாடுகள் அங்கத்துவம் பெற்றிருந்தன. இவ் அமைப்புக்கென சில கொள்கைகள், யாப்பு விதிகள் உள்ளன. மேலும் மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்டு மக்களால் நிர்வகிக்கப்படும் பொது நிறுவனங்களே கூட்டுறவுச் சங்கங்களாகும். இவற்றின் முக்கிய நோக்கமாக, அங்கத்தவர்களின் பிரச்சினைகளை முற்றாக களைந்து, அவர்களின் சமூக, பொருளாதார, கலாசார அம்சங்களை மேம்படுத்துவதே கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கமாகும். அது மாத்திரமன்றி, கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சமூகத்திலுள்ள ஏனைய நிறுவன அமைப்புகளுக்குமிடையே பல ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் காணப்படுகின்றன. ஏனைய நிறுவனங்களுக்கில்லாத தனிச் சிறப்புகளும் உயர்கொள்கைகளும் கூட்டுறவுச் சங்கங்களிடம் காணப்படுகின்றன.

## 1950 இற்குப் பின்னரான கூட்டுறவுத்துறை வளர்ச்சி

இலங்கை அரசு, இலங்கை கூட்டுறவு இயக்கத்தின் அப்போதைய நிலை பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் ஆராய்ந்து தகவுரை வழங்குமாறு அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினரான வடக்கின் பிரபலமான கூட்டுறவாளர் வீரசிங்கம் தலைமையில் 1953இல் நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமித்தது. இந்த நாடாளுமன்ற தெரிவுக்குழு இலங்கை கூட்டுறவு இயக்கத்தின் நிலைமை பற்றி நன்கு ஆராய்ந்து இலங்கை கூட்டுறவு இயக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கான தனது தகவுரைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது. இருந்தும் இலங்கை கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு தடையாகவிருந்த அரசாங்கத்தின் எல்லை கடந்த தலையீட்டை இக்குழு சுட்டிக்காட்டத் தவறி விட்டது. கூட்டுறவுத்துறையை வினைத்திறனான முறையில் செயற்படுத்துவதற்கு கடந்தகால அரசுகள் பலவித திருத்தச் சட்டங்களை கொண்டு வந்தாலும் எதிர்பார்த்த பலன்களை பெருமளவு கொடுக்கவில்லை. இந்த நிலையில் 1956 ஆம் ஆண்டிற்கு பின்னர் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிரதமரான S.W.R.D. பண்டாரநாயக்க கூட்டுறவுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு பல வழிமுறைகளைக் கையாண்டார். அவ் அரசாங்கம் பொருளாதாரத்துறையில் ஒரு புரட்சிகரமான கொள்கையைக் கடைப்பிடித்தது.

வெளிநாட்டு இறக்குமதிகளை தடை செய்ததுடன் அதற்கு பதிலாக உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவித்தது. இதனால் உள்நாட்டு விவசாய கைத்தொழிற்பொருட்களுக்கு போதிய சந்தை வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் உள்நாட்டு விவசாயம், சிறிய, நடுத்தர கைத்தொழில்கள் தோற்றமெடுத்து வளர்ச்சியடையலாயின. இத்துறைகளில் பெருமளவு தங்கியிருந்த கூட்டுறவுத்துறையும் வளர்ச்சியடைந்தது. இக்காலகட்டத்தில் கூட்டுறவுத்துறையில் காத்திரமான மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெருமை அன்றைய நாடாளுமன்ற உறுப்பினரான அமரர் வி. வீரசிங்கத்தையே சாரும்.இவரே பிற்காலத்தில் இலங்கையின் கூட்டுறவின் நந்தையாக சிறப்பிக்கப்படுகிறார்.

அரசாங்கம் தனது பணிகளை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கு கூட்டுறவு நிறுவனங்களே உகந்தவை என்பதை அன்றைய அரசாங்கம் உணர்ந்தமையால் பல கூட்டுறவு நிறுவனங்கள் இனங்காணப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் விவசாயிகளினதும் சிறு கைத்தொழிலாளர்களினதும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தன்னோக்கு கூட்டுறவுச் சங்கங்களை விட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதே சிறந்தது என்ற கருத்தியல் வலுப்பெற்றமையினாலும் தன்னோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் பல குறைபாடுகள் இருந்ததினாலும் அவற்றுக்கு பதிலாக பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதே சிறந்தது என்பதால் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் பல தோற்றம் பெறலாயின. 1972ஆம் ஆண்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் மறுசீரமைத்து முடிந்ததும் 1972ஆம் ஆண்டுவரை நடைமுறையிலிருந்த கூட்டுறவுச் சட்டங்கள் யாவும் இரத்துச் செய்யப்பட்டன. இச் சட்டங்களிலுள்ள தேவையான சில அம்சங்களை உள்ளடக்கி, புதிய பல அம்சங்களையும் சேர்த்து 1972 இல் 5ஆம் இலக்க புதிய கூட்டுறவுச்சட்டம் நாடாளுமன்றினால் உருவாக்கப்பட்டது. இச் சட்டத்தின் மூலம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் யாவும் மறுசீரமைக்கப்பட்டதுடன் பல்வேறு மாற்றங்களுக்கும் உள்ளாகின. இதனைத் தொடர்ந்து, அகில இலங்கை கூட்டுறவுச் சம்மேளனத்தினதும் மாவட்டங்கள்தோறும் இயங்கிய மாவட்ட கூட்டுறவுச் சமாசங்களதும் பதிவுகள் யாவும் இரத்து செய்யப்பட்டு அவற்றின் சொத்துக்களையும் பணியாளர்களையும் உள்ளடக்கியதாக இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை என்ற தேசிய ரீதியிலான கூட்டுறவுக் கோட்பாட்டு நிறுவனம் 1972 இல் உருவாக்கப்பட்டது. இதன் தோற்றத்தை தொடர்ந்து அதே ஆண்டு 12ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டம் நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து கூட்டுறவுச் சங்க் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து இயன்றளவு உச்சப்பயனைப் பெறுவதற்கும் என கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

## வடமாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் சமகாலச் செல்நெறி

வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும் மொத்தமாக 114 சங்கங்கள் இயங்கிவருகின்றன. இதன்படி யாழ்.மாவட்டத்தில் 54 சங்கங்களும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் முறையே 17,17,16,10 சங்கங்களுமாக மொத்தம் 114 சங்கங்கள் இயங்கி வருகின்றன. முன்னர் வடமாகாணத்தில் கூட்டுறவு அமைப்புக்கள் சிறப்பாக வளர்ச்சியடைந்திருந்தன. பல்வேறு நோக்கம் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு வினைத்திறனான முறையில் இயங்கி வந்ததுடன் இலாபமீட்டிய துறையாகவும் இக் கூட்டுறவுத்துறை விளங்கியது. தற்போதுள்ள சூழ்நிலையில் கூட்டுறவுத் துறையானது பல்வேறு சவால்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து வருகிறது. கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு போதியளவு சம்பளம் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் வலுவடைந்து வருகிற நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் பலவும் நட்டத்திலேயே இயங்கி வருகின்றன. எனவே இந்த நேரெதிர் கருத்து நிலைகளை ஒரே நேரத்தில் சாதகமாக அடைய முடியாது. அதாவது கூட்டுறவு நிறுவனங்கள் இலாபத்தில் இயங்கினால் ஊழியர்களுக்கு உயர்ந்த சம்பளத்தை வழங்க முடியும்.மாறாக, அவை நட்டத்தில் இயங்கின் ஊழியர்களது சம்பளத்தை உயர்த்த முடியாது. எனவே இந்த நேரெதிர் நோக்கங்களை சமநேரத்தில் அடைவதென்பது சாத்தியம் இல்லை. எனவேதான் கூட்டுறவு நிறுவனங்களை வினைத்திறனான முறையில் இயங்கச் செய்து உச்ச இலாபத்தை அடைவதற்குரிய வழிவகைகளை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியம்.

மேலும், கூட்டுறவுத்துறையில் தற்போது அதிகரித்துள்ள தேவையற்ற அரசியல் தலையீடுகளால் இன்று கூட்டுறவுத்துறை பின்னடைவு கண்டு வருகிறது. கூட்டுறவுத்துறை சிறப்பாக இயங்க வேண்டுமெனில் வினைத்திறன் மிக்க ஊழியர்களின் சேவையே அவசியமானது. அது மட்டுமன்றி,ஆட்சியதிகாரங்களில் இருக்கும் அரசாங்கங்கள் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளில் எல்லை கடந்த தலையீடுகளையும் கட்டுப்பாடுகளையும் மேற்கொள்கின்றன. அத்துடன் கூட்டுறவுச்சங்கங்களைப் பதிவு செய்யவும், கட்டுப்படுத்தவும், நெறிப்படுத்தவும் விசேடமான கூட்டுறவுச் சட்டங்களை இயற்றியுள்ளன.

இது கூட்டுறவுத் துறையின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு தடையேற்பட வாய்ப்பிருக்கிறது. எது எப்படியிருப்பினும் அரசாங்கத்தின் ஆதரவும் ஒத்துழைப்பும் இல்லாமல் எந்தவொரு அமைப்பும் சிறப்பாக வளர்ச்சியடைய முடியாது என்கின்ற யதார்த்த சிந்தனையில் கூட்டுறவு அமைப்பும் இதற்கு விதிவிலக்கல்ல எனலாம். எனவே, நலிவடைந்து சென்று கொண்டிருக்கும் கூட்டுறவுத்துறையை தூக்கி நிறுத்த வேண்டிய பாரிய பொறுப்பு அரசு, மக்களின் கைகளிலேயே இருக்கிறது. கூட்டுறவு அமைப்புகள் யாவும் கிராமிய பொருளாதாரத்தை வளப்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும். ஏனைய துறைகளைப் போலவே கூட்டுறவுத் துறையிலும் மாற்றங்களை செய்ய வேண்டும். மாற்றங்களை செய்யும் போது கூட்டுறவுத் துறையின் அடிப்படைத் தாற்பரியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் ஜனநாயக முறைப்படி நிர்வகிக்கப்படுவதுடன் கூட்டுறவுச் சபைகள் முழுமையான சமூக, பொருளாதார, கலாசார நிறுவனங்களாக விளங்கச் செய்வதற்கு அவற்றின் அங்கத்தவர்களின் பிரச்சினைகளை நீக்கி, அவர்களின் வாழ்வாதாரங்களில் அக்கறை கொள்ள வேண்டும். ஆக மொத்தத்தில் வடமாகாணத்தில் இயங்குகின்ற சகல கூட்டுறவுச் சங்கங்களும் வினைத்திறனான சேவைகளை மக்களுக்கு வழங்குவதுடன் கூட்டுறவுச் சங்க ஊழியர்களும் தன்னலமற்ற சேவைகளை மக்களுக்கு வழங்க வேண்டும். ஊழல் மோசடிகள் வெளிச் சக்திகளின் தேவையற்ற தலையீடுகள் என்பவற்றுக்கு இடமளிக்காது ஊழியர்கள் அனைவரும் பொது நோக்குடன் ஒருமித்தசிந்தனையுடன்செயற்படவேண்டும் "கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற முதுமொழி இதனையே வலியுறுத்தி நிற்கின்றது. மக்கள் உருவாக்கிய நிறுவனங்களுள் கூட்டுறவுச் சங்கங்கள் உயர்ந்த கொள்கைகளையும் சிறப்பியல்புகளையும் உடையதனிச் சிறப்புவாய்ந்த நிறுவனங்களாகும். அந்த வகையில் வடமாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மக்கள் நிறுவனங்களாக ஜனநாயக முறைப்படி இயங்கி, மக்களுக்கு மகத்தான சேவையை வழங்க முன்வரின், கூட்டுறவுத் துறையை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு செல்ல முடியும்.

ஸ்ரீ.நதிபரன்

# முருங்கை பயிர்ச்செய்கை



பொதுப்பெயர்:- முருங்கை
தாவரவியல் பெயர் :- **moringaoleifera**
குடும்பம்:- **Moringaceae**

முக்கியத்துவம்

➢ வர்ட்சியை தாங்கி வளரும் பயிர்.

➢ ஒரு மரத்திலிருந்து ஒரு வருடத்தில் 220 - 240 காய்கள் பெற்றுக்கொள்ளலாம்.

➢ இலைகாய் பூ என்பன உணவு மற்றும் மருத்துவத் தேவைக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

➢ மருத்துவ முக்கியத்துவம் மிக்கது. நீரிழிவு மற்றும் குருதிச்சோகை நோய்க்கு சிறந்த நிவாரணியாகும்.

➢ கல்சியம் முதன்மையாகவும் இரும்பு மக்னீசியம் பொஸ்பரஸ்என்பன முறையே அதிகளவிலும் காணப்படுகிறது.

வர்க்கங்கள்

- PKM -1
- PKM -2
- உள்ளூர் இனம்

தேவையான சூழல் காரணிகள்

➢ வருடாந்தமழைவீழ்ச்சி 250 - 3000 மி.மீ.பரவலான மழைவீழ்ச்சி.

➢ நன்குநீர வடியும் இருவாட்டிமண் மற்றும் மணல் மண் சிறந்தது.

➢ மண் pH 5-9 ஆக இருத்தல் விரும்பத்தக்கது.

➢ கடல் மட்டத்திலிருந்து 2000 மீற்றர் வரையான பிரதேசம்.

இனப்பெருக்க முறை

➢ விதை மற்றும் தண்டுத் துண்டம் மூலம் இனம் பெருக்க முடியும்.

➢ வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கைக்கு விதை மூலம் இனம்பெருக்கம் செய்தல் இலகுவானது.

➢ தண்டுத் துண்டம்எனின் 1 மீற்றர் நீளமுடைய 4 செ.மீ விட்டமுடைய தண்டுத் துண்டங்கள் நடுகைக்கு பொருத்தமானது.

நடுகைமுறை

➢ சிறுபோக பெரும்போக மழை ஆரம்பத்துடன் நடுகை செய்தல் சிறப்பானது.

➢ நடுகை இடைவெளி 8 அடி X 8 அடி.

➢ இலை உற்பத்திக்காயின் நடுகை இடைவெளி 4அடி X 4 அடி.

➢ நடுகைக்குழி ஆழம் 1 - 1.5 அடிநீள அகல ஆழத்தில் அமைத்தல் வேண்டும்.

➢ சேதனப் பசளை மற்றும் மேல் மண் கலவையால் குழி நிரப்பப்பட வேண்டும்.

அறுவடை

➢ 8 மாதங்களின் பின் முதலாம் அறுவடையை பெற்றுக்கொள்ளலாம்.

➢ மூன்றாவது வருடத்தில் கூடிய விளைச்சலை பெறலாம்.

➢ சிறந்த உற்பத்தியை பெற வருடாந்தம் அறுவடை முடிவுற்றபின் 3-4' உயரத்தில் கத்தரித்தல் சிறப்பானது.

➢ வருடத்தில் இரு தடைவ அறுவடையை பெற்றுக்கொள்ளலாம்.

மார்ச் தொடக்கம் ஏப்ரல் காலப்பகுதி ஜூலை முதல் செப்டெம்பர்.

ல. கிர்த்திகா
விவசாயப் போதனாசிரியர் (கிளிநொச்சி கிழக்கு)

# மத வழிபாட்டு இடங்களை தேர்தல் பரப்புரைகளுக்கு பயன்படுத்த தடை விதிப்பு

(கொழும்பு)

எந்தவொரு தேர்தல் பரப்புரைக்கும் மத வழிபாட்டு இடங்களைப் பயன்படுத்துவதை தேர்தல் ஆணைக்குழு தடை செய்திருப்பதாக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

'இது தொடர்பாக, அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எந்தவொரு சூழ்நிலையிலும் மத வழிபாட்டு இடங்களில், நேரடியான அல்லது மறைமுகமான தேர்தல் பரப்புரைகளையும் மேற்கொள்ளக் கூடாது.

தேர்தல் பரப்புரைக்கான கலந்துரையாடல்களையும் கூட இங்கு நடத்தக் கூடாது.

உள்ளூராட்சித் தேர்தலின் போது, இதுபோன்ற தேர்தல் சட்டங்களை கடுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# கூட்டமைப்பின் பலத்தை சிதைக்க முயற்சியாம்

(கொழும்பு)

சுயேட்சை குழு எனும் போர்வையில் களமிறக்கப்படும் சில கட்சிகளின் அடிவருடிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தை உடைப்பதற்கு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடன் பயணிக்க வேண்டியது காலத்தின் தேவை என இன்று பலரும் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். இந்நிலையில் பொருத்தமற்ற சில காரணங்களை கூறி மாற்றுக்கட்சிகளிடம் மண்டியிட்டுள்ள சிலர் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகி சுயேட்சை எனும் போர்வையில் தேர்தலில் போட்டியிட்டு தமிழர்களின் பலத்தை உடைப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

இந்த முயற்சியானது ஒட்டுமொத்தமான தமிழர்களின் பலத்தை உடைப்பதாக அமைவதை அவர்கள் மறந்து செயற்படுகின்றார்களா? அல்லது வேண்டுமென்றே செயற்படுகின்றார்களா என்பது கேள்விக்குறியாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1269

Search for people, places and things

### சரத்

பெண்: அண்ணா 100 ரூபாய்க்கு
பெற்றோல் போடுங்க
போட்டாச்சு மேடம்
பெண் : எவ்வளவு ஆச்சு அண்ணா



### ரெஜி

சாப்பிடுவதற்கு தேவையான பொருட்கள்...



தட்டு, டம்ளர், கரண்டி மற்றும் ரி.வி. ரிமோட்!

### அமல்

எனக்கு சனி உச்சத்துல இருந்தபோது



கல்யாணம் நடந்தது

### கண்ணன்

பதில் சொல்லுங்க ப்ளீஸ்



பீரோவில் இருக்கும் மனைவியின் நூற்றுக் கணக்கான புடைவைகளில் ஒன்றை எடுத்து கிஃப்ட் பேக் செய்து மனைவிக்கு பரிசளித்தால் கண்டுபிடித்துவிடுவாளா?

### ராமு

ராவணன்: ஏன்டா
ஒவ்வொரு தசராவுக்கும்
என் உருவப் பொம்மைய
கொளுத்துறீங்களே, நான் என்ன
உங்க பொண்டாட்டியவாடா
தூக்கிட்டு போனேன்?

ஒருவர்: ஏன் தூக்கிட்டு
போகலைன்னுதான்டா
கொளுத்துறோம்...!

### ராஜ்கிரண்


மனைவி: என்னங்க ஏதாவது விலங்குகள்
பூங்காவிற்கு கூட்டிட்டு போங்க..
கணவன்: சரி கிளம்பு...
மனைவி: எங்க போகலாம்?



கணவன்: உங்க வீட்டுக்குத்தான்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொகுதி நிர்ணயம் தொடர்பான முன்மொழிவுகள்






பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

(இவை கட்டுரை ஆசிரியரின் தனிப்பட்ட முன்மொழிவுகள்)

கிழக்கு மாகாண சபையில் 37 அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள். இவர்களுள் இருவருக்கு தேர்தலில் மாகாண மட்டத்தில் கூடிய வாக்குகளை பெறும் கட்சி போனஸ் ஆசனங்களாகக் கொடுக்கும். மிகுதி 35 அங்கத்தவர்களில் அம்பாறை மாவட்டத்திலிருந்து 14 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 11 பேரும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து 10 பேரும் தெரிவு செய்யப்படுவர். இவர்களுள் 50 வீதம் தேர்தல் தொகுதி முறையிலும் 50 வீதத்தினர் விகிதாசார முறையிலும் தெரிவாவர். இதனால் அம்பாறை மாவட்டத்தில் 7 தேர்தல் தொகுதிகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 6 தேர்தல் தொகுதிகளும் திருகோணமலை மாவட்டத்தில் 5 தேர்தல் தொகுதிகளும் உருவாக்க வேண்டியுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் தனித்தனியே எண்ணிக்கையில் அதிகமாகவும் இன விகிதாசாரத்தில் சிறிய வித்தியாசத்திலும் காணப்படுவதுடன் தமிழ், முஸ்லிம் குடியிருப்புக்கள் மாறி மாறி அமைந்திருப்பதால் தேர்தல் தொகுதி நிர்ணயம் மிகவும் சிக்கலானதும் சம்பந்தப்பட்டவர்களைத் திருப்திப்படுத்த முடியாததாகவும் உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 2012 இல் தமிழர்கள் 72.73 வீதமாகவும் முஸ்லிம்கள் 25.42 வீதமாகவும் சிங்களவர் 1.29 வீதமாகவும் இருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர் 38.88 வீதமாகவும் தமிழர்கள் 17.45 வீதமாகவும் முஸ்லிம்கள் 43.48 வீதமாகவும் இருந்தனர்.

திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவர் 26.74 வீதமாகவும் தமிழர் 31.05 வீதமாகவும் முஸ்லிம்கள் 41.83 வீதமாகவும் இருந்தனர். திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் குறிப்பாக தமிழ்மக்கள் இன்றும் முழுமையாக மீள்குடியேறாததால் 2012 ஆம் ஆண்டுக்குரிய இன விகிதாசாரம் மாற்றத்திற்குட்படக்கூடியது. கிழக்கு மாகாண சபையில் மூவினங்களைச் சார்ந்த அங்கத்தவர் எண்ணிக்கை மாவட்டங்களின் இன விகிதாசாரத்தைப் பொறுத்தது மாத்திரமல்ல தேர்தலில் பங்கு கொள்ளும் விகிதத்திலும் தங்கியுள்ளது. உதாரணமாக மட்டக்களப்பு பாராளுமன்றத் தேர்தலில் மாவட்ட இன விகிதாசார அடிப்படையில் நான்கு தமிழர்களும் ஒரு முஸ்லிமும் தெரிவு செய்யப்படவேண்டும். ஆனால் தேர்தலில் 3 தமிழர்களும் 2 முஸ்லிம்களும் தெரிவாகும் போக்குக் காணப்படுகின்றது. இதனால் மாகாண சபையில் அங்கத்தவர் எண்ணிக்கை மாவட்ட இன விகிதாசாரத்தை முழுமையாகப் பிரதிபலிக்குமா? என்பது கேள்விக்குரியதாகும்.

## மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் தொகுதிகள்

இம்மாவட்டத்தில் 2012 குடித்தொகைக் கணிப்பின்படி 526567 பேர் இருந்தனர். இங்கு 6 தேர்தல் தொகுதிகளை நிர்ணயம் செய்யவேண்டியுள்ளது. இந்த ஆறு தேர்தல் தொகுதிகள் பின்வருமாறு இனங்காணப்பட்டுள்ளன.

கல்குடா, வந்தாறுமூலை, ஏறாவூர்- கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு, காத்தான்குடி-ஆரம்பத்தை, பட்டிருப்பு.

இந்த ஆறு தேர்தல் தொகுதிகளில் 4 தேர்தல் தொகுதிகளில் தமிழர் தெரிவாகக் கூடியதாகவும் 2 தேர்தல் தொகுதிகளில் முஸ்லிம்கள் தெரிவாகக்கூடிய முறையிலும் நிர்ணயம் செய்ய வேண்டிய தேவையுள்ளது.

இம்மாவட்டத்தின் சராசரி ஒரு தேர்தல் தொகுதியின் மக்கள் தொகை 526567÷6= 87761 பேராகும். சராசரி மக்கள் தொகையின் +10 வீதம் 96537 ஆகவும்-10 78990 வீதம் ஆகவும் இருக்கின்றது.

ஆறு தேர்தல் தொகுதிகளில் கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு ஆகிய பெயரில் முன்னர் பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகள் இருந்தன. இதனால் இப்பெயர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. கிழக்கு பல்கலைக்கழகம் வந்தாறுமூலையில் இடவமைபு பெற்றிருப்பதன் காரணமாக வந்தாறுமூலை பிரசித்தி பெற்றுள்ளதால் இப்பெயரை இடலாம் எனத் தோன்றுகின்றது. ஏறாவூர்-கொக்கட்டிச்சோலை தேர்தல் தொகுதி, மட்டக்களப்பு கடல்நீரேரியின் இருபக்கங்களிலும் நிலப்பகுதிகளை உள்ளடக்குவதால் இரண்டு பெயர்கள் இத்தேர்தல் தொகுதிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. காத்தான்குடி பிரதேச செயலக பிரதேச மக்கள் தொகை தனியானதொரு தேர்தல் தொகுதி நிர்ணயம் செய்யப் போதியதாக இல்லை. இதனால் காத்தான்குடி பிரிவுடன் மண்முனைப்பிரிவு சேர்க்க வேண்டியுள்ளது.

இதனால்தான் இத்தேர்தல் தொகுதிக்கு காத்தான்குடி-ஆரம்பத்தை எனப் பெயரிடப் பட்டுள்ளது.

### கல்குடா தேர்தல் தொகுதி

இத்தேர்தல் தொகுதிக்குள் அடங்கும் பிரிவுகளும் மக்கள் தொகையும் பின்வருமாறு,

| பிரிவு (கல்குடா தேர்தல் தொகுதி) | மக்கள் தொகை |
|---|---|
| கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவு | 21537 |
| கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலகப் பிரிவு- | 25687 |
| கோறளைப்பற்று (ஓட்டுமாவடி) பிரதேச செயலகப் பிரிவு | 22182 |
| கோறளைப்பற்று (வாழைச் சேனை) பிரதேச செயலகப் பிரிவு | 23376 |
| மொத்தம் | 92782 |

மூலம்: குடிசனக் கணிப்பு 2012

இத்தேர்தல் தொகுதியில் முஸ்லிம் கள் 51.52 வீதமாகவும் தமிழர் கள் 47.46 வீதமாகவும் ஏனையவர்கள் 1.01 வீதமாகவும் இருந்தனர்.

### வந்தாறுமூலை தேர்தல் தொகுதி

இத்தேர்தல் தொகுதிக்குள் அடங்கும் பரப்புகளும் மக்கள் தொகையும் பின்வருமாறு,

கோறளை தெற்குப் பிரிவு 26143, ஏறாவூர்பற்று 64153 இரண்டும் சேர்ந்து மொத்தம் 90296 பேர் இருந்தனர்.

(மூலம் 2012 குடிக்கணிப்பு)

இத்தொகுதியில் தமிழர்கள் 85 வீதமாகவும் முஸ்லிம்கள் 15 வீதமாகவும் இருக்கிறார்கள்.

### ஏறாவூர்-கொக்கட்டிச்சோலை தேர்தல் தொகுதி

இத்தேர்தல் தொகுதியில் அடங்கும் பரப்புகளும் மக்கள் தொகையும் பின்வருமாறு,

இத்தேர்தற் தொகுதியில் தமிழர் 74 வீதமாகவும் முஸ்லிம்கள் 24 வீதமாகவும் சிங்களவரும் ஏனையவர்களும் 2 வீதமாகவும் இருந்தனர்.

### மட்டக்களப்பு தேர்தல் தொகுதி

இத்தேர்தல் தொகுதி மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவை ஒத்ததாக இருக்கின்றது.

(தொடரும்)

# தொண்டாவும் திகாவும் திக்குமுக்கு





(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதிலும் கட்டுப்பணத்தைச் செலுத்துவதிலும் பிரதான கட்சிகள் தீவிரமாகக் களத்தில் குதித்துள்ளன.

எனினும், மலையகக் கட்சிகள் சேர்ந்து போட்டியிடுவதா? அல்லது தனித்துப் போட்டியிடுவதா? என்று உடனடியாகத் தீர்மானிக்க முடியாமல், கடந்த சில நாட்களாக திக்குமுக்காடிப் போயிருந்தன.

எனினும், பிரதான கட்சிகளுடன் சேர்ந்து சில இடங்களிலும், சில இடங்களில் தனித்தும் போட்டியிடுவதென்று, மூடிய அறைக்குள் மந்திராலோசனை செய்து வந்தன என்றும் அறியமுடிகிறது.

நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கண்டி மற்றும் மாத்தளை ஆகிய இடங்களில் போட்டியிடுவது தொடர்பிலேயே, மலையகத்தின் பிரதான கட்சிகள் மந்திராலோசனை செய்துவருவதாக அறியமுடிகின்றது. அதற்கான காய் நகர்த்தலே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் குழு ஒரு பக்கம் ஆலோசிக்கிறது.

இதேவேளை, அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, அமைச்சர் பி.திகாம்பரம் மற்றும் இராஜாங்க அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் தலைமையில், கொழும்பில் கூடியே ஆராய்ந்து வருகின்றது.

இதில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனாதிபதி மைத்திரிபால தலைமையிலான கட்சியுடன் சில இடங்களில் இணைந்தும், சில இடங்களில் தனித்தும் போட்டியிடுவதற்கு, ஆலோசித்துள்ளதாக அறியமுடிகிறது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியுடன் சில இடங்களில் இணைந்தும், சில இடங்களில் தனித்தும் போட்டியிட ஆலோசித்துள்ளன. (இ-7)

# புனித சிவனொளிபாதமலைக்கு கஞ்சாவுடன் சென்ற 4பேர் கைது



(கொழும்பு)

புனித சிவனொளிபாதமலை பருவகாலம் நேற்று முன்தினம் உதயமான பௌர்ணமி தினத்துடன் ஆரம்பமானது. ஆரம்பமான முதல் தினத்திலேயே 7550 மில்லிகிராம் கஞ்சா போதை பொருள் கொண்டு சென்ற நான்கு பேரை நோட்டன்பிரிஜ், தியகல பிரதேசங்களில் வைத்து ஹற்றன் கலால் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் புஸ்ஸல்லாவ பகுதியில் இருந்து சிவனொளிபாத மலையை தரிசிக்க வருகை தந்தவர்கள் என்றும், கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக கலால்திணைக்களத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (இ-7)

# எமக்கு மூக்கு போனாலும் சரி எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும்!

## பிள்ளையானின் கட்சி அறிக்கை

(ஏறாவூர்)

எமக்கு மூக்கு போனாலும் சரி எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அரசியல் தலைமைகள்தான் தமிழருக்கு விமோசனத்தை பெற்றுத்தரப் போகின்றார்களா? என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பி.பிரசாந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியம் பேசிய அரசியல்வாதிகளால் கைவிடப்பட்டதனை, கரிசனையுடன் முன்னெடுக்கும் கிழக்கு மாகாண ஆளுநரின் அபிவிருத்தி சேவையினை வெகுவாக பாராட்டுவதாக கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கிழக்கு மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதேபோன்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான சி.சந்திரகாந்தனின் சிந்தனையுடன் மேற்கொள்ளப்பட்ட மிகவும் பிரமாண்டமான நூலகமாக மட்டக்களப்பு மாநகர நூலகத்தினை அமைக்கும் முயற்சி 2012 மாகாணசபை கலைக்கப்பட்டது.

நிதி ஒதுக்கீடுகள் தடைப்பட்டு சுமார் 70 மில்லியன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் மேலும், 220 மில்லியன் நிதித்தேவையுடன் பூரணப்படுத்தப்படாமல் காணப்படுவது மாவட்டத்தினை நேசிக்கும் அனைவருக்கும் வேதனையான விடயம் என்று கூறியுள்ளார்.

பூரணப்படுத்தப்படாத நூலகத்தை பூரணப்படுத்தினால் பிள்ளையானுக்கு நல்ல பெயர் கிடைத்துவிடுமே 'எமக்கு மூக்குப் போனாலும் சரி எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும்" என்ற எண்ணம் கொண்ட அரசியல் தலைமைகள் தமிழருக்கு விமோசனத்தை எப்படி பெற்றுத்தருவார்கள்.

இளைஞர்களின் கைகளில் ஆயுதங்களைத் திணித்து அவர்களின் சமாதிகளில் அமைக்கப்பட்ட அரியாசனத்தில் அமர்ந்துகொண்டு தமிழ்ச் சமூகத்தை மறந்த அரசியல் தலைமைகள் தங்களால் சிந்திக்க முடியாது.

தேர்தல் காலத்தில் சில அரசியல்வாதிகளின் பேசுபொருளாக மட்டக்களப்பு பொது நூலகம் காணப்பட்டது.

அதை செய்யப்போகின்றோம் இதைச்செய்யப்போகின்றோம் என அறிக்கையில் மாத்திரம் போர் நடத்தியதுடன், அப்படியே நின்றுவிட்டார்.

ஆனால், கிழக்கு மாகாண ஆளுநர் இந் நூலகத்தை பூரணப்படுத்துவதற்கு முன்வந்தமையானது மட்டக்களப்பு மாவட்ட கல்வி வலுவாக்கத்திற்கு கிடைத்த சிறந்த உந்துசக்தி எனவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பி.பிரசாந்தன் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# துறைமுகப் பணியாளர்கள் நீக்கம் சட்டவிரோதமான விடயம்-மகிந்த

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுக பணியாளர்களின் பிரச்சினை தொடர்பாக குறித்த நிறுவனத்துடன் கலந்துரையாடல் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

துறைமுகத்தின் பணியாளர்கள் பலர் ஒரே தடவையில் அகற்றப்பட்டமை சட்டவிரோதமான விடயம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தங்காலை கால்டன் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற சமய நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போதே முன்னாள் ஜனாதிபதி மகிந்த மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ஏ.ஆர்.ரஹ்மானின் அற்புதமான இசை! மெர்சல் படத்தை பாராட்டிய நாமல் எம்.பி

Namal Rajapaksa
@RajapaksaNamal

Finally got to watch #Mersal...the usual outstanding performance by @actorvijay and the amazing music of @arrahman. A great movie that touches upon important social issues that spans beyond borders. #Kollywood #India #SriLanka #TamilCinema

8:49 AM - Dec 3, 2017

(கொழும்பு)

இளையதளபதி விஜயின் நடிப்பில், இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மானின் இசையமைப்பில் அண்மையில் வெளிவந்த திரைப்படம் மெர்சல். பெரும் சர்ச்சைகளுக்கு மத்தியில் வெளிவந்த இந்த திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றிருந்தது.

இந்நிலையில், மெர்சல் திரைப்படத்தை பார்வையிட்ட பலரும் தமது கருத்துக்களை வெளியிட்டு வரும் நிலையில், தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் மெர்சல் திரைப்படம் குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை விடுத்துள்ள அவர் இவ்வாறு கூறியுள்ளார். "மெர்சல் திரைப்படத்தில் ஏ.ஆர். ரஹ்மானின் இசை அற்புதமாக இருந்ததாகவும், விஜயின் நடிப்பு சூப்பர் எனவும்" கூறியுள்ளார்.

மேலும், மெர்சல் திரைப்படம் சமகால சமூகத்தின் முக்கிய பிரச்சினை குறித்து பேசியிருப்பதாகவும் நாமல் ராஜபக்ஷதனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பதிவில் கூறியுள்ளார். (இ-7)

# மகிந்தவிற்கு உயிர் அச்சுறுத்தல்! பாதுகாப்பை பலப்படுத்த கோரிக்கை



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பிரசாரங்களை மேற்கொள்ளும் பொது எதிரணியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பிற்கு மேலதிகமாக படையினரை தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சிக்காக பிரசாரங்களில் ஈடுபட்டு வரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டின் சகல பகுதிகளிலும் மக்கள் சந்திப்புகளை முன்னெடுத்து வருகின்றார். இந்நிலையில் தமது அணியினருக்கும் தனக்கும் தொடர்ந்தும் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் ஆகவே தனக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை மேலும் அதிகரித்து தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு பிரிவின் மூலமாகவே இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (இ-7)

# கன்னித் தேர்தலை தனித்தே எதிர்கொள்வோம்-கருணா



(கொழும்பு)

'எதிர் வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சுயேட்சையாகவே எதிர்கொள்ளவுள்ளோம்' என, கருணா அம்மான் என்று அழைக்கப்படும் முன்னாள் பிரதியமைச்சரான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து, சிறுபான்மைக் கட்சிகள் சில, போட்டியிடவுள்ளதாக வெளியான செய்தி தொடர்பில் கேட்டபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், 'தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணிக் கட்சி இன்னமும் பதிவு செய்யப்படாமையால், இம்முறை தேர்தலைச் சுயேட்சையாகக் களமிறங்கியே சந்திக்கவுள்ளோம். எந்தவொரு பெருங் கட்சிகளுடனும் சேர்ந்து செயற்படும் முடிவை நாங்கள் எடுக்கவில்லை.

'இது நாங்கள் சந்திக்கும் கன்னித் தேர்தல். ஆகையால், எமது பலத்தை நிரூபிக்க நாங்கள் முழு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். மக்கள் நலனுக்காகக் குரல்கொடுக்கும் எங்களை நிச்சயமாக மக்கள் ஆதரிப்பர்' என கருணா நம்பிக்கை வெளியிட்டார். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## வரும் முன் காப்போம்!



தேரிக்குடியிருப்பு என்ற ஊரின் எல்லையில் இருந்த காட்டில் பெரிய குளம் இருந்தது, அதனை ஒட்டி சிறிய நீரோடை ஓடிக் கொண்டிருக்கும்.

அந்த குளத்தில் நிறைய மீன்கள், நண்டுகள் மற்றும் அனைத்து நீர் வாழ் இனங்கள் வாழ்ந்து வந்தன. அவற்றில் ராமு, சோமு, தாமு என்ற மூன்று மீன்கள் நல்ல நண்பர்களாக இருந்தார்கள். அந்த மூவரும் எங்கே சென்றாலும் ஒன்றாகவே போவார்கள். ஒரு பயமும் இல்லாமல் சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள்.

அவர்கள் மகிழ்ச்சியை கெடுக்கும் விதமாக ஒரு நாள் மாலையில் ஒரு இரண்டு மனிதர்கள் அங்கே வந்தார்கள், வேட்டையாடிய களைப்பு முகத்தில் தெரிந்தது. குளத்து நீரை அருந்தி விட்டு குளத்தை நன்றாக ஆராய்ந்தார்கள், பின்னர் அவர்களில் ஒருவர் "இந்தக் குளத்தில் நிறைய மீன்கள் இருக்கிறதே, அதுவும் நன்றாக வளர்ந்து கொழு கொழு என்று இருக்கிறதே, நாம் வீணாக காடு மேடு என்று அலைந்து வேட்டையாட வேண்டாம், பேசாம இங்கே நாளை வந்து வலையை விரிப்போம். மாட்டிக் கொள்ளும் மீன்களை விற்று பணம் சம்பாதிக்கலாம்" என்றார். மற்றவரும் "ஆகா, அருமையான யோசனையாக இருக்கிறதே" என்றார்.

இவர்கள் பேசுவதை கேட்ட ராமு என்ற மீன் பெருங்கவலை அடைந்தது, உடனே தன் நண்பர்களான சோமு, தாமுவிடம் கூறியது. காட்டின் நடுவில் இருந்ததால் இதுவரை பெரிய ஆபத்து வந்தது இல்லை, குளத்தில் நடுவில் போய் இருந்தால் பறவைகள் கூட தங்களை ஒன்றும் செய்தது இல்லை, இன்றோ இந்த மனிதர்களால் பெரிய ஆபத்து வந்து விட்டதே என்ன செய்யலாம் என்று யோசித்தன.

ராமு எப்போவும் வரும்முன் காத்துக் கொள்ளும் மனம் படைத்த மீன், மற்ற மீன்களைப் பார்த்து, நாளை கண்டிப்பாக அவர்கள் இங்கே வருவார்கள். நாம் இன்று இரவே இக்குளத்தை விட்டு நீரோடையின் உதவியால் அருகில் இருக்கும் வேறு குளத்திற்கு போகலாம். சில காலம் போனபின்பு மீண்டும் இங்கே வரலாம் என்றது.

ராமுவின் நல்ல யோசனையை மற்ற இருவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் சும்மா சொல்லிவிட்டு போயிருப்பார்கள். அவர்களாவது நம்மை பிடிப்பதாவது. நீ வீணாக பயப்படுகிறாய் என்றன.

ராமு எவ்வளவோ சொல்லிப் பார்த்தது. ஆனால் சோமு, தாமு இருவரும் கேட்கவில்லை. ராமு அவர்களிடம் மன்னிப்புக் கேட்டு விட்டு தான் இன்று இரவே அந்த குளத்தை விட்டுப் போவதாக சொல்லி விட்டு இரவே தப்பி வேற குளத்திற்கு போய் விட்டது.

மறுநாள் காலையில் சோமு, தாமு இருவரும் கூடி பேசினார்கள், மீன் பிடிப்பதாக சொன்னவர்களை காணவில்லை. சும்மா பேச்சுக்குச் சொன்னதை நம்பி ராமு வேற குளத்திற்கு போனது முட்டாள் தனம் என்று கேலி செய்தன.

சிறிது நேரத்தில் வலை விரிப்பதாக சொன்ன இருவரும் பெரிய வலையை எடுத்து வந்து எங்கே வலை வீசுவது என்று பேசினார்கள். அவ்வளவு தான் அதைக் கேட்டு சோமு "ஐயோ கடவுளே!, ராமு அப்பவே சொன்னதே, இரவே தப்பியிருக்கலாமே" என்று புலம்பியது.

ஆனால் தாமு அந்த சூழ்நிலையிலும் கொஞ்சமும் பயப்படவில்லை, "ஏன் பயப்படுகிறாய், குளத்தில் எவ்வளவோ இடங்கள் இருக்கின்றன, நாம் மறைந்து கொள்ளலாம்" என்றது.

சோமு கொஞ்சம் கொழு கொழு மீன். அதற்குப் பயம் வந்து விட்டது. அதற்குள் மீனவர்கள் வலை வீச, தாமு ஓடி ஒளிந்து கொண்டது. சோமு மாட்டிக் கொண்டது. வலையில் இருந்து தன்னை விடுவிக்கப் படாத பாடுபட்டது. இறுதியில் சோமுவின் வால் பகுதியும் முதுகும் சேதமடைந்து. வலையில் இருந்து விடுபட்டு நீரோடையில் பாய்ந்து தப்பி விட்டது. உடல் எங்கும் இரத்தம். வரும் முன்னால் காக்காமல் வந்த போது காக்க நினைத்ததன் முட்டாள் தனத்தை நினைத்து வருந்தியது.

தாமு குளத்தின் உள்ளே இருந்த பாறையின் அடியில் ஒளிந்து கொண்டது. தான் வீரமாக தப்பியதை நினைத்து பெருமைப்பட்டது. அது ரொம்ப நேரம் நீடிக்கவில்லை. வந்த இருவரில் ஒருவர் நீண்ட கம்பை எடுத்து குளத்தின் அடியில் இருக்கும் பாறைகளில் செலுத்தி அசைத்தார். அவ்வாறு செய்கையில் ஒரு முறை அந்த கம்பானது தாமுவை தாக்கியது. தாமு தப்பிக்க நினைத்து அதிலிருந்து வெளியே வர, அங்கே இருந்த வலையில் மாட்டிக் கொண்டது.

சிறிது நேரத்தில் மீனவர்கள் வலையை வெளியே எடுத்து மாட்டிய அனைத்து மீன்களையும் தரையில் போட்டு கொன்றார்கள். அதில் தாமுவும் ஒரு மீன்.

வரும்முன் காப்போம் என்ற கொள்கை கொண்ட ராமு ஒரு ஆபத்தும் இல்லாமல் தப்பி, மகிழ்ச்சியாக வாழ்ந்தது. வந்த போது காப்போம் என்ற கொள்கை உடைய சோமு, உடல்எங்கும் காயப்பட்டு, மற்ற மீன்களுக்கு பயந்து பயந்து வாழ்ந்தது. வந்தப்பின்பு பார்ப்போம் என்ற கொள்கை உடைய தாமுவோ கொல்லப்பட்டு விட்டது.

குழந்தைகளே! இக்கதையானது நம் அனைவருக்கும் நல்ல பாடம். எந்த விடயத்தையும் வரும் முன்பே யோசிக்க வேண்டும், தேர்வு வருகிறது என்றால் ஒரு வாரத்திற்கு அனைத்துப் பாடங்களையும் படித்து முடிக்க வேண்டும். கடைசி நேரத்தில் படிக்கத் தொடங்கினால் அது பயன் அளிக்காது.

## 05.12.2017 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖1360- பிரெஞ்சு நாணயம் பிராங்க் அறிமுகப்படுத்தப் பட்டது.
- ❖1492- கொலம்பஸ் ஹிஸ்பனியோலா தீவை அடைந்தார். இத்தீவை அடைந்த முதலாவது ஐரோப்பியர் இவரே.
- ❖1497- போர்த்துக்கல்லின் மன்னன் முதலாம் மனுவேல் யூதர்கள் அனைவரும் கிறிஸ்தவத்துக்கு மதம் மாறுமாறும் அல்லது நாட்டை விட்டு வெளியேறுமாறும் பணித்தான்.
- ❖1746- ஸ்பானிய ஆட்சிக்கெதிராக ஜெனோவாவில் கிளர்ச்சி ஆரம்பமானது.
- ❖1848- கலிபோர்னியாவில் பெருமளவு தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் போக் அறிவித்தார்.
- ❖1941- இரண்டாம் உலகப் போர்: பின்லாந்து, ஹங்கேரி, ருமேனியா நாடுகளின் மீது பிரித்தானியா போரை அறிவித்தது.
- ❖1941- இரண்டாம் உலகப் போர்: கியோர்கி சூக்கொவ் தலைமையில் சோவியத் படைகள் ஜேர்மனிய ஆக்கிரமிப்புக்கு எதிராக மொஸ்கோவில் பெரும் தாக்குதலைத் தொடுத்தன.
- ❖1958- STD தொலைபேசி இணைப்பு சேவை ஐக்கிய இராச்சியத்தில் இரண்டாம் எலிசபெத் மகாராணியால் ஆரம்பிக்கப்பட்டது.
- ❖1995- இலங்கை அரசு யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து தாம் முழுமையாகக் கைப்பற்றியதாக அறிவித்தது.

### பிறப்புகள்

- ❖1782- மார்ட்டின் வான் பியூரன், அமெரிக்காவின் 8வது அரசுத்தலைவர் (இ. 1862)
- ❖1901- வால்ட் டிஸ்னி, அமெரிக்க இயக்குநர் (இ. 1966)
- ❖1966- நயாநிதி மாறன், இந்தியத் தொழிலதிபர், அரசியல்வாதி

### இறப்புகள்

- ❖1791- வொல்ஃப்கேங்க் அமதியுஸ் மோட்சார்ட், ஆஸ்திரிய செவ்விசையமைப்பாளர் (பி. 1756)
- ❖1870- அலெக்சாண்டர் டூமா, பிரான்சிய எழுத்தாளர் (பி. 1802)
- ❖1879- ஆறுமுக நாவலர், ஈழத்தின் சைவ ஆன்மீகவாதி (பி. 1822)
- ❖1926- கிளாடு மோனே, பிரான்சிய ஓவியர் (பி. 1840)
- ❖1941- அம்ரிதா சேர்கில், அங்கேரி-பாகிஸ்தானிய ஓவியர் (பி. 1913)
- ❖1950- ஸ்ரீஅரவிந்தர், இந்திய ஆன்மீகவாதி, (பி. 1872)
- ❖1954- கல்கி கிருஷ்ணமூர்த்தி, தமிழக எழுத்தாளர், பத்திரிகையாளர் (பி. 1899)
- ❖1963- உசைன் சகீத் சுராவர்தி, பாகிஸ்தானின் 5 ஆவது பிரதமர் (பி. 1892)
- ❖1964- வி. வீரசிங்கம், இலங்கை அரசியல்வாதி (பி. 1892)
- ❖2009- திலகநாயகம் போல், யாழ்ப்பாண கர்நாடக இசைப் பாடகர்
- ❖2012- ஒசுக்கார் நிமேயர், பிரேசில் கட்டடக் கலைஞர் (பி. 1907)
- ❖2013- நெல்சன் மண்டேலா, தென்னாபிரிக்காவின் முதலாவது அரசுத்தலைவர், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1918)
- ❖2016- ஜெ. ஜெயலலிதா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை, அரசியல்வாதி, தமிழக முதலமைச்சர் (பி. 1948)

### சிறப்பு நாள்

- ❖குழந்தைகள் நாள் (சுரிநாம்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 160 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 700 | 500 | 500 |
| தக்காளி | 120 | 200 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 60 | 60 |
| கோவா | 140 | 300 | 140 | 140 |
| கரட் | 180 | 400 | 200 | 200 |
| பூசணி | 80 | 100 | 60 | 60 |
| புடோல் | 100 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 70 |
| சின்ன வெங்காயம் | 400 | 500 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 140 | 180 |
| பாகற்காய் | 300 | 600 | 240 | 350 |
| வெண்டிக்காய் | 120 | 150 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 60 | 60 |
| புடலங்காய் | 280 | 400 | 240 | 300 |
| லீக்ஸ் | 200 | 400 | 240 | 220 |
| பீற்றூட் | 150 | 200 | - | 180 |
| கறிமிளகாய் | 450 | 600 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 200 | 400 |
| போஞ்சி | 250 | 250 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | – | 120 | 140 |
| கீரை - 1பிடி | 80 | 50 | 40 | 60 |
| தேசிக்காய் | 100 | 40 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80 | 100 |
| இராசவள்ளி | – | – | - | – |
| வெங்காயப்பூ | 350 | – | - | 280 |
| முள்ளங்கி | 80 | – | 80 | 80 |
| பொன்னாங்காணி | 60 | – | 40 | 40 |
| வல்லாரை | 30 | – | 20 | 40 |
| ஈரப்பலா | 80 | – | 60 | 100 |

தேரைகள் ஓடையிலே இனத்தோடு சேர்ந்து
மிதக்கையிலே
நாரைகள் வந்திடவே பாவி மனம் நைந்து
குலைந்ததடி. - கவிமணி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் நிதானமாக சிந்திக்க வேண்டிய நேரம்

மகாகவி பாரதியார் பற்றி அறியாதவர்கள் இல்லை எனலாம். எனினும் அவர் வாழுங் காலத்தில் அவரை அறிந்தவர்கள் மிகச் சொற்பம்.

மனித சமூகம் வாழ வேண்டும் என விரும்பிய ஒரு பெருங் கவிஞன் அவன்.

*வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்* என்ற பாரதியின் வரிகள் அந்த உலகக் கவிஞனின் உள்ளக் கிடக்கையை தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

சமூக அநீதி கண்டு கொதித்தெழுந்த பாரதியின் பாடல்கள் சமூகத்தை சீர்படுத்துவன, சமூக நீதியை நிலைநாட்டுவன, ஏழை மக்களுக்கு உதவும் திட்டங்களை முன்னிலைப் படுத்துவன.

இயற்கையை இரசித்து, இயற்கையைப் பாதுகாத்து, இயற்கையில் வாழும் பறவைகள் உள்ளிட்ட அத்தனை ஜீவராசிகள் மீதும் கருணை காட்டுவன.

இப்படியாக பாரதியின் மனப்பதிவுகள் கவி வரிகளாக வெளிவந்ததால்தான், அவன் இன்று உலக மக்களுடன் வாழும் கவிஞனாக நிலை பெற்றுள்ளான்.

பாரதி வாழ்ந்த காலத்தில் அன்றைய சூழ் நிலையில் நிலவிய சமூக அநீதிகள்; அதர்மத்தின் எழுச்சிகள் எங்ஙனம் அவனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தினவோ - துன்பத்தைக் கொடுத்தனவோ அதே நிலைமை ஈழத் தமிழ் மக்கள் தொடர்பில் இப்போது உள்ளது.

ஆம், எங்கள் மக்கள் படும் நிலை கண்டு இன்னமும் மனம் கலங்காதவர்கள் நம் மத்தியில் இருக்கிறார்கள். காணாமல்போனவர்களின் பெற்றோர்களும் உறவுகளும் தொடர் உண்ணா விரதம் இருக்கும் பரிதாபத்தைக் கண்டும் நெஞ்சு நிமித்தி செல்லும் ஈனர்களை நினைக்கும்போது நெஞ்சம் வெடித்து விடுகிறது.

கொடிய யுத்தத்தில் பெற்ற பிள்ளையை இழந்து தவிக்கும் தாய் தந்தையர், குடும்பத் தலைவனை இழந்து தவிக்கும் குடும்பங்கள், தாய் தந்தையரைப் பறிகொடுத்துவிட்டு அநாதைகள் என்ற பெயரோடு அன்புக்காக ஏங்கும் குழந்தைகள். அந்தோ எத்தனை அநியாயம் எங்கள் மண்ணில் நடந்துவிட்டன.

இருந்தும் ஹோட்டல்களில் சுவடி உண்டு மகிழ்ந்து உறங்கும் தமிழ் அரசியல்வாதிகள் நம் மண்ணில் உள்ளனர் எனும்போது இதயத்துக் குருதி கொதித்து விடுகிறது.

அதிலும் பொதுப்பணி, பொதுச்சேவை என்று தங்களை அடையாளப்படுத்துவோரிலும் பலர் உளவாளிகளாக செயற்படுகின்றனர் என அறியும்போது, கடவுளே இதென்ன கொடுமை என்று கண்ணீர் விடுவதைத் தவிர வேறு எந்த வழியும் தெரியவில்லை.

காட்டிக்கொடுப்புக்களும் தகவல் பரிமாற்றங்களும் சேர்ந்திருந்தே கழுத்தறுக்கும் துரோகத்தனங்களுமே தமிழனைத் தலைநிமிர விடாமல் தடுத்து நிற்கின்றன என்ற உண்மையை அறிந்த பின்பும் யுத்த வெறிக்கு தாய் தந்தையை இழந்த குழந்தைகள் சிறுவர் இல்லங்களில் குப்புறக்கிடந்து அம்மா அப்பா என்று கண்ணீர் விடும் பரிதாபம் தெரிந்தும் இன்னமும் காட்டிக் கொடுப்போர் எங்களிடம் இருந்தால்,

தமிழ் மக்களுக்கு உதவுவது போன்று நாடகம் நடித்து மக்களை ஏமாற்றுவது என்றால் போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் என்ன செய்ய முடியும்?

ஓ! தமிழினமே நீ என்றைக்கு வீறுகொண்டெழுந்து கேள்வி கேட்கிறாயோ; என்றைக்குப் பச்சைத் துரோகிகளுக்குப் பதிலடி கொடுக்கிறாயோ அன்றுதான் உன் இனத்தின் விடிவு சாத்தியமாகும்.

# ஊர்காவற்றுறை கர்ப்பிணி பெண் படுகொலை சந்தேகநபர்களது விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பகுதியில் கொலை செய்யப்பட்ட கர்ப்பிணி பெண் வழக்கில் சந்தேகநபர்கள் இருவரது விளக்கமறியலை மேலும் நீடித்து ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றைய தினம் குறித்த வழக்கானது ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எம் எம்.றியால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துகொள்ளப் பட்டபோதே அவர் மேற்படி உத்தரவை பிறப்பித்திருந்தார்.

கடந்த ஜனவரி மாதம் ஊர்காவற்றுறை பகுதியில் குறித்த கர்ப்பிணி பெண் வீட்டில் தனித்திருந்தபோதே இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணையானது இடம் பெற்று வருகின்றது.

இந்நிலையில் நேற்றைய வழக்கு விசாரணையின் போது பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி சுகாஸ், நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சி.சி.ரி.வி காணொளியானது ஊர்காவற்றுறையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட காணொளியே என மன்றில் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியான திருக்குமார், இவ் வழக்கில் சந்தேகநபர்களது உடையில் காணப்பட்ட இரத்த மாதிரி தொடர்பாக பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்ட அறிக்கை இன்னமும் பொலிஸாரால் பெற்றுக் கொள்ளப் படவில்லை எனவும், மருதனார்மடம் பகுதியில் எடுக்கப்பட்ட சி.சி.ரி.வி காணொளி பகுப்பாய்வுக்கு அனுப்புவதில் பொலிஸார் அசட்டையீனமாக செயற்படுவதாகவும் மன்றிற்கு தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து இதற்கு பதிலளித்த நீதவான், வித்தியா வழக்கிலும் இரத்தம் உள்ளிட்ட மரபணு பரிசோதனை தொடர்பான அறிக்கை சமர்பிக்கப்படுவதில் தாமதிக்கப்பட்ட நிலையில் அதனை பரிசோதனை செய்த விஞ்ஞானியை கைது செய்ய முயற்சித்தபோதே அவ் வழக்கின் அறிக்கை கிடைக்கப்பட்டது என குறிப்பிட்டார்.

மேலும் இவ் வழக்கு தொடர்பாக அடுத்த தவணையின்போது இரத்த பரிசோதனை அறிக்கை தொடரபாகவும் சி.சி.ரி.வி காணொளி தொடர்பாகவும் கட்டளை ஒன்றை பிறப்பிப்பதாக தெரிவித்துடன் வழக்கின் விசாரணையை எதிர்வரும் 18ஆம் திகதி வரை ஒத்தி வைத்ததுடன் அதுவரை இரு சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (ம-4)

## மன்னார் கடற்படையினருக்கும் மீனவருக்கும் இடையே முறுகல்

(மன்னார்)

மன்னார் தாழ்வுபாட்டு கடலில் மீன் பிடிக்கச் சென்ற சுமார் 25 மீனவர்களை கடற்படையினர் கைது செய்தமையால் அந்தப் பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

மீனவர்களின் கைதினை அடுத்து கடற்படையினருக்கும், தாழ்வுபாட்டு கிராம மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

மன்னார் தாழ்வுபாட்டு கிராம மீனவர்கள் நேற்றைய தினம் காலை வழமை போல் மீன் பிடிக்க கடலுக்குச் சென்றுள்ளனர்.

இவர்கள் பாரம்பரிய தொழிலாக கடந்த 30 வருடங்களுக்கு மேலாக சுருக்கு வலையினை பயன்படுத்தியே மீன் பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தொழிலுக்குச் சென்ற தாழ்வுபாட்டு மீனவர்களில் 5 படகுகளைச் சேர்ந்த 25 மீனவர்களை கடற்படையினர் கடலில் வைத்து கைது செய்து தாழ்வுபாட்டு கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

மீனவுர்கள் கைது செய்யப்பட்டதனை அறிந்து கொண்ட கிராம மக்கள் ஒன்றுதிரண்டு தாழ்வுபாட்டு கடற்கரை முகாமை நோக்கி சென்று எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.

குறித்த கிராமத்தைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் கடற்படை முகாம் அமைந்துள்ள பகுதியில் சூழ்ந்து கொண்டமையினால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து மன்னார் பொலிஸார் மற்றும கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்து மக்களுடன் கலந்துரையாடினர். (ம-4)

## நெல்லியடியில் நேற்று இருவரிடம் வழிப்பறி!

(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியில் நேற்று இரண்டு இடங்களில் வழிப்பறி இடம் பெற்றுள்ளதாக நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயத்திற்கு அருகாமையில் முற்பகல் வேளை வீதியால் சென்ற வயோதிபப் பெண்ணை தள்ளிவிட்டு 21/2 பவுண் தங்கச் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை விக்னேஸ்வரா வீதியில் நடந்து வந்த முதியவரிடமிருந்து ஒரு தொகைப்பணம் பறிக்கபபட்டுள்ளது.

இரண்டு சம்பவங்களிலும் மோட்டார் சைக்கிளில் வந்தோரே தமது கைவரிசையினைக் காட்டியுள்ளனர். இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)

## ஒளிவிழாவும் மொழித்தினமும்

(யாழ்ப்பாணம்)

யாழ். அத்தியார் இந்துக் கல்லூரியின் ஒளிவிழாவும் GIZ நிறுவன வழிகாட்டல் EJC செயற்றிட்டத்தின்கீழான மொழித்தினம் இன்று முற்பகல் 10 மணியளவில் கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி முதல்வர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். புனித மரியன்னை பேராலயத்தின் உதவப்பங்குத்தந்தை ஆர்.ஓ. ரேறன்ஸ், சிறப்பு விருந்தினராக யாழ்.வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.சுப்பிரமணியம் கலந்து கொள்வார். (இ)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**நலிவு காணும் குழந்தைக்கு செய்யப்படும் வேள்வி யாது?**

பாலாரிஷ்டம் போன்ற நோயினாலும் கிரக தோஷத்தாலும் குழந்தை நலிவு காணும். அப்பொழுது இந்த வாழ்நாள் வேள்வியை செய்யலாம். அல்லது பிறந்த முதலாண்டு நிறைவிலும் இவ்வேள்வியைச் செய்யலாம். இந்த வேள்வியை செய்யும்போது கணபதி பூஜை, நவக்கிரக பூஜை, அம்மையப்பர் பூஜை செய்து அவிநாசி பதிகம் பாடுவது சிறப்பு. (தொடரும்)

JSAC
பெண்களுக்கெதிரான
வன்முறை ஒழிப்புச் செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16
2017
பாரபட்சமற்ற எண்ணங்களை வெளிப்படுத்தி நாளைய விடியலுக்காய் இன்றே ஒன்றிணைவோம்.
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- நம்முடைய உடலையும், அறிவையும், ஞானத்தையும் பலவீனமாக்கும் எதையும் விஷம் என ஒதுக்கிவிட வேண்டும்.
- பிறருடைய தவறு எவ்வளவு கெட்டதாக இருந்தாலும் அதுபற்றி பேசக்கூடாது. அப்படிச் செய்வதனால் நீங்கள் அவனுக்கு கேடு செய்வதுடன், உங்களுக்கும் கேடு ஏற்படுத்திக் கொள்வீர்கள்.
- தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான், அவனே உலகில் நன்றாக வாழ தகுதியுள்ளவன்.
- எதிலும் பரபரப்பு தேவையில்லை, ஆனால், சுறுசுறுப்பு எப்போதும் தேவை.
- கீழ்ப்படிதல், முயற்சியுடைமை, செயலாக்கம் ஆகிய மூன்றும் இருந்தால், ஒருவன் வெற்றி பெற்று முன்னேறுவதை எதனாலும் தடுக்க முடியாது.
- உலகத்தில் உயர்ந்த செயல்கள் அனைத்தையும் சாதித்தவர்கள் உங்களையும் என்னையும் போன்று மனிதர்களே. வீரம் மட்டுமிருந்தால் நம்மைப் போன்ற மனிதர்கள் எதையும் செய்து முடிக்க முடியும்.
- இயந்திரங்கள் மனித சமூகத்திற்கு சுகத்தைக் கொடுத்தவையுமல்ல, கொடுக்கப் போவதுமில்லை.

# பொன். விபுலாநந்தன் கூடைப்பந்தாட்டம் சம்பியன் ஆனது சென்றலைட்ஸ் அணி



பொன்.விபுலாநந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில், ஜொலிஸ்ரார்ஸ் அணியை வீழ்த்தி சென்றலைட்ஸ் அணி சம்பியனாகியது.

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், மறைந்த பொன்.விபுலாநந்தன் ஞாபகார்த்தமாக, வடமாகாண கூடைப்பந்தாட்ட கழகங்களுக்கிடையில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடத்தப்பட்டு வந்தது.



ஜொலிஸ்ரார்ஸ், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், வவுனியா கழகம், பற்றீசியன், சென்றலைட்ஸ், ஸ்கந்தா ஆகிய 7 அணிகள் இந்தச் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றின. அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் இடம்பெற்றன. ஒவ்வொரு பிரிவிலும், முதலிரு இடங்களைப் பெற்ற அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன. அந்த வகையில், பிரிவு ஏ யிலிருந்து ஜொலிஸ்ரார்ஸ் மற்றும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணிகளும், பிரிவு பி யிலிருந்து பற்றீசியன் மற்றும் சென்றலைட்ஸ் அணிகளும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

முதலாவது அரையிறுதியில் ஜொலிஸ்ரார்ஸ் அணியும் பற்றீசியன் அணியும் மோதின. இதில் ஜொலிஸ்ரார்ஸ் அணி, 61:49 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இரண்டாவது அரையிறுதியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணியும் மோதின. இதில் சென்றலைட்ஸ் அணி, 74:54 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இறுதிப்போட்டி 3 ஆம் திகதி இரவு மின்னொளியில் நடைபெற்றது. முதல் கால் பாதியாட்டத்தில் 19:13 என சென்றலைட்ஸ் அணி முன்னிலைபெற்றது. இரண்டாவது மற்றும் மூன்றாவது கால்பாதியாட்டங்களிலும் முறையே 17:12, 16:12 என சென்றலைட்ஸ் அணி முன்னிலை பெற்றது.

நான்காவது இறுதிப்பாதியான கால்பாதியில் 14:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஜொலிஸ்ரார்ஸ் அணி முன்னிலை பெற்றது.

முடிவில் சென்றலைட்ஸ் அணி, 61:51 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்று, சம்பியனாகியது.

சென்றலைட்ஸ் அணி சார்பாக கிசாந்தன் 18 புள்ளிகளையும், சசீந்திரன் 15 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தனர்.

ஜொலிஸ்ரார்ஸ் அணி சார்பாக, கபிலன் 12 புள்ளிகளையும், சிவதாஸ் 11 புள்ளிகளையும் பெற்றுக்கொடுத்தனர்.

இறுதிப்போட்டியின் நாயகனாக சென்றலைட்ஸ் அணியின் பாலகிருஸ்ணன் சசீந்திரன் தெரிவு செய்யப்பட்டதுடன், தொடர்நாயகனாக ஜொலிஸ்ரார்ஸ் அணியின் மோகனேஸ்வரன் கபிலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சிறந்த வீரர்கள் மற்றும் வெற்றிபெற்ற அணிகளுக்கான வெற்றிக் கிண்ணங்களை பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் வழங்கி வைத்தார். (க-26)



கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவனும் இலங்கை விமானப்படை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சரவணநாதன் அமலராஜ் சாரணிய அதி உயர் விருதான பேடன் பவல் விருதினை பெற்றுக் கொண்டார். இவருக்கான விருதினை பிரதம சாரணிய ஆணையாளர் கொழும்பு சாரணிய தலைமைஅலுவலகத்தில் வைத்து வழங்குவதை படத்தில் காணலாம்.

# போட்டியை நிறுத்தக் கோரிய இலங்கை பொறுமையிழந்து மட்டையை எறிந்த ஹோலி

டில்லியில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை வீரர்கள் போட்டியை பாதியில் நிறுத்த வேண்டும் என்று பிரச்சினை செய்ததாக சர்ச்சை எழுந்துள்ளது.

இந்தியா மற்றும் இலங்கை அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டி டில்லியில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலில் ஆடிய இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்பிற்கு 536 ஓட்டங்கள் எடுத்து டிக்ளேர் செய்தது.

இதைத் தொடர்ந்து முதல் இன்னிங்ஸை துவங்கிய இலங்கை அணி 2 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 131 ஓட்டங்கள் எடுத்தது.



டில்லியில் தற்போது மிகவும் மோசமான அளவிற்கு புகை நிலவி வருகிறது.

இதனால் இப்போட்டியின் போது இலங்கை வீரர்கள் அனைவரும் முகத்தை மாஸ்கால் மூடிக்கொண்டு விளையாடினார்கள்.

அதேபோல் களத்தில் இருந்த நடுவர்களும் முகத்தை மூடிக்கொண்டு விளையாடினார்கள். இந்த மோசமான புகை காரணமாக இலங்கை அணியின் வீரர்கள் நடுவரிடம் போட்டியை நிறுத்தும்படி முறையிட்டனர். ஆனால் நடுவர்கள் இதற்கு சம்மதிக்கவில்லை.

இந்திய அணி மிகவும் வலுவாக இருந்ததன் காரணமாகவே, இலங்கை வீரர்கள் இதுபோன்ற செயலில் ஈடுபட்டதாகவும், போட்டியை நிறுத்த முயற்சி செய்ததாகவும் கூறப்படுகிறது.

இலங்கை அணியின் பிட்னஸ் அறிவுரையாளர் நடுவரிடம் இது குறித்து முறையிட்டார். வீரர்களுக்கு சுவாசக் கோளாறு ஏற்பட்டுள்ளதாக கூறியதால், போட்டி சுமார் அரை மணி நேரம் தடைப்பட்டது.

இப்படி இலங்கை வீரர்கள் இடையில் போட்டியை நிறுத்த வேண்டும் என்று கூறியதால், பொறுமையாக இருந்த ஹோலி ஒரு கட்டத்தில் பேட்டை ஸ்டம்பிற்கு அருகே தூக்கி வீசினார்.

இதைத் தொடர்ந்து ஹோலி ஆட்டமிழந்ததால் இந்திய அணி டிக்ளேர் செய்வதாக அறிவித்தது. (க)

# புதிய சாதனை படைத்தார் சுழல்பந்து வீச்சாளர் பெரேரா



இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் பெரேரா புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

இலங்கை - இந்தியா இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி டில்லியில் நடைபெற்று வருகிறது.

இதில் முதல் இன்னிங்சில் இந்தியா 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 536 ஓட்டங்கள் எடுத்தது.


இதில் இந்திய துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவான் விக்கெட்டை சுழற்பந்து வீச்சாளர் பெரேரா வீழ்த்தினார்.

இது அவரின் நூறாவது விக்கெட்டாகும். இதன் மூலம் இலங்கை அணி சார்பில் வேகமாக 100 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் என்ற பெருமையை பெரேரா பெற்றுள்ளார்.

இலங்கை ஜாம்பவான்களான முரளிதரன், சமிந்த வாஸ் போன்றோர் கூட இதைச் செய்யாத நிலையில் வெறும் 25 போட்டிகளில் விளையாடி பெரேரா இந்தச் சாதனையை படைத்துள்ளார். (க)

# விளையாடத்தான் இங்கு வந்துள்ளோம் அதை நிறுத்தும் நோக்கம் எமக்கில்லை

## இலங்கை பயிற்சியாளர் பதிலடி



இந்தியா மற்றும் இலங்கை அணிகள் மோதி வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டி, காற்று மாசு காரணமாக தடைப்பட்டது. இந்நிலையில், வீரர்களின் பாதுகாப்பு முக்கியம் என இலங்கை பயிற்சியாளர் நிக் போதாஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியா: இலங்கையின் மூன்றாவது டெஸ்ட் போட்டியில், காற்று மாசு காரணமாக ஆட்டம் சில நேரம் பாதிக்கப்பட்டது. இலங்கை வீரர்களில் சிலர் முகக்கவசம் அணிந்து கொண்டு தொடர்ந்து விளையாடினர்.

ஆனால், இலங்கை வீரர்கள் சிலருக்கு மூச்சுத் திணறல் ஏற்படவே, முன்னதாகவே இரண்டாம் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், இலங்கை பயிற்சியாளர் நிக் போதாஸ் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'டில்லியில் காற்று மாசு பற்றி எல்லோருக்கும் தெரியும். வீரர்கள் ஆடுகளத்தில் மூச்சுவிட சிரமப்பட்டனர்.

வழக்கமான சீதோஷ்ண நிலை இல்லாததால் வீரர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். உடை மாற்றும் அறைக்கு திரும்பிய லக்மல், கமகே, தனஞ்செயா ஆகியோர் தொடர்ந்து வாந்தி எடுத்துக்கொண்டே இருந்தனர். டொக்டர், வைத்தியர்கள் அவர்களுக்கு சிகிச்சை அளித்தனர். இந்த பிரச்சினை கிரிக்கெட்டிற்கு புதிது. அதனால் என்ன செய்ய வேண்டும் என்பதனை நடுவர்களிடமே விட்டு விட்டோம். நாங்கள் இங்கு கிரிக்கெட் விளையாடத்தான் வந்துள்ளோம். அதை நிறுத்தும் நோக்கம் எங்களுக்கு இல்லை. மேலும், வீரர்களின் பாதுகாப்பும் முக்கியம் என தெரிவித்துள்ளார். (க)

## யாழில் உள்ள தனியார்...

நிறுவனம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த 37 லட்சம் ரூபாய் பணம் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டதுடன் நிறுவனத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராக்களும் திருடர்களால் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பில் குறித்த நிறுவனத்தில் பணியாற்றும் முகாமையாளர் உட்பட பணியாளர்கள் அனைவரும் யாழ் பொலிஸ்நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் றக்கா வீதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த 37 லட்சம் ரூபாய் பணம் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளதுடன் நிறுவனத்தில் பொருத்தப்பட்டிருந்த அனைத்து கமராக்களும் கழற்றிச் செல்லப்பட்டன. வழமை போல் நேற்று வேலைக்கு திரும்பிய பணியாளர்கள் தமது கடமைகளை ஆரம்பித்திருந்தனர்.

அப்போது நிறுவனத்தின் பணிப்பாளர் நேற்று குறித்த நிறுவனத்துக்கு வந்துள்ளார். அவர் பணத்தை காணவில்லை என அறிந்து கொண்ட போதே மேற்படி பணம் திருட்டு போயுள்ளதை அனைவரும் அறிந்துள்ளனர்.

உடனடியாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து நிறுவனத்தின் முகாமையாளர் உட்பட பணியாளர்கள் அனைவரும் யாழ் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டதுடன் அனைவரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (மு-9)

## திடீர் சுகவீனம்...

பகுதியில் பரு ஒன்று காணப்பட்டுள்ளது, குழந்தை தொடர்ச்சியாக அழுதுகொண்டிருந்த காரணத்தால் நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர், அங்கிருந்து மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக நேற்று அதிகாலை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. இருப்பினும் காலை 6 மணிக்கு சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு இருதய வருத்தம் இருந்ததாகவும் கிருமித்தொற்று ஏற்பட்டதாலேயே மேற்படி குழந்தை உயரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-9)

## உள்ளூராட்சி எல்லை...

மேலும் இது குறித்து தடையுத்தரவு ஒன்றினைப் பிறப்பிக்குமாறு தெரிவித்து குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தகுதியுள்ள உதவி...

கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்வாறு இணைத்துக்கொள்ளப்படும் உதவி ஆசிரியர்களை 31,060 ரூபா சம்பளத்துடன் உள்வாங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் ஆசிரிய தொழிலை கௌரவமான தொழிலாக மாற்றுவதற்கும் தற்போதைய அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 2014ஆம் ஆண்டில் முறையற்ற விதத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட உதவி ஆசிரியர்களுக்காக 6,000 ரூபா மாத்திரமே ஊதியமாக வழங்கப்பட்டதாகவும் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் தான் முன்னின்று அமைச்சரவைப் பத்திரம் மூலம் குறித்த சம்பளத்தை 10,000 வரை அதிகரித்ததாகவும் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் மேலும் குறிப்பிட்டார். (ம)

## மீசாலையில் வாள்...

இரவு 7:30 மணியளவில் இடம்பெற்றது. வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

# ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் ஜனநாயகத்திக்கு எதிரானவை-ரணில்

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றச் செயல்கள், ஜனநாயகத்திற்கு எதிரானவையாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஆரம்பமான ஊடகவியலாளர்களுக்கு ஏற்படும் வன்முறைகளுக்கு எதிரான சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அத்துடன், அரசாங்கம் இலங்கையில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்துவருகின்றது எனக் குறிப்பிட்டுள்ள பிரதமர், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்றிட்டங்கள் குறித்து இலங்கை பாராட்டுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

2005, 2015 காலப்பகுதியில் இலங்கையில் 9 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். லசந்த விக்கிரமதுங்க இதில் ஒருவராவார். மேலும் பல ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கடத்தல் சம்பவங்களும் இந்த காலப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. கடந்த கால ஆட்சியின்போது, ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதற்கும், மௌனிக்கச் செய்வதற்கும், குரூரமான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. சில ஊடகங்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்கின என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார் என அரசாங்கத் தகவல் திணைக்கள செய்திகள் கூறியுள்ளன. (ம)

வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (ம-4)

## சு.க அரசிலிருந்து...

யாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் வெளியேறப் போவதாக வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது எனவும் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கண்டி பன்வில ராஜசிங்க மத்திய கல்லூரியில் தேசிய கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் நேற்று தினம் நடமாடும் சேவை ஒன்று இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவையில் கலந்து கொண்ட அமைச்சர் மனோ கணேசன் தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதியை விமர்சிப்பதற்கு கூட உரிமையுள்ளதாக தெரிவித்தார். (ம)

## உள்ளூராட்சி தேர்தலை...

ராட்சி சபைகளுக்கான தேர்தல் நீண்ட காலமாக நடத்தப்படவில்லை. இது மக்களின் உரிமையைப்பறிக்கும் செயற்பாடு. எனவே இனியும் தாமதப்படுத்தாது உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான உத்தரவை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்று வழங்கவேண்டும் என்று பப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் றோஹன ஹெட்டியாராச்சி சார்பாக முன்னிலையாக சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

மனுவின் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்க உத்தரவிட்ட நீதியரசர்கள் குழாம், மனு மீதான விசாரணையை பெப்ரவரி 27 ஆம் திகதிவரை ஒத்திவைத்தார். (ம)

# யாழ்-கொழும்பு சேவையில் ஈடுபட்ட பேருந்துகள் பொலிஸார் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-கொழும்பு சேவையில் ஈடுப்பட்ட பேருந்துகள் அனைத்தும் நேற்றிரவு திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

கொழும்பு நோக்கிப் பயணிக்கும் சகல பேருந்துக்களையும் யாழ்ப்பாணம் ஏ9 வீதியில் செம்மணி யாழ்.வளைவுப் பகுதியில் வழிமறித்த பொலிஸார், பயணிகளின் பயணப் பொதிகள் உள்பட பேருந்தைத் துருவி துருவி சோதனையில் ஈடுபட்டனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கையால் பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்தே பயணித்தனர்.

யாழ்ப்பாணம்-கொழும்பு சேவையில் ஈடுபடும் பேருந்து ஒன்றில் பெருமளவு கஞ்சா போதைப்பொருள் கடத்தப்படுவதாக இரகசியத் தகவல் கிடைத்தது. அதனை முறியடிக்க பொலிஸார் வீதிச் சோதனையில் அமர்த்தப்பட்டனர். அதனால் ஒவ்வொரு பேருந்தும் சோதனைக்குட்படுத்தப்படுகிறது என்று பொலிஸார் கூறினர். (ம)

## பிரபாகரனிடம் மண்டி...

பக்ஷ தெரிவித்துள்ளார்.

பதுளை வின்சன்ட் டயஸ் மைதானத்தில் நேற்று மாலை பொதுஜன பெரமுனவின் முதலாவது கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மகிந்த இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் மண்டியிடாத நான், சமகால அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் முன்னிலையில் மண்டியிடப் போவதில்லை என மகிந்த குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் கடும்போக்கு மற்றும் அதிகார போதையில் செயற்படுகிறது. அவ்வாறு செயற்பட வேண்டாம் என ஆலோசனை வழங்கியுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் கூட்டத்தில், கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (ம)

## மேல் நீதிமன்ற...

அடிப்படையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் 75 பேர் மட்டுமே நாட்டில் சமகாலத்தில் சேவையாற்ற முடியும். அவர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் உள்ளது.

இந்த நிலையில் 110 மேல் நீதிமன்ற நீதிபதிகளாக அதிகரிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தேங்கிக்கிடக்கும் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ளடங்கிய வழக்குகளை விசாரிக்க சிறப்பு மேல் நீதிமன்றங்களை ஜனவரியில் அமைக்கவுள்ளதாக நீதி அமைச்சர் தலதா அத்துக்கொரல தெரிவித்திருந்தார். (ம)

## கொக்குவில்...

மாக உள்ளது என்பதை உறுதி செய்த யாழ்ப்பாணப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அந்த விடயத்தை உடனடியாக சீர் செய்வித்ததுடன் குறித்த எரிபொருள் நிலையத்தின் சேவை வழமைக்குத் திரும்பியது.

இதேவேளை குறித்த எரிபொருள் நிலையத்தின் மீது எவரும் பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை என்பதையும் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையம் உறுதி செய்துள்ளது. (ம)


அகரம் கல்வி நிலையம்
AHARAM EDUCATION CENTRE
மல்லாகம் கொக்குவில்
தமிழ் மொழிமூல மற்றும் English Medium வகுப்புக்கள் நடைபெறுகின்றன

புதிய கல்வியாண்டு - 2018

| K. K. S வீதி, மல்லாகம் | | K. K. S வீதி, கொக்குவில் (தேவாலய வீதி) | |
|---|---|---|---|
| தரம் 6, 7, 8 | தரம் 9, 10, 11 | தரம் 6, 7, 8 | தரம் 9, 10, 11 |
| 05. 12.2017 செவ்வாய்க்கிழமை மாலை 3.30 இற்கு ஆரம்பமாகின்றது | 06. 12.2017 புதன் கிழமை மாலை 3.30 இற்கு ஆரம்பமாகின்றது | 06. 12.2017 புதன் கிழமை மாலை 3.30 இற்கு ஆரம்பமாகின்றது | 05. 12.2017 செவ்வாய்க்கிழமை மாலை 3.30 இற்கு ஆரம்பமாகின்றது |

குறிப்பு : தரம் 6, 7, 8 இற்கு
தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம், புவியியல், குடியுரிமை, சுகாதாரம் ஆகிய பாடங்கள் தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் சமாந்தர நேரசூசியில் நடைபெறுகின்றன.

தரம் 9, 10, 11 இற்கு
தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம்,, சைவசமயம் ஆகிய பிரதான பாடங்களும் தமிழ் இலக்கிய நயம், ஆங்கில இலக்கியம், ICT(இரு மொழி மூலம்), வர்த்தகம்(இரு மொழி மூலம்) ஆகிய தொகுதிப்பாடங்களும் நடைபெறுகின்றன.

(5577)
Designed By Jathu Fx

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஒளிமிகு எதிர்காலம்"

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

## க.பொ.த(உ/த) 2018 உயிரியல் மாதாந்தத் தொடர் பரீட்சை – ஐப்பசி 2017

| அனு.அ.இல | முழுப்பெயர் | பாடசாலை | புள்ளி | நிலை |
|---|---|---|---|---|
| J/2298/B | கஜானா சிவயோகராசா | J/K.H.C | 90 | 1 |
| J/2149/B | அதிரை மணிவண்ணன் | J/M.L.C | 86 | 2 |
| J/2057/B | கிறேசியன் ஜெனோசன் | J/S.H.C | 86 | 2 |
| J/2085/B | கதிர்காமநாதன் சாயிந்தன் | J/K.H.C | 85 | 4 |
| J/2082/B | சிவகரன் பிரகாஸ் | J/K.H.C | 85 | 4 |
| J/2249/B | அபினயா சிறீதரன் | J/J.H.L.C | 83 | 6 |
| J/2334/B | பாஸ்கரன் பார்த்தீபன் | J/K.H.C | 81 | 7 |
| J/2153/B | ஆரணி துரைசிங்கம் | J/K.H.C | 80 | 8 |
| J/2552/B | சிறியதாஸ் துவாரகன் | J/K.H.C | 77 | 9 |
| J/2146/B | சௌயந்தி காயாரோகணன் | J/C.G.C | 76 | 10 |
| J/2384/B | ஜெரோம் சிவனேசன் | J/V.G.H.S | 74 | 11 |
| J/2660/B | கம்சிகா முத்துலிங்கம் | J/V.G.H.S | 74 | 11 |
| Mu/2737/B | திலக்சனா அமிர்தலிங்கம் | Mu/C.M.V | 74 | 11 |
| J/2110/B | டுஷாரா தருமரெத்தினம் | J/C.G.C | 73 | 14 |
| J/2294/B | றிஸ்மி லெஸ்லி பாஸ்கரதேவன் | J/V.G.H.S | 73 | 14 |
| J/2172/B | இலக்சிகா நாகேந்திரன் | J/M.L.C | 69 | 16 |
| J/2357/B | கெமிஸ்ரா சந்திரசேகரன் | J/K.H.C | 69 | 16 |
| J/2295/B | யுவெதா ஸ்ரீதத்தாத்ரேயநேசன் | J/V.G.H.S | 69 | 16 |
| Mu/2290/B | கேதாரணி ஜெகராஜன் | Mu/P.M.V | 68 | 19 |
| J/2679/B | பிரணவி கியூ லோறன்ஸ் ரேனாறன்ஸ் | J/K.H.C | 67 | 20 |
| J/2247/B | தேனுகா கிருபாகரன் | J/V.G.H.S | 67 | 20 |
| J/2282/B | லதாங்கி ரகுபதி | J/V.G.H.S | 65 | 22 |
| Mu/2694/B | அக்ஷயா ஸ்ரீகுமார் | Mu/C.M.V | 62 | 23 |
| J/2396/B | யூடினி ரவிச்சந்திரன் | J/V.G.H.S | 61 | 24 |
| J/2091/B | விஜித்திரா றெமீந்திரன் | J/I.C.M.V | 61 | 24 |
| J/2379/B | எரின் ரோபிற்றா ரவீந்திரன் | J/P.G.H.S | 60 | 26 |
| J/2081/B | நவராசா சங்கீர்த்தனன் | J/K.H.C. | 60 | 26 |

**S.பொன்திவாகரன்**

(கி-578)


# கரையோரப் பிரதேசங்க...

காங்கேசன்துறை வரை திருகோணமலை ஊடான கடற்பரப்பில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யலாம்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு கடல் பரப்பில் பொத்துவிலிலிருந்து புத்தளம் வரை திருகோணமலையூடாக, காங்கேசன்துறை மற்றும் மன்னார் ஆகிய கடற்பரப்பில் மணித்தியாலத்திற்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

இதேவேளை, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை கடல்பரப்பில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 55 கிலோமீற்றர் வேகத்திற்கும் அதிகமாக காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளையில் கடற்பரப்பில் மணித்தியாலத்திற்கு 70 முதல் 80 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் மீனவர்கள் மற்றும் கடலில் பயணிப்போர் இன்று 5 ஆம் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் வரை கடலுக்குச் செல்ல வேண்டாமென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, மீனவர்கள் இன்று 5ஆம் திகதி தொடக்கம் தெற்கு ஆந்திரா, வடதமிழகத்தின் ஆழ்கடல் பகுதிக்கு செல்ல வேண்டாம் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலச்சந்திரன் அறிவுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

# பணமோசடி தொட...

யாழ்ப்பாணத்தில் கொண்டாட்டங்களுக்கு கார்களை வாடகைக்கு வழங்குவதாக விளம்பரங்களை வெளியிட்டு பலரிடம் பல இலட்சம் ரூபாய் பணத்தை சந்தேகநபர் மோசடி செய்துள்ளார் என பாதிக்கப்பட்டவர்கள் முறையிட்டுள்ளனர்.

முறைப்பாட்டின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே சந்தேகநபரைக் கைது செய்தோம் என்று பொலிஸார் கூறினர். (ம)


*O/L, A/L எழுதிய இளைஞர், யுவதிகளே!*
எமது கிளைகளுக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசத்தில் இருந்து சர்வதேச நிறுவனமான எமது நிறுவனத்தில் பணிநிலை வெற்றிடங்கள் உள்ளன.
- வயதெல்லை 18 - 28
- தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு
- அனுபவம் அவசியமற்றது.
- Supervisor, Administration, Ass.Manager

தொடர்புகளுக்கு:
**0766781042, 0774083273**
1576)

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**
11kg மேற்பட்ட பொதிகளுக்கு 1kg க்கான கட்டணம்
UK – 550/-, FRANCE – 700/-, GERMANY – 650/-, SWISS – 750/-, CANADA – 950/-
மற்ற நாடுகளுக்கும் விசேட கட்டணம் உண்டு.
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும்
(1575)
**திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்**
- 216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். கிளிநொச்சி,
- 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, மன்னார்.
- 18, பிரதான வீதி, நெல்லியடி. 0777554528

DHL aramex SKYNET WORLDWIDE EXPRESS

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af **பிரெஞ்சு மொழி**
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.**www.ambafrance-lk.org**



**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
(C-594)

**English Classes**
Spoken English/ Group Class / Personal Class
O/L, A/L மாணவர்கள் மற்றும் தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் அனைவருக்குமான நவீனமுறையிலான ஆங்கிலக் கற்கைநெறிகள் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
**தொடர்புகளுக்கு: 077 448 1790**
1574)

# ICT
## தரம் 10
**தமிழ், ஆங்கில மொழி மூலம்**
**ஆரம்பம் 09-12-2017**
**மாலை 5.30**

**எமது சேவைகள்:**
- கற்றல் கையேடுகள், மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் பயிற்சி வினாத்தாள்கள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு அலகு முடிவிலும் பரீட்சைகள் நடாத்தப்படும்.
- பரீட்சையில் உயர்புள்ளி பெறும் மாணவருக்கு குறித்த மாதக் கட்டணத்திலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.
- பல்லூடக எறிகை, நிகழ்த்துகை மூலமான கற்பித்தல்.

**பெற்றோருக்கு:**
- அலகுப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் தவறாது தோற்றுதல் வேண்டும்.
- தகுந்த காரணமின்றியோ / முன்னறிவித்தலின்றியோ பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்கள் வகுப்புக்களிலிருந்து இடைநிறுத்தப்படுவார்கள்.
- மாணவர்களின் நாளாந்த வரவொழுங்கில் அதிக கரிசனை எடுக்கவும்.

(1549)

**Evershine Education Centre**
# 123, Brown Road, Jaffna

ஆசிரியர் :
**S.Gowsigan** *(B.Tech – Network Tech.)*

தொடர்புகளுக்கு:
0773784053
gowsivembadi@gmail.com

APEX TRAVELS



- சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- இந்தியா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான விசாக்களை இங்கிருந்தவாறே விண்ணப்பிக்கலாம்.
- ஏனைய நாடுகளுக்குமான விசா உதவிகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். *தொடர்புகளுக்கு :*

**077 350 4700, 021 222 8008**
**இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**
(கி-592)

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**
- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்து பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு ... மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-550)



**UK-550/=Kg**
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
**V2 TRAVELS-0768226240**
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

# சயன்ஸ் அக்கடமி
நல்லூர் - அரியாலை.

## புதிய கல்வியாண்டு - 2018
**தரமான கல்வியுடன் ஆரம்பமாகின்றது!**

**40 வருடாங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய கல்வியாண்டில் மாணவர்களை இணைத்துக்கொள்கின்றது.**
நிகரற்ற சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பின்கீழ்
முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில்

| தமிழ்மொழி மூல வகுப்புக்கள் தரம் 6 முதல் O/L வரை | English Medium Classes Gr. 6 - O/L |
|---|---|

**வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப்பிரிவு**
**வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு**
வெற்றித்தேர்வு வளவாளர்களுடன்
யாழ். முன்னணி ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலில்
**தரம் I முதல் தரம் 5 வரை**

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**
**06.12.2017**
**புதன்கிழமை**
**பி.ப 4.00 மணி**

**அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**
(கி-577)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.